www.tamilarangam.net

THAYAGAM

7.1.94

உண்மை:5 தேடல்:26+27

75¢

# தாயகம்

# புலிகள் விரும்பினல் பேச்சுவார்த்தைக்கு தயார்

## அரசியல் தீர்வு காணுவதே நோக்கம் ஜனதிபதி பேட்டி

வடக்கில் வெள்ளத்தினல் தொற்றுநோய் அபாயம்

எம்பிலிப்பிட்டியவில் பாரிய புதைகுழி கண்டுபிடிப்பு

யுத்தத்தை வெல்ல முடியும் புதிய தளபதி நம்பிக்கை

தொழிலாளர் காங்கிரஸில் இருந்து செல்லச்சாமி வெளியேற்றம்

மட்டக்களப்பில் சுயேச்சை வேட்பாளர் புலிகளால் கொலை

குடிவரவு மோசடிக் குற்றச்சாட்டில் பெண்மணி கைது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
nிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru

Niru

# தரத்தின் சின்னம்

# நிரு பிராண்ட்®

# Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்
Niru Brand® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை
உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

Niru Enterprises Inc,

**Tel:(416) 299-4202**

**நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன. உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்**

www.tamilarangam.net

Second class mail Registration No:8435



# தாயகம்
'உண்மையைத் தேடி'

## அரசியல் தீர்வு காணத் தயார் ஜனாதிபதி பேட்டி

புலிகள் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருந்தால் அவர்கள் என்ன பேசப்போகிறார்கள் என்பது குறித்து தனக்கு தெரிவித்தால் அது குறித்து பேச்சுவார்த்தை நடத்த தாம் தயார் என்றும் வடக்கு கிழக்கு பிரச்சனைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு தாம் தயார் என்றும் இந்த வருடம் அதற்கே முக்கியத்துவம் கொடுக்கப் போவதாகவும் ஜனாதிபதி விஜேதுங்க தெரிவித்திருக்கிறார்.

இலங்கையின் ஐக்கியத்தை விட்டுக் கொடுக்காமல் அதிகாரப் பரவலாக்கத்திற்கு தாம் தயாராக இருப்பதாகவும் கூறிய அவர் எதிர்வரும் தேர்தல்களில் தானும் ஐ.தே.கட்சியும் வெற்றி பெறுவார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். கொழும்பில் வெளிவரும் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே ஜனாதிபதி மேற்சொன்ன கருத்துக்களை கூறியிருந்தார். சமீப காலங்களாக இலங்கையில் இனப்பிரச்சனை அல்ல, பயங்கரவாதப் பிரச்சனையே இருககிறது என்று ஜனாதிபதி கூறிவருகிறார்.

அரசியல் தீர்வுக்கு தாம் தயார் என்றும் தங்களது இராணுவத்தினர் அப்பாவி மக்களைப் பாதுகாக்கவே அங்கிருக்கிறார்கள் என்றும் கூறிய அவர் எல்லா இனப்பிரச்சனைகளும் திருப்தியாக தீர்க்கப்பட்டுள்ளன என்றும் கூறினார். மாகாண சபைகள் மூலம் முன்னெப்போதுமில்லாதவாறு அதிகாரப் பரவலாக்கம் நடைபெற்றிருப்பதாகவும் இலங்கையின் இறைமை, ஐக்கியம் போன்ற விடயங்களில் எந்த வித விட்டுக் கொடுப்பும் இருக்காது என்றும் அவர் மேலும் கூறினார்.

இன்னும் அதிகாரப் பரவலாக்கம் பற்றி சிந்திக்க நான் தயார், ஆனால் அந்த பரவலாக்கம் வடக்கு, கிழக்குக்கு மட்டும் மட்டுபடுத்தப்படக் கூடாது, எல்லா பிரஜைகளும் சம உரிமை, அதிகாரம் சலுகைகளைப் பெற வேண்டும், இரண்டு மூன்று பிரிவுகளாக பிரஜைகளை பிரிக்க விடமாட்டேன், சிறுபான்மையினரை மேன்மையானவர்களாயும் பெரும்பான்மையினரை இரண்டாந்தரப் பிரஜைகளாகவும் ஆக்க நான் சம்மதிக்க மாட்டேன்.

சிலர் இதை இனப்பிரச்சனை என்கிறார்கள், நான் சொல்கிறேன் இது இனப்பிரச்சனை அல்ல. மற்ற இடங்களிலும் தமிழர்கள் அடக்கப்பட்டால், வெளியேற்றப்பட்டால் அவ்வாறு சொல்ல முடியும். ஆனால் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் தமிழர்கள் சுதந்திரமாக வாழ்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும், பயங்கரவாதக் குழுக்களை இவர்கள் ஒற்றுமையாக வாழ்வதை

ம.ப.பார்க்க..

## அடக்குமுறைச் சட்டம் வாபஸ்

அரசாங்கத்தையோ ஜனாதிபதியையோ அவமதிக்கும் துண்டுப்பிரசுரங்களை வெளியிடுவது சட்டவிரோதம் என்று அரசு அறிவித்த புதிய சட்டத்திற்கு கடும் எதிர்ப்புகள் தோன்றியதால் தற்போது அரசு அந்த சட்டத்தின் சில பகுதிகளைக் கைவிட்டுள்ளது. ஜனாதிபதியின் மீதோ அரசின் மீதோ வெறுப்பேற்படும் வகையில் கருத்துக்கள் வெளியிடுவதற்கு விடுக்கப்பட்ட தடைகளை சாக்காக வைத்து எதிர்க்கட்சிகளை அரசு அடக்க முயலலாம் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியிருந்தன. தற்போது அந்த விதிகள் கைவிடப்பட்டுள்ளன.

ஆயினும் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் துண்டுப்பிரசுரங்களை வெளியிடுவதோ, சுவரொட்டிகளை ஒட்டுவதோ தொடர்ந்தும் தடை செய்யப்படும். டிசம்பர் இருபதாம் திகதி முதல் இந்த சட்டங்கள் அமுலாகியிருந்தன.

## வடக்கில் குண்டுவீச்சு

வடக்கில் குடியிருப்புகள் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சில் ஐவர் கொல்லப்பட்டனர். அளம்பில் பகுதியில் இரண்டு விமானங்கள் ஆறு குண்டுகளை வீசியிருந்தன. இதில் பலர் காயமடைந்ததுடன் பல வீடுகளும் தகர்க்கப்பட்டன. அப்பகுதியில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்ததாலேயே தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவம் தெரிவித்திருந்தது. குடாநாட்டில் நடந்த குண்டுவீச்சுக்களில் நால்வர் கொல்லப்பட்டதுடன் 51 பேர் காயமடைந்தனர். வைத்திய நிலையம் உட்பட பல கட்டடங்களும் சேதமாகின. சாவகச்சேரிப் பகுதியிலேயே இந்தக் குண்டுவீச்சு நடைபெற்றது. கடந்த வாரம் வியாழக்கிழமை இந்த தாக்குதல் நடைபெற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மோசடிக் குற்றச்சாட்டில் பெண்மணி கைது

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பணிபுரிந்த கிறிஸ்டின் சிறிஸ்கந்தராஜா என்ற 62 வயதுப் பெண்மணி ஒருவர் கனடிய புலன்விசாரணைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அரச அலுவலகத்தில் பணிபுரிந்த இவர் மீது 128 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. பொலிசார் குடிவரவு விடயத்தில் நடைபெறும் மோசடிகள் சம்பந்தமாக நடத்திய விசாரணையின் பேரில் கைது செய்யப்பட்ட நால்வரில் இவரும் ஒருவர் என்று ரொறன்ரோ ஸ்டார் செய்தி வெளியிட்டுள்ளது. ஸ்காபரோ டவுன் சென்டரில் உள்ள வேலைவாய்ப்பு நிலையத்தில் பணி புரிந்த இவர் அங்கு நடைபெற்ற உள்விசாரணை காரணமாக பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார். தவருன ஆவணங்களை உருவாக்கியதாக நாற்பது குற்றங்களும் சமர்ப்பித்ததாக நாற்பது குற்றங்களும் குடிவரவு விசாரணையில் தவருன ஆவணங்களை சமர்ப்பிக்க உதவியதாக 23 குற்றங்களும் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன. கனடாவில் குறிப்பிட்ட வேலைகளைச் செய்வதற்கு யாருமில்லை என்று கருதும் பட்சத்தில் அந்த வேலைக்கு வேறு யாரையாவது வெளிநாடுகளில் இருந்து அழைக்க உதவும் விண்ணப்பங்கள் குறித்த மோசடிகள் குறித்தே விசாரணைகள் நடைபெற்றிருந்தன.

சமூக உதவிப் பணம் பெறுபவர்களுக்கு வேலைகளில் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் ஒன்றில் சுமார் இரண்டு லட்சம் டொலர்கள் வரை நடைபெற்ற மோசடி குறித்தும் இவருக்கு 21 குற்றங்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன.

ஜனாதிபதி..

விரும்பவில்லை. தற்போது பாதிக்கு மேற்பட்ட தமிழர்கள் வடக்கு கிழக்கு அல்லாத ஏழு மாகாணங்களில் வாழ்கிருர்கள். வடக்கில் எத்தனை சிங்களவர்கள் வாழ்கிருர்கள்? ஒருவருமில்லை. புலிகள் வடக்கில் முஸ்லிம்கள், சிங்களவர்கள் சுதந்திரமாக நடமாடுவதை விரும்பவில்லை.

தமிழர்களுக்கு பூர்வீக வாழிடம் இருக்கிறது. சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இல்லை. என்ன துயரமான நிகழ்வு? இதனுல் தான் நான் சொல்கிறேன், இது இனப்பிரச்சனை அல்ல, புலிகளால் நடத்தப்படும் பயங்கரவாத செயற்பாடு. அவர்கள் மற்றக் கட்சிகளை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அனுமதிக்கிருர்கள் இல்லை. இது பயங்கரவாதமில்லையா?

நாங்கள் சிறுபான்மையினரின் பிரச்சனைகளை தீர்க்க விரும்புகிருேம். தமிழை அரசகரும மொழியாக்கி மொழிப் பிரச்சனையை தீர்த்து விட்டோம். தோட்ட தொழிலாளர்களுக்கு பிரஜாவுரிமை கொடுத்தோம். சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் நாட்டின் எந்த இடத்திலும் ஒற்றுமையாக வாழவேண்டும் என விரும்புகிருேம்.

ஏன் புலிகள் தேர்தல் பற்றி பயப்படுகிருர்கள்? தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்ருல் ஏன் தேர்தலுக்கு பயப்பட வேண்டும்? அவர்கள் தாங்கள் தேர்தலுக்கு பயப்படுவதுடன் மற்றக் கட்சிகளும் தேர்தலில் பங்கு கொள்வதை தடுக்க முயல்கிருர்கள். இது சர்வதேச சமூகத்தினதும் தமிழ் மக்களினதும் கண்ணைத் திறக்க வேண்டும். புலிகள் தேர்லுக்கு மட்டும் பயப்படவில்லை, அவர்கள் சமாதானம் வடக்கிற்கு வருவதையும் விரும்பவில்லை. அவர்கள் தமிழ் மக்களை துப்பாக்கி முனையில் ஆளவே விரும்புகிருர்கள்.

இவ்வாறு அவர் தன் பேட்டியில் கூறியிருக்கிருர்.

# வடக்கில் வெள்ளத்தினுல் தொற்றுநோய் அபாயம்

குடாநாட்டில் கடந்த மாதம் முழுவதும் பெய்த பருவகால மழையினுல் பெரும்பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. பல்லாயிரக் கணக்கானேர் தங்கள் வீடுகளை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர். அத்துடன் இந்த வெள்ளத்தினுல் பல தொற்றுநோய்கள் பரவி வருவதுடன் பலர் மரணமாகியும் உள்ளன. வெள்ளம் காரணமாக போக்குவரத்துக்களும் தடைப்பட்டிருப்பதால் பாதிப்படைந்தோர் மருத்துவ வசதிகளைப் பெறுவதிலும் சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்த வெள்ளத்தினுல் விவசாய முயற்சிகளும் பெரும்பாதிப்புக்குள்ளாகியுள்ளன. நெல்வயல்கள், தோட்டங்கள் என்பன அழிந்ததுடன் கால்நடைகளும் இறந்துள்ளன.

மானிப்பாய், நாவற்குழி பகுதிகளில் உள்ள அகதிகள் முகாம்களும் பெரிதும் பாதிப்புற்றுள்ளன. தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டில்கள் வசித்து வந்த அகதிகள் இந்த வெள்ளத்தினுல் பாதிப்படைந்ததுடன் பலர் அங்கிருந்தும் வெளியேற வேண்டிய நிலையில் உள்ளனர்.

நெருப்புக்காய்ச்சல், வாந்திபேதி, மலேரியா போன்ற நோய்களால் பலர் பீடிக்கப்பட்டிருக்கிருர்கள். இரத்த வாந்தியுடன் கூடிய புதிய வகைக் காய்ச்சல் ஒன்று தோன்றி பரவி வருகிறது. இதனுல் ஏற்கனவே பதினைந்து பேர் இறந்திருக் கிருர்கள். வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு நிலவி வருகிறது. மருந்துகளை அனுப்பும் முயற்சியில் செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டு வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# EVER GREEN IMPORT DISTRIBUTORS
&
# RISHI IMPORTING EMPORIUM

**Wholesale Distributors-Pure Silk**

**924 5329**

## தைப்பொங்கலை முன்னிட்டு வழங்கும் மாபெரும் மலிவு விற்பனை

**தை 8,9,14,15, 16, திகதிகளில்**
**காலை 10.30 முதல் இரவு 10 மணி வரை**

**இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட, நீங்கள் இதுவரை கண்டிராத டிசைன்களில் கண்ணை கவரும் வர்ணங்களில் புத்தம் புதிய சாறிகள் பனாரிஸ், தஞ்சாவூர் சில்க், காஞ்சிபுரம், தர்மாவரம், மைசூர்சில்க், காஷ்மிர் சில்க் உட்பட 3000க்கு மேற்பட்ட அனைத்துரக சாறிகளும்**

**சிங்கப்பூர், பாங்கொக், லண்டன், இந்தியா இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமிகளுக்கான, அனைத்துரக உடைகள், ஜீன்ஸ், சேட்ஸ், குர்தா, வின்ரர் ஜக்கட், பஞ்சாபி சூட், வேட்டி பெனியன், கண்ணை கவரும் நவ நாகரீக உடைகள்,**

அலங்காரப் பொருட்கள், மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள், பரிசுப் பொருட்கள், சஞ்சிகைகள்,

# EVER GREEN IMPORT DISTRIBUTORS

566A PARLIAMENT ST (PARLIAMENT&WELLESLEY)
Tel: (416) 964–2516 (BUS)
929–4619(RES)
924–5329

**எங்கள் வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் மனம் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்கள்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொழிலாளர் காங்கிரஸில் இருந்து செல்லசாமி வெளியேற்றம்

தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்குள் நடைபெற்ற மோதலில் தற்போது செல்லச்சாமி வெளியேற்றப் பட்டுள்ளார். சமீப காலமாக தொண்டமானுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பலத்த பலப்பரீட்சை ஏற்பட்டிருந்தது. தோட்டங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கொடுத்தல், வேலைநாட்களின் தொகை போன்றன தொடர்பாக நிபந்தனைகளை முன்வைத்த தொண்டமானை ஜனாதிபதி புறக்கணித்து வந்தார். அரசுக்கும் தொண்டமானுக்கும் இடையில் நடைபெற்ற பனிப்போரில் மத்திய மாகாண சபையில் காமினியை முதல்வராக்கும் முயற்சிக்கு தொண்டமான் ஆதரவு வழங்கினார். மத்தியில் ஐ.தே.கட்சி அரசுடன் இருக்கும் வேளையில் மத்திய மாகாணத்தில் காமினி திசநாயக்கவை முதல்வராக்கும் தீர்மானத்திற்கு தொண்டமான் ஆதரவளிப்பதாக ஒத்துக் கொண்டார். ஆனால் செல்லச்சாமி இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தார், வாக்களிப்பின் போது எட்டு காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட்டத்திற்கு சமுகமளிக்கவில்லை. இவர்கள் கடத்தப்பட்டதாக தொண்டமான் குற்றம் சாட்டினார்.

இதன் பின்னர் தொண்டமானுக்கும் செல்லச்சாமிக்குமான உறவுகள் விரிசலடைந்தன. தொண்டமானும் அவரது மகன் ஆறுமுகமும் கட்சியின் நிதியான பதினைந்து லட்சம் ரூபாய்களை சொந்த தேவைகளுக்காக பயன்படுத்தினர் என்று செல்லசாமி குற்றம் சாட்டினார். இரண்டு வருடங்களுக்கு முன்னர் கட்சியில் நிதிச் செயலாளராக செயற்பட்ட ஆறுமுகம் சேர்ந்த பின்னர் நிதிநிலைமைகள் மோசமடைநத தாகவும் கட்சியிக்கு மாதாந்தம் எண்பது லட்சம் ரூபா வருமானம் வந்ததாகவும் சரியான கணக்குகள் வைக்கப்படவில்லை என்றும் செல்லசாமி குற்றம் சாட்டினார். கட்சியின் பெயரால் வாங்கப்பட்ட சொத்துக்களை சொந்தக் குடும்பத்தின் பெயருக்கு தொண்டமான் மாற்றினார் என்றும் தொண்டமான் பவுண்டேசன் உருவாக்கப்பட்டு அதற்கு கட்சி கொடுத்த பத்து லட்சத்தில் ஆறு லட்சத்திற்கு கணக்கு இல்லை என்றும் கட்சியின் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ஆறுமுகம் இயக்குனராக இருபபதாகவும் அதற்கு கட்சி சார்பில் மாதாந்தம் பத்து லட்சம் செலவிடப் படுவதாகவும் செல்லசாமி கூறினார்.

இந்த விரிவில் அதிகமான நிலையில் கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டு செல்லச்சாமியும் மற்றும் எட்டு உறுப்பினர்களும் கட்சியை விட்டு விலகுமாறு கோரப்பட்டுள்ளனர். பொதுச் செயலாளரான செல்லசாமி, மாகாணசபை உறுப்பினர்கள் எண்மரையும் தை 15க்கு முன் பதவி விலகுமாறும் தவறும் பட்சத்தில் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது என்றும் தொண்டமானுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவதென்றும் ஹட்டனில் கூடிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பலத்த பாதுகாப்புடன் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு செல்லசாமி சமூகமளிக்கவில்லை.

ஆனால் இந்த தீர்மானத்தை இடைநிறுத்துமாறு நீதிமன்றத்தில் செல்லசாமி கோரியதை அடுத்து நீதிபதி தடையுத்தவரவு விதித்துள்ளார்.

# காங்கிரஸ் பெரும்பான்மை பலம் பெற்றது

இந்திய பங்குச் சந்தை ஊழலில் இந்திய நிதியமைச்சர் மண்மோகன் சிங் சரியான கண்காணிப்பை ஏற்கத் தவறி விட்டார் என பாராளுமன்றத் தெரிவுக்குழு தன் விசாரணையில் தெரிவித்ததை அடுத்து மண்மோகன் சிங் தனது பதவியை ராஜினுமா செய்தார். ஆனல் பத்திரிகைகளும் தொழிலதிபர்களும் இவரது புதிய பொருளாதாரக் கொள்கைகள் வெற்றி பெற வேண்டும்என்றுகூறி இவரது ராஜினுமாவை பிரதமர் ஏற்கக் கூடாது என்று தெரிவித்திருந்தனர். தற்போது பிரதமர் இந்த ராஜினுமாவை ஏற்க மறுத்திருக்கிறார். தற்போது சிங் தொடர்ந்தும் புதிய சீர்திருத்தங்களை அமுலாக்குவார் என்று கூறப்படுகிறது.

இதற்குள் பாராளுமன்றத்தில் சிறுபான்மை பலத்துடன் கூடிய அரசை அமைத்த பிரதமர் நரசிம்மராவுக்கு புத்தாண்டுப் பரிசொன்று கிடைத்துள்ளது. வி. பி.சிங்கின் ஜனதா தளத்திலிருந்து பிரிந்த அஜித் சிங் தற்போது பத்து உறுப்பினர்களுடன் இந்திரா காங்கிரசில் சேர்ந்துள்ளார். அஜித் சிங்கும் மற்றும் உறுப்பினர்களும் சபாநாயர் சிவராஜ் பட்டீலுடன் தாங்கள் காங்கிரசில் சேரும் எண்ணத்தை வெளியிட்டனர். அதன் பின்னர் ராவைச் சந்தித்து கட்சியில் சேர்ந்து கொண்டனர். தற்போது பாராளுமன்றத்தில் மொத்தம் 528 ஆசனங்களுக்கு காங்கிரஸ் 266 ஆசனங்களைக் கொண்டிருக்கிறது. இனிமேல் தோழமைக் கட்சிகளின் தயவை நம்பியிருக்க வேண்டிய தேவை ராவுக்கு இருக்காது. அடுத்த பெப்ரவரியில் வரும் வரவுசெலவுத் திட்டத்தை வெற்றி பெறச் செய்வதில் காஙகிரசிற்கு தடையேதும் இராது.

சமீபத்திய மாநிலத் தேர்தல்களில் ஜனதா தளம் படு தோல்வி அடைந்திருந்தது குறிப்பிடத்தகது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தென்மாகாண சபை கலைக்கப்பட்டது

தென்மாகாண சபை கலைக்கப்பட்டு புதிய தேர்தலுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தென்மாகாணத்தில் சுதந்திரக கட்சியும் காமினியின் கட்சியும் ஒரு ஆசனப் பெரும்பான்மையுடன் ஆட்சி நடத்தி வந்தன. இதற்குள் கடந்த மாதம் 9ம் திகதி சுதந்திரக்கட்சி உறுப்பினரான பிரான்சிஸ்கு விமலசேன காணுமல் போயிருந்தார். இந்த நேரத்தில் மாகாணசபை வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது அது தோற்கடிக்கப் பட்டதால் தொடர்ந்தும் மாகாண சபையால் இயங்க முடியாது என்று கூறி ஆளுனர் சபையைக் கலைத்தார்.

காணுமல் போன உறுப்பினர் மீண்டும்தோன்றி தான் மருத்துவ சிகிச்சைக்காக கொழும்பு சென்றதாகவும் தற்போது தான் ஐதே.கட்சிக்கு மாறியுள்ளதாகவும் கூறியுள்ளார். ஆனல் இவர் கடத்தப்பட்டதாகவே எதிர்க கட்சிகள் குற்றம் சாட்டியிருக்கின்றன.

தற்போது புதிய தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்வதற்கு தை மாதம் 18ம் திகதி அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு வார காலத்திற்கு வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும். ஆயினும் தேர்தல் திகதி அறிவிக்கப்படவில்லை.

சுதந்திரகட்சியின் கொள்கைகளில் நம்பிக்கையிழந்து விஜேதுங்கவின் கொள்கைகளால் கவரப்பட்டதாக கூறும் பிரான்சிஸ்கு அடுத்த தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிடுவார்.

# எம்.பி வீட்டுக்கு குண்டுவீச்சு

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீடு மீது கிரனெட் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. தமிழ் பாராளுமன்ற உறுப்பினரான கோ.கருணைகரன் வீட்டின் மீது கடந்த புதன்கிழமை நடைபெற்ற இத்தாக்குதலால் அவரது வீடு சேதமடைந்தது. மட்டக்களப்பு மாவட்ட டெலோ உறுப்பினரான இவர் தாக்குதல் நடந்த போது வீட்டில் இருக்கவில்லை. அத்துடன் யாரும் காயமடையவில்லை. யார் இதற்கு காரணமாயிருக்கலாம் என்பது பற்றி தெரிவிக்க கருணைகரன் மறுத்து விட்டார்.

# விரைவில் வெற்றி பெற முடியும் என இராணுவ தளபதி நம்பிக்கை

யுத்தத்தில் வெற்றி பெற கால எல்லை குறிக்கப்பட முடியாது, ஆனல் விரைவில் எங்களால் வெற்றியடைய முடியும் என்று புதிய இராணுவத் தளபதி தெரிவித்திருக்கிருர். புதிய தளபதியான ஜெரி டி சில்வா பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது இராணுவத்திற்கு பெரிய தடையாக இருப்பது ஆட்பற்றுக்குறை என்றும் வடக்கு கிழக்கு யுத்தத்திற்காக இராணுவத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட இருப்பதுடன் தந்திரோ பாயங்களிலும் புதிய நடைமுறைகள் பின்பற்றப்பட இருக்கின்றன என்று கூறியுள்ளார்.

சமீப காலங்களில் இராணுவத்தில் ஏற்பட்ட தோல்விகளைச் சுட்டிக் காட்டிய அவர் பெருமளவில் உயிர்ச்சேதமும் ஆயுத இழப்புகளும் இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ளதாகவும் அவ்வாருன விடயங்களை ஆராய்ந்து தங்கள் பலவீனங்களை உணர்ந்து கொண்டு சரியான தீர்வுகளைக் காண வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இராணுவத்தின் அதிகாரக் கட்டமைப்பிலும் மாற்றங்கள் செய்யப்படும் என்றும் தற்போதைய யுத்தத்திற்கு போதிய ஆட்பலமும் ஆயுதங்கள், வாகனங்கள், தளபாடங்கள் அவசியம் என்றும் குறிப்பிட்டார். பல ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாகவும் முப்படைகளுக்கும் இடையில் ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அப்பா

.........57 இனக் கலவரத்தின்போது தமிழ்க் குடும்பம் ஒன்றை பாதுகாத்த எனது அப்பாவை மிரட்டுவதற்கு வாள் பொல்லுகள் சகிதம் வீட்டை சுற்றிவளைத்த காடையர்களுக்கு முன்னல் உலக்கையை தூக்கிக் கொண்டு அம்மா பாய்ந்த விதம் எனக்கு இன்னும் நினைவில் உள்ளது....... அப்பாவின் அரசியல் காரணமாகவே அம்மாவுக்கு அவ்வளவு துணிச்சல் வந்தது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை....

.......'உங்கட அப்பா கொஞ்சம் அக்கறையாயிருந்திருந்தால் நீ பல்கலைக் கழகம் போயிருக்கலாம்' என மாமி அல்லது சின்னம்மா கூறும்போது தங்கை சிரித்துக் கொண்டே அவ்விடத்தை விட்டு மாறுவாள் .

....................வெஸ்ஸந்தர அரசர் தனது குழந்தைகளையும் தேவியையும் தானம் கொடுத்தார் எனக் கூறியவுடன் சாது சாது என்று சொல்ல பழக்கப்பட்ட மனதைக் கொண்ட சமுதாயத்தில் அப்பா இருக்கவேண்டியது பூசைக்குரிய ஸ்தானத்திலாகும். ஆனலும் அப்பாவுக்கும் சில இடங்களில் தவறுகள் நேர்ந்துள்ளன என்றே நான் நினைக்கிறேன்....

ஜயதிலக கம்மெல்லவீர எழுதிய 'அப்பா' நாவல் ஜனமித்திரனல் தமிழாக்கம் செய்யப்பட்டு அடுத்த வாரத்திலிருந்து ஆரம்பமாகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகள் பற்றி விசாரணை செய்ய அரசு மறுப்பு

எம்பிலிப்பிட்டியப் பகுதியில் சூரியக்கந்தையில் மலையோரத்தில் கட்டட நிர்மாணத்திற்காக தொழிலாளர்கள் கிடங்கு வெட்டிய போது புதை குழி ஒன்றில் எலும்புகளும் மண்டையோடுகளும் கிடக்கக் காணப்பட்டன. இந்த எலும்புகள் ஜே.வி.பி கலவரக் காலத்தில் இராணுவத்தினரின் நடவடிக்கைகளால் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டவர்களுடையன என்று நம்பப்படுகிறது. சுமார் இருபது எலும்புக்கூடுகள் இப்பகுதியில் காணப்பட்டுள்ளன. பல மண்டையோடுகளில் வாய்ப்பகுதி துணியால் கட்டப்பட்டிருந்தது. இந்த பகுதிக்கு பத்திரிகையாளர்களை சந்திரிகா குமாரணதுங்க அழைத்துச்சென்று காண்பித்ததாக செய்திக் குறிப்பு ஒன்று கூறுகிறது. 89ம் ஆண்டு கடத்திச்செல்லப்பட்டு காணுமல் போன மாணவர்களின் எலும்புக்கூடுகளே என்று கருதப்படுகிறது.

பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய சந்திரிகா இது குறித்து அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். மனித உரிமை அமைப்புகள், நடுநிலையான நீதிபதிகள் உட்பட்ட ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் சந்திரிகா கோரினுர். அத்துடன் சர்வதேச மன்னிப்புச்சபையிடம் இந்த உடல்கள் குறித்து மருத்துவ விசாரணை மேற்கொள்ள நிபுணர்களை அனுப்புமாறும் அவர் வேண்டுகோள் விடுத்திருக்கிருர். சுமார் முன்னூறு உடல்கள் வரை அப்பகுதியில் புதைக்கப் பட்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

ஒரு குழி முப்பது அடி ஆழமானது. ஆறு அடி ஆழத்துக்கும் அதிகமான பகுதியில் உடல்கள் புதைக்கப்பட்டிருந்தன. மேலும் பல உடல்கள் இந்த குழிகளுக்குள் இருக்கலாம் என்றும் இந்த பகுதிக்கு சென்ற அரசியல் வாதிகளுக்கு பயமுறுத்தல்களும் விடுக்கப் பட்டதாகவும் சந்திரிகா தெரிவித்தார்.

ஒரு குழியில் பன்னிரண்டு எலும்புக்கூடுகளும் மேலும் இரு குழிகளில் எட்டு எலும்புக்கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த எலும்புக்கூடுகள் பதினைந்து வயது முதல் இருபது வயது வரையானவர்களுடையன. இந்த குழிகளை பெருமளவிலானவர்கள் பார்வையிட்டு வருகின்றனர். இவர்களில் பலர் தங்களின் உறவினர்களை இழந்தவர்கள். தங்கள் உறவினர்களும் இந்தப் புதைகுழிகளுக்குள் புதைக்கப் பட்டிருக்கலாம் என்ற எண்ணத்தில் பலர் ஆர்வத்துடன் தேடி வருகின்றனர்.

உள்ளூர் நீதிபதி ரணசிங்க இந்த குழிகளில் மேலும் தேடுதல் நடத்தும்படி உத்தரவிட்டிருந்தார். இந்த குழிகளுக்கு பொலிசார் பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

89ல் இராணுவ முகாமாகப் பயன்படுத்தப்பட்ட தொலைக்காட்சி ஒளிபரப்பு கோபுரங்களுக்கு அருகிலேயே இந்த புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தப் பகுதியில் சுதந்திரக்கட்சி 24 மணி நேர கண்காணிப்பு செய்து வருகிறது. அரசாங்க கட்டடம் ஒன்றிற்கு அருகிலேயே இந்த குழிகள் காணப்படுவதால் அரசஅதிகாரத்தில் உள்ளவர்கள் தான் இந்தப் பயங்கரத்தை செய்திருக்க முடியும் என்றும் சந்திரிகா குற்றம் சாட்டினர். அத்துடன் நாடெங்கிலும் இவ்வாருன பல குழிகள் உள்ளதாகவும் சில அமைச்சர்களின் வளவுகளுக்குள்ளும் இவ்வாருன புதைகுழிகள் உள்ளதாகவும் சந்திரிகா தெரிவித்தார்.

பிந்திய செய்திகளின்படி அரசாங்கம் இந்த புதைகுழிகள் குறித்து விசாரணை செய்ய மறுத்திருக்கிறது. அத்துடன் இந்த புதைகுழிகளில் 300 உடல்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச் சாட்டையும் 'மிகைப்படுத்தல்' என்று அரசு நிராகரித்திருக்கிறது. இது குறித்து விசாரணை செய்யும்படி உதவிப் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடப் பட்டிருக்கிறது என்றும் அரச அதிகாரி ஒருவர் செய்தியாளர்களுக்கு தெரிவித்தார்.

# வேட்பாளர் கொலை

வடக்கிலும் கிழக்கிலும் உள்ளூராட்சி தேர்தல்களுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன. அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை, வவுனியா பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்கள் தை மாதம் 12ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். தேர்தல் திகதி இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இதற்குள் மட்டக்களப்பில் சுயேச்சையாக தேர்தலில் குதித்த ஒருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கனகரத்தினம் ஜீவரத்தினம் என்ற சுயேச்சை வேட்பாளர் கடந்த செவ்வாய்க்கிழமை தனது வீட்டில் இருந்து கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது உடல் புதன்கிழமை வீதியோரமாக கிடக்கக் காணப்பட்டது. இவருக்கு அருகில் இருந்த துண்டுப்பிரசுரம் ஒன்றில் தேர்தலில் பங்குபற்றுவோருக்கு இதுதான் தண்டனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற ஆகஸ்ட் மாதம் இந்த தேர்தல் நடத்த உத்தேசிக்கப்பட்ட போதும் பாதுகாப்பு காரணங்களுக்காக பின்போடப்பட்டிருந்தது. மற்றைய தமிழ்க்கட்சிகளும் தங்களுக்கு பிரசாரம் செய்ய முடியாது என்று காரணம் காட்டி இதை பின்போடும்படி கேட்டிருந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மரண அறிவித்தல்

## கட்டப்பிராய் சபாபதிபிள்ளை இராசையா



**பிறப்பு**
**19-07-1916**

**இறப்பு**
**23-12-1993**

### சபாபதிபிள்ளை இராசையா 23-12-1993
### யாழ்ப்பாணத்தில் சிவபதமடைந்தார்.

இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராசம்மா, காலஞ்சென்ற இராசரட்ணம், காலஞ்சென்ற நவரட்ணம் சத்தியருக்மணி, பாலசிங்கம், சிவலிங்கம், ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற மனோன்மணி,பொற்கொடி, சுசிலாதேவி, பரமசாமி, அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனரும்
காந்திமலர்(யாழ்) காலஞ்சென்ற கனகாம்பிகை, கணேசநாதன்(கனடா) ஜெகதீஸ்வரன் (UK) கமலநாதன் (U.K) கமலவேணி (ஜேர்மனி) ஜெகதீஸ்வரி (ஜேர்மனி) தில்லைநாதன் (கனடா) சரஸ்வதி (U.K) மகேஸ்வரி (U.K) பாக்கியநாதன்(கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் பரம்சோதி, காலஞ்சென்ற நவரட்ணராஜா, ஜெயஜோதி சௌந்தரராணி, இராசமலர், கிருஷ்ண செல்வம், ஜெயசிறீதரன் குசேலினி, வைரவநாதன், சிவகுமார், வித்தியா ஆகியோரின் மாமனாரும் பத்ம சோதி, சசிகாந்த், பதி, தயாநிதி, வக்சிதா, சக்திகா, சிவஜா தாரகா, மேனகா, குட்டி, ரங்கன், சாயிபன், ஜெயாழினி, தனஞ்செயன், ஜெயகரன், ரவிஸ், கரிஸ் சொப்பனா, சாயிநாத பிரகாஷ் காயத்திரி,பிரியந்தினி ஆகியோரின் பேரனுமாவார்.
இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

தகவல்
இ கணேசநாதன்
412-1583



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தைப்பொங்கலை முன்னிட்டு

## தை 1முதல் 15வரை

# மாபெரும் மலிவு விற்பனை

# JAFFNA'S

**Jane/Finch Mall**

**633-2412**

பாகற்காய், கத்தரிக்காய்
99 சதம்/றாத்

பயற்றங்காய்
$1.29/றாத்

முருங்கைக்காய்
$1.99/றாத்

இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்ட Red Ruby
வறுத்த தரமான
**மிளகாய்த் தூள்**
**$2.99/450 கிராம்**
(Reg $3.59/450 g pack)
**$5.99/ 900 கிராம்**
(Reg $6.99/900 g pack)

பருப்பு வகைகள்
மைசூர், உழுந்து, பயறு
$2.99 மட்டுமே
Reg $3.59/ 4Lb pack

பெட்டியில் அடைக்கப்பட்ட, கையால் இடித்து
**வறுத்த அரிசிமா**
Red Ruby, Royal Chef Brands
**$1.99/பெட்டி**

**Coconut Milk Powder**
(Large)
$1.99/Box
(Reg $2.99)

இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்ட
சம்பா அரிசி, புழுங்கல் அரிசி,
சிவப்புப் பச்சை அரிசி,
வறுத்த அரிசிமா
$1.49/1 kg pack (Reg $1.99)
$6.99/5 kg pack (Reg $8.99)

**வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்**
**எமது உள்ளம் கனிந்த தைப்பொங்கல் வாழ்த்துக்கள்**

www.tamilarangam.net

# மாத்தயா: நீயுமா புருட்டஸ்?

What goes around comes around என்று ஆங்கிலத்தில் ஒரு சொல்வழக்குண்டு. மாத்தயா விவகாரத்தில் இச்சொல்வழக்கு பெரிதளவு ஆச்சரியத்தை தருவதாகவிருக்க முடியாது.

அவர் போவதையும் வருவதையும் கண்டவர். அவருக்கு முன்னால் பல விடயங்களில் இப்படியான 'போக்குவரவுகள்' நிறைய நடைபெற்றிருக்கின்றன. அதனால் அவர் எதற்குமே பயப்பட மாட்டார்.

பிரபாகரனுக்கும் மாத்தயாவுக்குமுள்ள வேதனையான விரிவு 'ஒரு வரி' ஆழமானதுதான். புருட்டஸ் நீயுமா? என்பது தான் அது.

ஒரு காலத்தில் பிரபாகரனின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விருந்தவர் மாத்தயா. அதனால் மாத்தயாவை புருட்டஸாகப் பார்க்க பிரபாகரனுக்கு சகல உரிமைகளும் உண்டு.

அதே வேளை 'ஒரு காலத்தில் ஆத்மார்த்தமான நட்பை வெளிக்காட்டிய உம்மால் என் மீது சுமத்தப்பட்ட குற்றங்களைப் பற்றி என்னிடம் சல்லாபிக்க முடியாது போயிற்று நண்பரே!' என்று கேட்குமளவிற்கு பிரபாகரனைப் புருட்டஸாகப் பார்க்க மாத்தயாவுக்கு அத்தனை உரிமைகளும் இருக்கின்றன. (வடமராட்சித் தாக்குதலிலிருந்து பிரபாகரனை உயிரோடு வெளிக்கொணர்ந்த மாத்தயாவின் சேவை என்பது சில வேளைகளில் இயக்க விதிகளுக்குள் இடறுப்பட்டாலும் கூட...)

ரோமசாம்ராஜ்யம் ஏற்றத்தையும் கண்டது. இறக்கத்தையும் கண்டது. அழிவு எங்கு எப்படி ஆரம்பித்தது என்று எல்லோருக்கும் தெரியும்.

விசுவாசமற்ற நட்பு வேதனையில் முடியும். விசுவாசமற்ற பணியாட்களை வைத்து வியாபாரம் செய்ய முடியாது. அந்த வகையில் விசுவாசத்தில் அவநம்பிக்கை ஏற்பட்ட பிறகு மாத்தயாவிற்கு இயக்கத்தில் இடமிருக்க முடியாது.

அதற்காக அவர் கொலை செய்யப்பட வேண்டும் என்பதில்லை. புலி வழிகள் வேறு நிறைய இருக்கின்றன.

ஒரு காலத்தில் ஓகோ என்று புகழப்பட்ட பிரதித்தலைவர் ஒரு அரையாண்டிற்குள் துரோகியாக்கப் பட்டார் என்பது சாதாரண விசயமல்ல. அவரது தரப்பு வாதத்தை பிரபாகரன் நேரடியாகக் கேட்காது உளவுத்துறை மூலம் அறிய முற்பட்டது நியாயமானதல்ல. மூத்த உறுப்பினர் ஒருவரை அடிமட்டத் தொண்டர் போல் நடத்துவது தர்மமுமல்ல.

இந்திய சதிக்கு மாத்தயா ஆளாகி விட்டார் என்று குற்றம் சாட்டிக் கொண்டு அதே சதிக்கு புலிகளின் இயக்கமே ஆளாகிப் போகும் நிலைக்குத்தான் நிலைமைகள் இட்டுச் செல்கின்றன.

மாத்தயாவிற்கு இயக்கத்தில் ஆதரவாளர்கள் இருக்கிறார்கள். வாய்மூடி மௌனிகளாக இருக்கின்ற இவர்கள் இயக்கம் பலவீனமடையும் போது விரக்தியினால் வெகுண்டு எழமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?

இயக்கத்திலிருக்கின்ற ஏனைய மூத்த உறுப்பினர்களும் தங்கள் எதிர்காலம் குறித்து விசனப்பட மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதமிருக்கிறது? சதிகாரருக்குத் தான் சதுரமெல்லாம் மதியாயிற்றே! எங்கே எப்போது யாரால் எந்த உருவில் அடுத்த மாத்தயா உருவாகுவார் என்று யாரால் சொல்ல முடியும்?

கிட்டுவுக்கு குண்டெறிந்து மாத்தயாவென்றால் ஈ.பி.ஆர்.எல்.எஃப் போராளிகளின் கொலைகள் மக்கள் அதிருப்தியை பின்னேக்கி தள்ளி விடாது என்பதற்கு என்ன உத்தரவாதமிருக்கிறது?

புலிகளின் கடந்த கால நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் மக்கள் மனங்களில் மறுபரிசீலனை பண்ணப்படுகின்ற நிலைக்குத் தள்ளப்படுமானால் இயக்கத்தின் புனித மார்க்கம் நீதிவிசாரணைக்குட்படாதா?

மாத்தயாவுக்கு மரண தண்டனை நிறைவேறினால் இவையெல்லாம் நிச்சயம் நடக்கும். புலிகள் இயக்கத்தின் அழிவு மாத்தயாவின் அழிவில் இருந்து தான் ஆரம்பமாகும்.

இந்திய அரசும் இலங்கை அரசும் கடைக்கண்ணால் கைகுலுக்கிக் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள. சரித்திரங்கள் அவர்களுக்கு சாமரம் வீசுகிறது. சுரங்க முடிவில் ஒளி தெரியவாரம்பிக்கிறது அவர்களுக்கு.

தொடர்ந்து வந்த வெற்றியின் அகங்காரத்தில் தந்தை ஷாஜகானை சிறை வைத்து விட்டு சகோதரர்களையும் கொலை செய்து விட்டு முகலாய சாம்ராஜ்யத்தை தனியொருவனகவே அழித்துக் கொண்டான் ஔரங்கசீப். வெற்றியின் அகங்காரத்தில் தொலைத்துக் கொண்டன தார்மீகமே நக்சலைட்டுகளை அழித்துக் கொண்டது. ஹிட்லர், முசோலினி, நெப்போலியன், சதாம்உசேன் எல்லோருமே வெற்றியைத் தொடர்ந்து வந்த வெறிமதத்துக்கு இரையானவர்கள். அந்த வகையில் பூனகரி வெற்றி புலிகளின் அழிவுக்கும் ஆரம்பமாய் அமைந்து விடக் கூடாது. தமிழருக்கு விடுதலையில்லா விட்டாலும் தலை தப்புவதற்காவது புலிகளின் பலச்சமநிலை அவசியமானது.

அதுவும் போய் விட்டால்...? புலிகளின் எழுச்சியும் வீழ்ச்சியும் என்று கம்பியூட்டர்மானிகள் எழுதவாரம்பித்து விடுவார்கள்.

தேவைதானா? போகட்டும் மாத்தயா. விட்டு விடுங்கள். மனச்சாட்சி அவருக்கு மரணதண்டனை விதித்திருக்கிறது.

சிவதாசனின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# GOOD BYE BALDNESS



முடி உதிர்பவர்களுக்கு
ஒரு நற்செய்தி

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது

பரீட்சித்துப் பாருங்கள்

Try First

பலர் இச்சிகிச்சை மூலம் பயன்
அடைந்துள்ளனர்

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

# Anita's Unisex

**239 Carlton St, West of Parliament**

**Tel:922 0478**

**Ladies' and Men's**

Specializing in Hair CutsPermanents, Tinting and BleachingHair Removal, Permanent Eyelashes Nails Facial Scalp Clinic

**Cure against Hair loss**

Foam, Spiral Perm, Custom Uniperm
Who specialize in hair cutting and long hair

**Perms $30 & up**
**Try One (1) Professional Skin Care Treatment For only $20.00***

*For New Clients Only *By Appointment only



An off centre and full neckline are the main features on this conservative, short precision scissor cut. May be blown on air dried



Prestige- a short cut featuring a perm Easy-to-look after Lamp or air dried

# SIA TRIANTOS

**Income Tax & Accounting Service**
**(416) 469-4906/ 922-0478**

## It's Tax Time!!

We offer a professional, accurate and computerized service by competent tax planners. We help you lower your taxable income using tax plan strategies. **We know how to best handle your changing income tax situation.**

We are government authorized **Electronic Filing (EFILE). EFILE** is a fast, accurate and paperless new system which enable us to transmit your tax return inexpensively directly to Revenue Canada. Your Return will be processed by Revenue Canada and You will receive your refund within 3-14 days.

**Income Tax By Phone ™** Service is available again this year. Simply call and give us all your relevant tax information. Your computerized Income Tax return will be delivered to your door- with an extra copy for yourself.

Our prices are competetive... As low as $19.99 You will be satisfied with our service, price and professionalism.

Call to arrange an appointment at our office or in your home at your convenience.

**It is time to benefit from our personalized tax service. Don't forget. We also offer free pick up and delivery service.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எழுச்சியுற்றிராவிடில் அவர்கள் மனிதர்கள் அல்ல"

## சுனில் மாதவ பிரேமதிலக

**1993 அக்டோபர் 14ம்திகதி கொழும்பு பொதுநூல் நிலையத்தின் கேட்போர் கூடத்தில் "யுத்தமும் தொடர்பு சாதனங்களும்" என்றும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் 'ஹிரு' பத்திரிகையின் இணையாசிரியரும் 'லக்திவ' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான தோழர் சுனில் மாதவ பிரேமதிலக ஆற்றிய உரை. தமிழாக்கம் செ. லோகநாதன் நன்றி யுக்திய**

பேசவேண்டும் என நான் முன்பு எண்ணியிருந்தவைகளை யெல்லாம் திரு. ஹுஷன் அவர்களும் அஜித் சமரநாயக அவர்களும் பேசி விட்டனர் என்றே நான் நினைக்கிறேன். அவ் இரு பேச்சுகளின் கலவையையே நான் பேசவேண்டியுள்ளது. இவ் யுத்தத்தைப் பற்றி பத்திரிகையாளர்களாகிய நாம் பேச முற்படும்போது இவ் யுத்தம் எவ்வாறு ஏற்பட்டது? யாரால் தோற்றுவிக்கப்பட்டது? யாருடைய நன்மைக்காக நடத்தப்படுகிறது? என்பன பற்றியெல்லாம் நாம் முதலில் சிந்திக்க வேண்டியுள்ளது.

அவர்களுடைய யுத்தம்:

தமிழ், சிங்கள சுயநல அரசியல் வாதிகளால் தோற்றுவிக்கப்பட்ட இனவாதம், இதனால் ஏற்பட்ட யுத்தம் இன்று எதற்காக நடாத்தப்படுகிறது? யாருடைய நன்மைக்காக நடாத்தப்படுகிறது என்பன பற்றி மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். ஆனால் இது தனியாக அரசியல் தத்துவத்தின் அடிப்படையில் பேசவேண்டிய ஒன்று என நான் கருதுவதால் பத்திரிகையாளன் என்ற ரீதியில் இரண்டு மூன்று வாக்கியங்களைக் கூற எண்ணுகிறேன். எமது நாட்டின் இன்றைய யுத்தத்தைப் பற்றி, எமது நாட்டு பத்திரிகையாளர்கள் மக்களுக்காக தமது கடமைகளை நிறைவேற்றியுள்ளார்களா?ஏன் அவ்வாறு கூறுகிறேன் என்றால் இந் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தைப் பற்றி எழுதுவதற்கு தகவல்களைப் பெற செல்வதற்காக தேசிய என்று கூறிக்கொள்ளும் பத்திரிகைகளுக்கு மட்டுமே அரசு அனுமதி வழங்கியது. நான் 'லத்திவ' பத்திரிகையில் வேலை செய்தபோது யுத்தத்தைப்பற்றி எழுதுவதற்கு தகவல் சேகரிக்கச் செல்ல "தயவு செய்து எங்களுக்கும் தாருங்கள்" என இருபது, முப்பது தடவைகள் அரசாங்கத்திடம் அனுமதி கோரினோம். ஆனால் அரசாங்கத்திடமிருந்து ஆகக் குறைந்தது பதில்கூட கிடைக்கவில்லை. இந் நிலமையின் கீழ் இந்நாட்டு மக்களுக்கு யுத்தம் பற்றி வாசிக்க கிடைத்ததெல்லாம் தேசிய என்று கூறிக்கொள்ளும் பத்திரிகைகளில் வெளிவந்தவை மட்டுமே தான். நண்பன் அஜித் கூறியவாறே இந்நாட்டு மக்கள் யுத்தம் பற்றி அறியவில்லை என்றால் அதற்கான பிழைகள் ஆங்கிலப் பத்திரிகைகளைவிட சிங்கள இனவாத பத்திரிகையாளர்களையே சார்ந்தது என்றே நானும் எண்ணுகிறேன். ஏனெனில் இம் மனிதர்கள் யுத்தத்தை இனவாதக் கண் கொண்டே பார்க்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில் கொல்லப்படும் ஒவ்வொரு தமிழனும் எதிரி அல்லது புலி, அந்த தமிழ் மனிதனைக் கொல்லும் இராணுவ சிப்பாய் வீரன் ஆவான். இம மனோபாவத்துடனுயே இந் நாட்டின் யுத்தம் பற்றி எழுதப்பட்டது. ஆனால் யுத்தங்களைப்பற்றி மிகுந்த மனிதாபிமான கண்கொண்டு நோக்கி உலகின் பல பத்திரிகைகளுக்கும் எழுதிய எழுத்தாளர்களைப் பற்றி அவர்களது அனுபவங்களால் படைக்கப்பட்ட இலக்கிய நூல்களைப்பற்றி, விசேடமாக ஏர்னஸ்ட் ஹெமிங்வே, நோர்மன் மேலர், மக்கார்த்தி போன்றோரைப்பற்றி நீங்கள் வாசித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். வியட்னாம் யுத்தம் பற்றி முழு உலகத்துக்கும் கூறினார்கள் யுத்தத்தின் கொடுமை, பயங்கரம் பற்றி எல்லாம் எழுதினார்கள். வாசிங்டன் பத்திரிகைக்கு ஸ்பெயின் சிவில்யுத்தம் பற்றி எழுதுவதற்காக ஹெமிங்வே சென்றார். அவர் யுத்தத்தின் கொடுமைகளையும் பயங்கர வாதத்தையும் பற்றி தெளிவாக எழுதினர்.

***சிங்கள பௌத்த இராணுவம் எனக் கூறப்படும் அவ் இராணுவம் கடந்த காலங்களில் தெற்கில் உள்ள சிங்கள பௌத்த ஆண்,பெண்களுக்கு இழைத்த கொடுமைகளையும் சித்திரவதைகளையும நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவ்வாறான இராணுவம் யுத்த மனோபாவம் வளர்க்கப்பட்டு இனவாத வெறி ஊட்டப்பட்டு வடக்கு கிழக்குக்கு அனுப்பப்பட்டால் எவ்வாறு நடந்து கொள்வர் என்பதைப் பற்றி நான் சொல்ல வேண்டுமா? இது பொது அறிவுக்கு உட்பட்ட விடயம்.***

***ஐந்தாம் வகுப்பு பாஸ் பண்ணிய சிப்பாய் வடக்கின் யுத்தத்திற்கும் மட்டும் அல்ல. நீங்கள் வாழ்க்கைச் சுமை அதிகரித்து விட்டது என சம்பளத்தைக் கூட்டுமாறு கோரி வேலை நிறுத்தம் செய்யும் போது புத்தகமோ பத்திரிகையோ வாசிக்காத ஐந்தாம் வகுப்பு பாஸ்பண்ணிய அந்தச் சிப்பாய் உங்களுக்கும் துப்பாக்கியை நீட்டுவான். உங்களுக்கு மட்டுமல்ல, எனக்கும் இங்குள்ள ஏனைய பத்திரிகையாளர் அனைவருக்கும் தான்***

***இன்று சிங்கள அகதி முகாம்களில் உள்ள பெட்டைகளைக் கூட இராணுவத்தைச் சார்ந்தோர் கற்பழிக்கின்றனர். மாலை நேரத்தில் வெளியே கூட்டிச் சென்று காலையில் முகாமுக்கு கொண்டு வருகின்றனர். எங்களுடைய அலுவலகத்துக்கு வாருங்கள் அழகான இளம்பெண்கள் முப்பது நாற்பது பேர் ஒன்றாக கொல்லப்பட்டுள்ள காட்சியை இன்றைக்கும் உங்களுக்கு காட்ட முடியும். அவர்கள் அனைவரும் நிர்வாண கோலத்திலேயே உள்ளனர். இளம் பெண்கள் போராடச் செல்வது நிர்வாணமாக அல்ல. அவர்கள் அனைவரும் கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்ட அப்பாவிப் பெண்கள் அவர்கள் எமது சகோதரிகள் தான். அதனால்தான் நாம் வேதனைப் படுகிறோம். நாம் மனிதக் கண்கொண்டே யுத்தத்தைப் பார்க்கிறோம். அதனாலேயே யுத்தம் பற்றி எழுத எமக்கு தடை விதிக்கிறார்கள். யுத்தத்தின் கொடுமைகளையும், பாவங்களையும், சண்டாளத் தன்மையையும் நாம் சிங்கள மக்களுக்கு கூறவேண்டும்.***

**27ம் பக்கம் பார்க்க..**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சாமக்கதைகள்

## கூடு

### கே.எஸ்.நேசமித்திரன்



மனதைச சுண்டியிழுத்த அந்த முகத்தைப் பிடித்துப் பொக்கெட்டுக்குள் வைத்து விடமுடியாது போய்விட்டது. கலவை ஒழுங்கு கலங்காமல் கீறப்பட்ட சித்திரமோ என ஏங்கியபடி இறங்க வேண்டிய இடத்தில் விருப்பமில்லாமல் இறங்கினேன். என்னையுமறியாமல் அந்தச் சிட்டுக்குருவியின் முகம் எனது மன வனத்துள் நுழைந்த, என்னைத்தனது அஞ்சும்விழிகளால் உற்று உற்றுப்பார்த்தது. அருகே போயிருந்து லைட்டாகப் பேச்சுக் கொடுத்திருக்கலாமே என்றும் பட்டது. நல்லகாலம், கிரிஜா என்னுடன் வெளிக்கிட்டுக் வரவில்லை. எனது விழிகளைப் பிடுங்கி ஏதாவது அலுமாரிக்குள் வைத்துப் பூட்டிவிட்டுத்தான் வெளியே அனுப்பவேண்டும் என சில சம்பவங்களின் பின்னர் என்னிடம் அவள் சொல்லிக்கொண்டிருக்கிருள். நான் என்ன பெரிய தப்பேதும் செய்துவிட்டேனு? ஒரு ரயில் பிரயாணமொன்றில், அருகே கிரிஜாவும் இருக்கதூர இருந்த ஒரு அழகிய பெண்ணைப் பார்த்துச் சொக்கிவிட்டேன். அது அவளுக்கும் தெரிந்துவிட்டது.

"உமது என்ன பார்வை?" என முகத்தைக் கோணலாக்கிக் கொண்டும், உதட்டை ஒரு பக்கம் இழுத்துக் கொண்டும் கேட்டாள்.

"கிரிஜா, அந்தப் பெண்ணைப் பார், அவளது காதில் உள்ள தோட்டைப் பார்.... எவ்வளவு அழகாக உள்ளது. அதுபோல ஒரு தோட்டை எமது திருமணத்தின் மூன்ருவது ஆண்டு நிறைவையொட்டி உனக்கு வாங்க விரும்புகின்றேன். அதுதான் அவளது காதில் உள்ள தோட்டைப் பார்க்கின்றேன்" எனச் சொன்னேன்..

"தோட்டைப் பார்க்கின்றீரோ, இல்லை அவளைப் பார்க்கின்றீரோ?" என்றபடி, ரெண்டு சொட்டுக் கண்ணீர் விட்டு "உம்மை நம்பினதே தப்பு, நீர் எனக்குத் துரோகம் செய்கின்றீர். நான் சுயிசைட் செய்யப்போகிறன்" என்றபடி ஓடும் ரயிலின் கதவைநோக்கி ஓடினாள்.

"பிளீஸ் கிரிஜா, நீர் சுயிசைட் செய்தால் நானும் சுயிசைட் தான் செய்வேன். நான் அந்த பிரெஞ்சுக்காரியின் தோட்டைப் பார்த்தது பிழையெண்டு ஒத்துக் கொள்ளிறன். இனிமேல் நீர் சொல்லிறபடிதான் நடப்பன்... தோடணிந்த எந்த பெண்ணையும் பார்க்க மாட்டேன்" என்ற பின்னர்தான் அவள் தனது சயனைட் முயற்சியைக் கைவிட்டாள்.

ஒரு சனிக்கிழமை காலையில்–சற்று ஏர்லியாக எழுந்து வெளிக்கிடத் தொடங்கினேன்.

"மார்க்கட்டுக்குப் போகவோ உவ்வளவு ஏர்லியா வெளிக்கிடுறீர்?" என, அரைகுறைத் தூக்கத்திலிருந்த கிரிஜா என்னிடம் கேட்டாள்.

"ஓம் மார்க்கட்டுக்குத்தான்" என்றேன்.

"உப்ப எட்டுமணி, ஒன்பது மணிக்குத்தான் மார்க்கட் திறபடும். ... ஆறு நாள் வேலை. சனிக்கிழமை ஒண்டிலைதான் லீவு...படும்" என்ருள்.

கிரிஜாவுக்குச் சொல்ல முடியா சோலியொன்று மார்க்கட்டுக்கு அருகில் இருந்தது. எந்தச் சாட்டைச்சொல்லியும்சோலியைக் கவனிக்ககூட முடியாதென்பது எனக்கு விளங்கிவிட்டதால் கட்டிலில் விழுந்தேன்.

"வேலை செய்தா மட்டும் காணுது, உம்மடை உடம்பையும் கவனிக்க வேணும். உம்மை நான் லவ்பண்ணத் துவங்கேக்கை நல்ல மொத்தமா இருந்தனீர். இப்ப வர வர மெலிஞ்சு கொண்டு போறீர்." என்றபடி சுவரில் மாட்டப்பட்டிருந்த திருமணப் போட்டோவைக் காட்டினுள். அவள் சொன்னது உண்மைதான். நான் நல்ல மொத்தமாக இருந்தேன்.

"ஓவர்ரைம் அடிக்கடி செய்யிறதுதான் காரணமெண்டு நான் நினைக்கிறன் கிரிஜா, நீர் என்ன நினைக்கிறீர்?"

"எங்கடை கடன் பிரச்சனை முடிஞ்சோண்ணை நீர் ஓவர்ரைம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்யிறதை நிப்பாட்டிப் போடவேணும்" என்றபடி எனது கருகருத்த நெஞ்சின் மயிரைத் தனது பஞ்சுக் கரங்களால் தடவிவிட்டாள். பல வாரங்களாக தடைபட்டிருந்த ஒரு தொடர்கதை விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடர்வது போல எனக்குப் பட்டது. அவளை அருகே இழுத்து முத்தமொன்றை உதட்டில் கொடுத்தேன். கிரிஜா தூங்கத் தொடங்கிவிட்டாள். எனக்கோ தூக்கம் வரவில்லை. அவர் மணிக்கூட்டையே பார்த்தேன். எட்டு மணிக்கு நான், மார்க்கட்டில் சந்திக்கவிருந்த சேலிதான் சரஸ்வதி. இவள் ஏற்கனவே திருமணம் புரிந்தவள். சிலமாதங்களாக என்னை லவ்பண்ணும் இவள் ஏற்கனவே இன்னொருவனை லவ் பண்ணித் திருமணம் புரிந்தவள். தன்னையும் கூட்டிக் கொண்டுபோய் ரெண்டாந்தாரமாக வைத்திருக்க ட்டாம். இத்தனைக்கும் புருஷன் ஒன்றும் மோசமானவன் அல்ல. நான் திருமணமான விஷயம் ஊருக்கெல்லாம் தெரியும். ஏதோ விபத்து காரணமாக சரஸ்வதியுடன் உடலுறவும்செய்து விட்டேன். அவளோ, அதையே ஒரு ஆயுதமாகத் தூக்கி வைத்துக் கொண்டு "உம்மடை தேவை முடிஞ்சிட்டுது? இனி நான் ஆரோதானே" எனச் சொல்லிச் சொல்லி என்னை மிரட்டுகிருள்.

எனது தேவை முடிந்ததா? அல்லது அவளின் தேவை முடியவில்லையா? "உமக்கு பயமெண்டா, நான் கிரிஜாவிட்டைக் கேக்கிறன்" என அவள் மூன்று தினங்களின் முன்னர் சொன்ன போதுதான் எனக்குத் தலைவெடித்து, தீர்வுகாண 8 மணிக்கெல்லாம் சந்தையில் சந்திப்பதாகச் சொல்லியிருந்தேன். கிரிஜாவுக்கு உண்மையைச் சொன்னுல் சரஸ்வதியின் மிரட்டால் இருந்து தப்பலாமா? உண்மையைத் தெரிந்தும் என்னேடு கிரிஜா சண்டைக்கு வந்து, சுயிசைட் செய்து செத்துவிட்டால... வாழ்வில் இப்படியெல்லாம் நெருக்கடிகள் வருகின்றனவே. இதற்கு நானு காரணம்? தெளிவான விடைகள் எதுவுமே கிடைக்குமாப்போல படவில்லை. தூங்கி விட்டேன். கிரிஜா எழுந்து என்னை எழுப்ப "நல்ல பெரிய நண்டா மூண்டு வாங்கிக் கொண்டு வாரும்" என்று சொன்னவுடன், சரஸ்வதிக்குப் பயந்து பயந்து மார்கட்டை நோக்கி நடக்க வெளிக்கிட்டேன்.

சந்தை களை கட்டியிருந்தது. விழிகளால் துளாவி சரஸ்வதி எங்காவது தட்டுப்படாதிருக்க வேண்டும் என்ற நேர்த்தியுடன் பார்த்தேன். அவளைக்காணவில்லை. பெரிய நண்டைத்தேடி மீன் விற்கும் செக்ஸனுக்குப் போனேன். மூன்று உயிர் நண்டுகளை வாங்கிக் கொண்டு, ஒரு கிலோ சார்டின் மீன் வாங்கினேன். பொரித்துத்தின்னச் சுவையாக இருக்கும். கிரிஜாவுக்கும் சார்டின் என்ருல் உயிர்... "சார்டின் நல்ல மலிவாக உள்ளதே" என நான் வியந்தபோதுதான்– "நீரும் ஒரு ஆம்பிளேயே?" என்ற சத்தம் என் பின்னே கேட்டது. அது சரஸ்வதியல்ல, காளி.

"மன்னியும் சரஸ்வதி, கிரிஜா விடியவே எழும்பி நான் எட்டு மணிக்கு வெளிக்கிட்டதைக் கண்டிட்டுது...."

"உமக்கு உப்ப அவள்தான் முக்கியம், நான் சுயிசைட் செய்யப் போறன்...."

"சரஸ்வதி, உப்பிடி விசர்த்தனமாக் கதைக்காதையும். நான் மரி பண்ணின நான் எண்டது உமக்குத் தெரியும்தானே. நீரும் மரி பண்ணினனீர் எண்டது எனக்குத் தெரியும். எங்கள் ரெண்டு பேருக்கையும் இருக்கிற உறவு வெளியாலே தெரிஞ்சா உம்மடை ஹஸ்பண்ட் எப்பிடித் துள்ளுவாரோ அப்பிடித்தான் என்ரை வைவும் துள்ளுவா. நீர் அண்டைக்கு டைவோர்ஸ் எடுப்பன் எண்டு சொன்னனீர். உமக்கு நல்லாத் தெரியும் நான் கிரிஜாவை டைவோர்ஸ் பண்ணமாட்டன் எண்டது.. ரெண்டுபேரும் நடந்ததுகளை மறந்து விடுறதுதான் நல்லது.

"நீர் எல்லா ஆம்பிளையும் போலத்தான் பேசிறீர்.. எனக்கு எத்தினை போன் பண்ணி, அவர் இருக்கிருர் எண்டு தெரிஞ்சோண்ணை, பெம்பிளைக் குரல் மாத்திக் கதைச்சனீர்... பொறும் பொறும் எப்பிடியும் ஒரு சொலூஸன் கிடைக்குமெண்டு நீர் சொல்லேல்லையோ."

"மெல்லமாக் கதையும் சரஸ்வதி. முதலிலை சொலூஸன் ஒண்டு கிடைக்கும் போலதான் பட்டது. இப்பவெண்டா, அப்படியொண்டும் கிடைக்குமாப்போல எனக்குப் படலை. என்ரை குடும்ப வாழ்க்கையும், உம்மடை குடும்ப வாழ்க்கையும் குலையாம இருக்கிறதெண்டா, எங்கடை தொடர்புகள் இனிமேல் தொடராம விடுவதுதான் நல்லது... தொடருறதெண்டா, பழைய மாதிரி இருக்கவேணும்... அப்படியிருந்தா பெரிசாப் பிரச்சனையொண்டும் வராது...."

"நான் உம்மைத்தான் விரும்புறன். .. இனிமேலும் இந்த உறவு ரகசியமா இருக்கிறதை விரும்பேல்லை...."

"நான் உம்மை விரும்பேல்லயெண்டு சொல்லேல்லை, ஆனு, கிரிஜாவையும் விரும்புறன்.."

"ஒரு ஆண் ரெண்டு பெண்களோடை வாழ முடியாதோ?"

"உம்பிடிப்பட்ட வாழ்க்கையள் ரகசியமாத்தான் நடக்குது... உம்மடை அவர், இன்னெரு பெட்டையையும் வைச்சிருக்க விருப்பமெண்டா நீர் சம்மதிப்பீரே?"

"நீர் குதர்க்கம் பேசிறீர்? நான் இண்டைக்கு இரவே சுயிசைட் செய்வேன்..." என்றபடி சரஸ்வதி போய்விட்டாள்.

இந்த நேரம் பார்த்து பாய்க்கினுள் கிடந்த நண்டொன்று துள்ளிப் பாய்ந்து ஓடத்தொடங்கியது. நான் கையை நீட்ட அது எனக்குக் கண்ணுமூச்சி காட்டியது. எனது பரிதாப நிலையைக் கண்டு

**22 ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கவிதையாம்.....தூ.....!

## ஆனந்த் பிரசாத்

**புத்தாண்டுப் பா;**
இத்தேசப் புத்தாண்டுக்கு
உத்தேச மாக இன்னும்
பத்துநாள் இருப்ப தால்நாம்
முத்தமிழ் கவிதை செய்வோம்.

**பொங்கற் பா;**
தங்கமாய் நெல்(யாரோ) விளைக்க
சங்கத்துத் தமிழிற் -புதிய
ஜங்கியை அணிந்து கொண்டு-
பொங்கலைப் பாடு வோமே.

**தமிழ்ப்புத்தாண்டுப் பா;**
இத்தரை மீது நாங்கள்
நித்திரை கொள்ள வென்று
பத்தரை மாற்று மேனிச்
சித்திரைப் பெண்ணுள் வந்தாள்

**இரங்கற் பா;**
ஒன்றுக்கி ருந்து விட்டு
இரண்டுபேர் சண்டை போட
மூன்ருமாள் நடுவில் வந்தான்
நான்குபேர் தூக்கிச் சென்ருர்
ஐந்துபேர் கூட வந்தே
ஆறுதல் சொல்ல- மற்ற
ஏழுபேர் சோறு காய்ச்சி
எட்டுநாள் வரையும் தந்தார்
ஒன்பதாம் நாளில் மீண்டும்
பத்தியக் கறியும் சோறும்
11..........12....... ..........
13........(பிறகு பார்ப்போம்)

**அகநூறு;**
கனவிடை கிடந்து கொங்கைப்
புன லிடை திளைத்த மங்கை
நன விடை கிடைத்த போழ்தில்
அன லிடை விழுந்து செத்தான்.

**புறநானூறு;**
போருக்குப் போனுன் மறவன்
போரிலே செத்தான் சிறுவன்
கொட்டிலில் வாழ்வேன் குறவன்
கோவிலில் வாழ்ந்தால்
இறைவன்

இன்றுபோல் இருக்கிறது
நேத்தையா
அன்றுஅவ ரோஜாத்தை
மாத்தையா
இன்றைக்கோ வெறும்விளக்கு
மாத்தையா
என்றைக்கும் தலைமைபம்
மாத்தையா.

**காப்பியம்;**
சட்டியை எடுத்து வெண்ணைக்
கட்டியை உருக்கிப் பின்னர்
முட்டையைப் பொரியப்
போட்டால்
வட்டமாய்ப் பொங்கு தம்மா

**சிறுவர் பா;**
நிலா நிலா வானத்து மேலே
பலானது* ஓடத்து
மேலே(போலீஸ்)
விலா எலும் புடைத்த தாலே
கலாதியாய் கம்பிபின் னுலே
(* பலானது "தூள்" என்றறிக..)

**சினிமாப் பா;**
கலியாணம் செய்பெண் டாட்டி
கேட்டானே ஒருபோண் டாடீ
கதறவைத் தாள்போட் டாட்டி
கண்டனன் ஓர்வைப் பாட்டி

**முதியோர் பா;**
பஞ்சியைப் பாரார் தன்ர
அஞ்சுவெண் மயிரை நீவிக்
கெஞ்சினுர் "தம்பீ பாடு
இஞ்சியிடுப் பழகீ" என்று.

**புதுப் பா;**
வானத்தை
பார்த்துக் கொண்டிருந்தேன்
நட்சத்திரங்கள் தெரிந்தன
எண்ணிக்கொண்டிருந்தேன்
நிலவு தெரிந்தது

நிலவை
நோக்கிக் கொண்டிருந்தேன்
மேகம் மறைத்தது
விலக்கிப் பார்த்தேன்
அவள்
மாத விலக்கென்ருள்.

**படிமப் பா;**
கோழி
இட்டிட்டிட்டதானதை
நீரினுள்ளமிழ்த்தி
நோக்கிட
அடியிற் சென்றடைந்திட
அவ்விடையொன்று
மேனேக்கி மிதந்திட
உடைத்துப்பார்த்திட
அழுகிக் கிடந்திட
அறுந்தது.........போ!

## கவிதைகள் துண்டுப்படங்கள்

ஒலியில்
படம் வரைந்து காட்டுவது
சங்கீதம்
மொழியில்
படங்கீறிக்காட்டுவது
கவிதை

வரைவதற்கும்
கீறுவதற்கும்
வரைவிலக்கணங்கள்
கிடையாது
வார்த்தைக்கும்
வாத்தியத்துக்கும்
வித்தியாசமில்லை

சுகங்களும் சரி
ரணங்களும் சரி
சுரங்களால் தான்
உணர முடிகிறது

உடலும் மனமும்
உபாதைக்குள்ளாகும்போது
உபபாதை- கவிதை
உதவுவது - சங்கீதம்

இப்போதோ அனேகமாய்
இரண்டுக்குமே உபாதை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விளக்குமாத்துக் குஞ்சங்களும் விமர்சனங்களும்

அருண்

விமர்சனம் என்பது ஆயுதம் அல்ல. ஔடதம்தான். ஆனாலும் இந்நாளில் மருந்துகளே ஆபத்தான ஆயுதங்களாக ஆனது போல் விமர்சனம் பல நல் உணர்ச்சிகளையும் காயப்படுத்தப் பாவிக்கப்படுவது மனவருத்தத்துக்குரியது.

இப்படிப் பலராலும் விமர்சனம் ஆயுதமாக்கப் படுவதாலோ என்னவோ சாடுதல்தான் விமர்சனம் என பலராலும் விளங்கிக் கொள்ளப் படுகிறது. விளக்கப்படுத்தவும் படுகிறது.

உண்மையில் சாடுதல் அல்லது கண்டித்தல் மட்டும் விமர்சனம் அல்ல. ஒரு விடயம் பற்றிய விமர்சனம் எனும் போது அவ்விடயம் பிறப்பிக்கும் தாக்கம் பற்றிய கணிப்பீடு அவசியமானது. கணிப்பீடு எனும் போது ஒரே முகத்துப் பார்வை இருப்பின் அது பாரபட்சமானதே.

ஒன்றைப் பற்றி விமர்சிக்கும்போது அதில் உள்ள நல்லவை பற்றியும் நல்லவை அல்லாதன பற்றியும் காரணங்களுடன் ஒப்புவித்தல் அவசியமானதுதான். அது ஒரு முடிவைத்திணிப்பதில் முதன்மை கொள்ளக் கூடாது.

விமர்சனக்கட்டுரைகள் என முத்திரை குத்தப்படும் கட்டுரை களில் தராசுப்படமும் போடப் பட்டிருக்கும் கவனித்திருப்பீர்கள். உண்மையில் அக்கட்டுரைகளுக்கு தராசுப்படம் பொருத்தமானதாய் இருக்கும். ஆனால் அங்கு விமர்சனம் என்னும் பதம் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கும். ஒரு தராசை (துலாம்) பொறுத்தவரை ஒரு பக்கத்தில் நாம் வைக்கும் அளவுக்கு கூடுதலானதா குறைவானதா மறுபக்கத்தில் உண்டு என எடை போட முடியும் அல்லது அவ்வளவுக்கு சமனான பகுதிகளைப் பெறமுடியும். ஆக நாம் ஒரு புறத்தில் தீர்மானித்த அளவைக் கொண்டே எதுவும் தீர்மானிக்கப்படும் - இத்தகையது விமர்சனமாய் இருக்க நியாயம் இல்லை. ஆனால் வியாபாரமாய் இருக்க கூடுதலான நியாயம் உண்டு. சில தீர்மானங்களை முடிந்த முடிவாக வைத்துக் கொண்டு ஒன்றை விமர்சனம் செய்ய புறப்படக்கூடாது. அங்கு ஒரு ஆராய்ச்சி மனப்பான்மை அவசியமாகிறது. ஒரு ஆராய்ச்சியாளரிடம் அறியும் ஆவல் இருக்கும். அறிந்ததை அறிவிக்கும் பக்குவம் இருக்கும். இவை இல்லாத போது அராஜகம்தான் பிறக்கும் - அராஜகம் எப்போதும் கண்டிப்புக்குரியதே.

ஒரு தராசைக் கண்டவர்கள் இரு புறமும் சமனான தட்டுகள் சமச்சீரான தோற்றம் எனவே நியாயத்தின் சின்னமென எண்ணமிடக்கூடும். அவர்கள் அத்தராசு வியாபாரத்தின் உயிர்நாடி எனும் உணர்ந்து கொள்ளாத உண்மை அறியாதோரே. வியாபாரத்தில் நியாயம் இருப்பதாக யார் சொல்லமுடியும்?

துலா என்பதை ஞாபகப்படுத்தினீர்களாயின் ஒரு அச்சில் ஒரு புறம் பருத்த கனத்த பகுதியும் மறுபுறம் மெலிந்த கனமில்லாத பகுதியும் தோன்றும். நியாயத்தின் சின்னமென இதை ஒப்புக் கொள்ளாவிடினும் கடமையின் சின்னமென இதை அங்கீகரிக்க முடியாமல் போகாது. கிணற்றுக்குள் தேங்கியிருக்கும் நீரை வெளியே எடுத்து நிலத்துக்கு பரவப் பண்ணுவதில் இதன் உழைப்பு உன்னதமானது. நீரை அள்ளும் போது பாசி வரலாம். இலைகள் வரலாம். நிலத்துக்கு வந்தபோதுதான் அவை புலப்படுகிறது. என்னதான் வந்தாலும் இறைப்பில் மட்டும் ஆரோக்கியம் இருக்கிறது.

இந்தத் துலாவுக்கு ஒப்பானதாய்தான் ஒரு விமர்சனம் இருக்க வேண்டும். பிழைகளை மட்டும் துலாவிப்பிடிப்புதான் விமர்சனம் என்றால் அந்த விமர்சனத்தால் யாருக்கு என்ன பயன்? அதை மேற்கொள்பவா களுக்கு மட்டும் பிழைகள் கண்டுபிடிக்கும்வல்லான்/வல்லாள் எனப்பெயர் (?) கிடைக்கக்கூடும். தவறுகள் சுட்டிக்காட்டப்படலாம் திருந்துவதற்காக. உயர்வுகள் மெச்சப்படலாம் ஊக்கப்படுத்தவும் ஆவல்படுத்தவும். ஆலோசனைகள் வழங்கப்படலாம் அடுத்த முயற்சிக்கான ஆரோக்கியத் துக்காக விளக்கம் கேட்கலாம் விளங்கிக் கொள்வதற்காக இவற்றைவிட்டு பிழைகள் மலிந்து கிடக்கின்றன என காட்ட முனைவதால் எந்த நன்மையும் இல்லை. அதைவிட எதுவும் செய்யாமல் இருப்பது ஆரோக்கியமானது.

ஒரு ஆக்கம் அல்லது ஒரு செயற்பாடு ஒரு வாசகனை அல்லது இரசிகனை பாதிக்கும் அல்லது தூண்டும் முறைகள் பலவாறாக இருக்கலாம். இது மனநிலை, தான் சார்ந்த கொள்கை. அறிந்து கொண்ட அளவு - ஏன் உணர்ச்சிகளில் கூட தங்கியிருக்கிறது. இவற்றின் அளவுகள் ஒருவருக்கொருவர் ஒத்ததாய் இருப்பதில்லை. ஆக ஒரு ஆக்கம் அல்லது ஒரு செயற்பாடு பற்றிய அபிப்பிராயம் ஆளுக்காள் வேறுபடும். அவரவர் தத்தம் அபிப்பிராயங்களை தெரிவிப்பது அவரவர் சுதந்திரம். ஆனால் அபிப்பிராயம் எனும் பெயரில் இன்னொருவரைப் புண்படுத்து வது சுதந்திரம் எனக் கருதமுடியாது. அதே நேரம் வெறும் அபிப்பிராயங்கள் மட்டும் பூரண விமர்சனம் ஆகமாட்டாது. தத்தம் நோக்கங்களையே ஒரு விமர்சனம் பிரதிபலிக்கவேண்டும் என எதிர் பார்ப்பது கண்முடித்தனமானது. ஆனால் விமர்சனத்துக்கு

**19ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழம் ஒரு தொடர்கதை 2

## அத்தியாயம் 11

சின்னத்தம்பி வேலாயுதம்

ஒரு சராசரி மனிதனை இடதுசாரிகளை ஆதரிக்கும்படி தூண்டக் கூடிய காரணிகளில் ஒன்றுன "வட்டி" என்பது தமிழர்களைப் பொறுத்தவரை எத்தகைய சமுதாயத் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது என்பதை இவ்வாரம் பார்ப்போம்.

ஒரு பொருளாதார அமைப்பின் பணவீக்கம், முதலின் உற்பத்திவலு, காலவரையறைகளைக் கணிப்பீடு செய்துதான் ஒரு முதலுக்கு வட்டி வீதங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. பணவீக்கம், யுத்தம், உற்பத்தி வீழ்ச்சி போன்ற பல காரணிகளால் இந்த வட்டிவிகிதம் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன.

வட்டி கணிக்கப்படும் முறை, அதைத் திரும்ப அறவிடும்முறை, நிபந்தனைகள் நாட்டுக்கு நாடு அல்லது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வேருக இருப்பினும் சில பொது விதிகளும் உண்டு. அதாவது முதலின் தொகைக்கு மேலாக வட்டியை அறவிடச் சட்டங்களில்லை. 1000 ரூபாவை ஒருவர் கடன் கொடுத்தால் ஆகக் கூடிய வட்டியாக 1000 ரூபாவை மட்டுமே பெற்றுக் கொள்ளச் சட்டம் வழி செய்கிறது. ஆகவே 1000 ரூபா வட்டி வளர முன் முதலை மீட்டுக் கொள்ள வேண்டியது முதலைக் கொடுத்தவருடைய பொறுப்பாகும்.

இங்கு நான் ஆராய முற்படுவது வட்டி - முதல் பற்றிய சர்வதேச விதிகள் பற்றிய அல்லது சர்வதேச சமூக நடைமுறை பற்றிய பிரச்சனையை ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு எமது யாழ்ப்பாணச் சமூகம் எப்படி தமது உடன் பிறப்புக்களிடமே வட்டியை அறவிடுகிறது என்பது பற்றியும், தம்மால் முடிந்தளவுக்கு அதை எப்படி சிங்கள நாடு, பர்மா, மலாயா, சிங்கப்பூர், வியட்னும் வரையிலும்கூட அமுல் நடத்தியது என்பது பற்றியும் ஆகும்.

இலங்கையில் அரச, தனியார் வங்கிகளில் வட்டி வீதம் 12% ஆக இருந்த காலகட்டத்திலிருந்து 24% வரை வளர்ந்துள்ள தற்போதைய கால கட்டம் வரை யாழ்ப்பாண தனியார் வட்டி வீதம் 60% ஆக இருந்தது. இது எப்படி என சிலரை ஆச்சரியப்பட வைக்கும். ஒருவர் 1000 ரூபாவை இன்னெருவரிடம் வட்டிக்கு எடுக்கிருர், அந்த 1000 ரூபாவுக்கு பெறுமதியான "பொறுப்பு" ஒன்றைப் (நகை) பெற்றுக் கொண்டு மாதம் 50 ரூபா வட்டியை அறவிடுகிருர். ஆகவே 12 மாதங்களில் $50^{*}12=600$ ரூபா வட்டியாகச் செலுத்தப் படுகிறது. ஆகவே 60% வட்டி அறவிடப் படுகிறது.

இதிலே மிக மோசமான விடயம் ஒன்றுண்டு. அதாவது பொறுப்புக் கொடுத்து 1000 ரூபாவை கடனுகப் பெறும் ஒருவரிடம் கொடுக்கும் முதலிலே முதல் மாத வட்டியைக் கழித்துக் கொண்டு 950 ரூபாவை கொடுப்பார். இப்போ அவர் பெற்ற முதல் என்ன 950 என்பதா? 1000 என்பதா?

ஒரு முதலுக்கான பொறுப்பு என்பது நபருக்கு நபர், கடைக்குக் கடை வித்தியாசப்படும். பெறப்போகும் முதல் போல் இரு மடங்கு பெறுமதியான பவுண் கேட்டுப் பெறப்படும். சில சமயங்களில் மாத வட்டியைக் கட்ட முடியாதபடி கூலிகள், விவசாயிகள் நோய் துன்பம், மருந்துச் செலவு என்று சந்திக்க வேண்டி ஏற்பட்டு இரண்டு மாதங்கள் வட்டி செலுத்தா விட்டால் பொறுப்பாக வைத்த இருமடங்கு நகையும் பறிமுதலாகும்.

இது போன்ற வட்டியின் சூட்சுமங்கள் நிறையவே உண்டு. நான் இதில் கைதேர்ந்தவனல்ல. ஆனுல் இலங்கையில் வாழ்ந்த காலத்தில் சில சமயங்களில் நேரங்கிடைத்த போது சில வட்டிக் கடைகளையும், சில வட்டிக்குக் கொடுக்கும் நபர்களையும் நோட்டம் பார்த்திருக்கிறேன். (எங்கே நகைகளை ஒளித்து வைத்திருக்கிருர்கள் என்றல்ல. அப்படி செய்திருந்தால் நானே இயக்கம் துவங்கி தலைவனுய் வந்து தலைதட்டுப்பட்டிருப்பேன்). இந்த நோட்டம் பார்ப்புத்தான் என்னை ஒரு இடதுசாரி ஆதரவாளனுக்கியிருக்க வேண்டும். அப்பப்பா அத்தனை கொடுமைகளுக்கான இடம் வட்டிக்கடைதான்.

இவ்வளவுக்கும் இந்த வட்டிக கடைகளின் கருமபீடத்தில (counter) நின்று நிமிர்ந்து பார்த்தால் முருகன், விநாயகர் தொடக்கம் யேசு, மேரி, புத்த பகவான் என சகல தெய்வங்களின் படங்களும் வைக்கப்பட்டு சாம்பிராணி ஊதுபத்தி மணம் கமழும். வட்டிக்கு காசு எடுப்பவன் "தெய்வமே கடனை மீண்டு என் நகைகளை மீட்டு விட வேண்டும்" என்று தெய்வத்தை வேண்டிக்கொள்ள வசதியாக வைத்திருக்கிருர்களோ அல்லது தெய்வங்களைச் சாட்சியாக வைத்து மக்களை உரிக்கிருர்களா என்பதற்கு என்னுல் முடிவு கட்ட முடியவில்லை.

இவ்வளவு மோசமாக மக்களை உறிஞ்சும் வட்டிக் கடைக்காரனிடமும், தனியாட்களிடமும் மக்கள் ஏன் தெரிந்து கொண்டும் போகின்ருர்கள். காரணம் இங்கும் அங்கும் ஒன்றுதான் ஆனுல் அங்கே மிகமோசம். அதாவது அரசினது அல்லது அரச அனுமதி பெற்ற வங்கிகளில் கடனை பெறுவதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதில் சிவப்பு நாடா ஒரு காரணமாகும். மற்றும் சாதாரண கூலிகள், விவசாயிகளுக்கு அது மிகக் கஷ்டமானதாகிறது. அதனுல் அவர்கள் இலகு வழியை நாடிச் சென்று பாதிப்புக்குள்ளாகிருர்கள்.

இத்தகைய வட்டிக்காரர்கள் மக்களை அட்டைகள் போல் உறிஞ்சுவதை ஓரளவுக்காவது தீர்க்க எண்ணிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசு மக்கள் வங்கியை திறந்து விவசாயிகள், நகைகளை அடைவு வைக்கும் வசதியை ஏற்படுத்திக்கொடுத்தது. அத்தோடு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கிகளை ஏற்படுத்தி அதன் மூலமும் கடன் பெறவும், விவசாயப் பணிமனைகளைத் திறந்து விவசாயக் கடன்களைப் பெறவும் வழிசெய்தது.

இங்கு ஒரு விடயத்தை ஞாபகமூட்டல் நலம். கிளிநொச்சியில் கலாநிதி என். எம். பெரேரா மக்கள் வங்கியை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்த போது தலைவர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் இளைஞர்களைச் சேர்த்துக்கொண்டு (குறிப்பாக கொடிகாமம் "ஐயா"வின் மகன் குணம்) கறுப்புக்கொடி பிடித்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள். பொலிஸார் குண்டாந்தடிப் பிரயோகம். இவர்கள் கறுத்தக் கொடி பிடித்தது. தமிழுக்காகவா, யாழ்ப்பாண வட்டிக்காரருக்குக்காகவா, கிளிநொசசி விவசாயிகள் எக்கேடு கெட்டாலென்ன? எமது அரசியல் செழிப்பாக வளர்ந்தால் சரியென்பதற்காகவா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதை மக்கள் முடிவு கட்ட வேண்டும். தமிழுக்காக அதிகமாக ஓலமிடுபவர்களில் பெரும்பான்மையானோர் மக்கள் நலனை விட 'வட்டி' நலனில் கரிசனையுடையவர்கள்தான் என்பதே எனது முடிவு. எமது வட்டிக் கடைக்காரர்கள் யாழ்ப்பாணத்தில் செய்ததைத்தான் சிங்கள நாடுகளிலும் செய்தார்கள். ஆனல் ஒரு சிறு வித்தியாசம். என்னவென்ருல் சிங்கள மக்களில் பெரும்பாலானவர்களிடம் நகை கிடையாது. அதனல் 'மனச்சாட்சி'யை பொறுப்பாக வைத்து தமிழர்கள் விவசாயக் கடனைக் கொடுத்துப் பின் அறுவடை செய்து சூடுமிதிக்கும் தருணம் லொறியுடன் சென்று வட்டி, முதல், போக்குவரத்து, தொழிலாளர் கூலி போன்ற இன்னேரன்ன பிறவுக்குமாக முடையாக நெல்லைக்கட்டி அந்த நேர சந்தை விலையிலும் 20% 30% விலை குறைத்து கணக்குப்போட்டு களத்தைச் சுருட்டிக் கொண்டு தங்கள் அரிசி ஆலையை நோக்கிச் செல்வர். அந்த விவசாயியும் 'மாத்தயா இல்லாட்டி கமம் இந்த முறை விளைஞ்சிருக்குமா' என தனதாட்களுக்கு விளக்கம் கொடுத்து அடுத்த வருட 'கடன் எடுப்பு'க்கு காக்கா பிடித்து வைப்பார்.

ஆனல் அரசியலறிவு வளர, கல்வி வளர மேற்கூறிய சம்பவங்கள் சிங்கள மக்களின் சிந்தனையைத் தூண்டியதுமல்லாமல் தமிழர் மீது ஒரு வெறுப்பை ஏற்படுத்தியதுடன் வன்முறையை நாடச் செய்தது. எல்லாத் தமிழரும் வட்டிக்கடை நடத்தவில்லையென்ருலும் பொதுவாக தமிழர்களின் சுயநலப் போக்கு இப்படித்தான் எனச்சில சிங்கள நண்பர்கள் என்னுடன் உரையாடியுள்ளனர்.

நாங்கள் இப்படியெல்லாம் செய்யக் கூடிய கெட்டிக்காரர் என எமது இனத்தின் பெருமைகளைப் புகழ்ந்து கொள்ள முன் இப்படியான வட்டி இம்முறைகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய சமூக உடன்பாடு எமக்குள் எப்படி வந்தது. சர்வதேசமும் இல்லாத நடைமுறை எப்படி எமது இனத்தால் பின்பற்றப் படுகிறது என்பதை நோக்க வேண்டும்.

வட்டிக்கு வாங்குவோர் இருவகையினர். முதலாவது வகையினர் வியாபார நோக்கோடு வட்டிக்கு எடுப்பவர். வட்டிக்கு எடுத்த முதலை வியாபாரத்தில் விட்டு அந்த வட்டியை மக்களிடமே அறவிட முடியும் என்ற நாட்டின் பொருளாதார நிலையை கணக்கிட்டு எடுப்பவர். இவர் சிலவேளைகளில் மட்டுமே பாதிப்புக்குள்ளாவார் என்ருலும் வியாபாரி என்பதனல் ஒருநாள் இழந்ததை இன்னொருநாள் அல்லது இன்னொரு வியாபாரத்தால் எடுக்கக் கூடியவர்.

தனது அன்ருட பிரச்சனைகள் வைத்தியம், விவசாயம் போன்றவற்றின் செலவினங்களுக்கு வட்டிக்கு எடுப்போர் இரண்டாவது வகை. இவர்களே பாதிப்புக்குள்ளாகும் மோசமாகச் சுரண்டப்படும் மக்களாவர். இவர்களுக்கான கடன் வசதி முறைகளை அரசினுல் மட்டுமே ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அத்தகைய அரசுகளை ஆட்சிக்குக் கொண்டு வருவதில் இவர்கள் முனைப்பாகச் செயற்படாவிடின் இவர்களை உறிஞ்சுபவர்களின் அரசியல் கோசங்களுக்குப் பலியாகிச் சந்ததி சந்ததியாகத் துன்புற வேண்டியதுதான்.

வடஅமெரிக்காவிலும் சரி, ஐரோப்பா, யப்பான், ஆகியவற்றை எடுத்தாலும் சரி, மூன்ரும் உலக நாடுகளை எடுத்தாலும் சரி 60% வட்டிக்கு கொடுக்க, வாங்க யாரும் இல்லை என்றே என்னல் முடிந்தவரை அறிய முடிகிறது. அதனல் தான் ஒரு விடயத்தை நாம் இங்கு நோக்கவேண்டும். நீதி, நியாயமற்ற சமூக விரோத வட்டி முறையை சரியென அங்கீகரிக்கக் கூடிய ஒரு சமூகத்திடன் ஏனைய சமூகங்களும் வாழ வேண்டுமென்ற தார்மீக மனப் பான்மையை எதிர்பார்ப்பது எப்படி? தான் மட்டும் வாழ்ந்தால் சரி என்று நினைக்கக்கூடிய ஒருவனுல் தான் 60% வட்டி வசூலிக்கவும், முதல் மாதவட்டியை முதலில் கழித்துக் கொள்ளவும் முடியும். இதற்கு அனுமதியளிக்கக் கூடிய சமூக, அரசியல் அபிலாசைகளை அதிக அளவில் கொண்ட இனம் ஒருவிடுதலைப் போராட்டம் நடத்துகின்றதென்ருல் அதன் அர்த்தம் இவைகளைச் சுதந்திரமாகச் செய்யச் சுதந்திரம் தா என்று தான் கொள்ள வேண்டும். ஏன் வெளிநாட்டில் வாழும் அகதித் தமிழர்கள் இந்த தேசவழமைகளைக் கைக் கொள்ள அனுமதி என்று தமது நாடுகளிடம் கோரிக்கை விடவும் கூடும்.

கனடாவில் சீட்டுகளாலும், வட்டிகளாலும் கொலைகள் நடந்தபோது பொலிஸார் சீட்டுகள் பற்றி விளங்கிக் கொள்ளப் பெரும் கஷ்டப் பட்டார்கள். சீட்டு பற்றிக் கூறும் போது, இதுவும் தமிழரின் பாரம்பரிய சுரண்டற்கலை. தாச்சியாக உருவம் எடுப்பதன் மூலம் முதல் மாதமே சுளையாக எடுத்து வட்டிக்கு விட்டு அந்த வட்டியிலே அந்தச் சீட்டைக் கட்டி முடிப்பது. தாச்சியாவதற்கான தகைமை ஆள் வகையாக மாட்டும் வரை போன், அவருடைய வாழ்வில் கரிஜனை, இலவசமாக ஒரு சிரிப்பு சுகம் விசாரிப்பு இவ்வளவுக்குள் அவன் இளிச்சவாயன் தானு என்பதை கண்டு பிடித்து விட வேண்டும் சீட்டு பற்றி அதிகம் எழுதத் தேவையில்லை. ஏனெனில் நீங்கள் எல்லோரும் (பெரும்பான்மை) வாழ்க்கையில் ஒரு தடவையாவது வெளிநாட்டில் பட்டுப் பழுத்திருப்பீர்கள்.

வெளிநாடுகளில் உள்ள தமிழர்களிடம் ஒரே ஒரு கேள்வி கேட்க ஆசை. உங்களில் யாராவது ஒரு யூதனுக்கு, இத்தாலியனுக்கு, சீனனுக்கு என்று வேறு ஏதாவது இனத்தினருக்கு 60% வட்டிக்குக் கொடுத்து வாங்கியதுண்டா? சீட்டுப் பிடித்ததுண்டா? இல்லையெனில் நீங்கள் எங்கள் மக்களை உறிப்பதில் அல்லது உறிஞ்சுவதில் மட்டும் கைதேர்ந்தவர்கள் என்று தானே அர்த்தம். உங்களால் வேறு இனத்தினரிடம் திறமையைக் காட்ட முடிந்தால் எங்கள் இனத்திற்கு பெருமை சேர்ப்பவர்கள் என்று கூடக் கூறிவிடலாம் வேறு இனத்தினரிடம் இவர்கள் வியாபாரத்திறமையை காட்டக் கூடியவர்களாயின் முப்பத்தைந்து பத்திரிகை, முன்னூற்றி முப்பத்தைந்து நகைக்கடை, மூவாயிரத்து முன்னூற்று முப்பத்தைந்து மிளகாயத்தூள் கடை திறப்பார்களா? இவர்கள் எல்லாம் கார்ள் மார்க்சின் 'மூலதனத்தை' ஒரு தடவை மேலோட்டமாகவாவது பார்த்தல், அவசியம். உற்பத்தி, சந்தைப் படுத்தல், நுகர்வோர், நிகரலாபம் பற்றி அறியலாம். (தொடரும்)

## ஒரு சிறுகதை

சிறிமா காலத்தில் வெங்காயம் விற்று வீடு கட்டினுன் தமிழன். வெங்காயத்தை உரிப்பது போல 'துரோகிகளை' உரித்து அகற்றுகிருர்கள். வெங்காயத்தின் முதல் தோல் துரையப்பா. கடைசியாக உரிக்கப்பட்ட தோல் மாத்தையா. வெங்காயம் முடியும் வரை உரிக்கக் கூடியது. உரிப்பதில் தேர்ச்சி பெற்றவர் எம்மவர் என்பது சிறப்பம்சம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏனிந்த தற்கொலைகள்

**பவான்**

இளம்பெண்களைத்தற்கொலைக்குத் தூண்டும் காரணிகள் இன்று நம்மத்தியில் மலிந்து வருவதாகத் தோன்றுகிறது. புலப்பெயர்வின் இயந்திரச் சூழலில் எமது கலாச்சார, வாழ்வு மீதான பெறுமானங்கள் அவற்றுக்கேயுரிய எதிர்பார்ப்புகளுடன் கூடிய அனுபவகுறைவான பெண்களை.... பல ஊர்களிலும் அடிபட்ட, வாழ்வின் விழுமியங்களை அவருக்குள் தங்கியிருந்த இருக்கிற தேசங்களில் விலைப்பொருட்களாக நோக்கும்மாப்பிள்ளைகளுக்கு காசு, நகை, வீடு காணியோடு சீதணமாக அனுப்பி வைப்பதன் மிக மோசமான பக்கவிளைவாகவும் அத்தற்கொலைகளைப் பார்க்க முடியும். மூச்சுமுட்டுகின்ற முட்டறைக்குள் திணறிக் கொண்டிருக்கும் சின்னஞ்சிறிய இளம்நடுத்தரவயதுப்பெண்களின், அனல் மூச்சும் முனகலும், அந்த ஆத்துமாக்களின் அவலங்களும் செவிட்டுச்செவிகளில் எட்டுவதோ, மரமண்டைகளையோ வறண்ட இருதயங்களையோ தொடுவதில்லை என்பதோடு அவர்கள் தங்களை மாய்த்துக் கொள்வது தான் பிரச்சனைகளிற்கான தீர்வா? அன்னியச்சூழலில் அரை வேக்காட்டுத்தனமாக உணர்ச்சிகளை மதிக்காமல் சக மனுசியின் மன உணர்வுகளை சட்டை பண்ணாத கணவன்மார்களுக்கும் வயதுக்கு வந்த பெண்களை சுமையாக கருதுகின்ற, அவர்களுக்கு மணம் செய்து வைப்பதை சாதனையாகக் கருதுகின்ற, ஒரு மனிதப் பெண்ணுக்குரிய மன உணர்வுகளை புரிந்துகொள்ள முடியாத, வறட்டுக் கௌரவத்துக்காக மாப்பிள்ளை தேடும் பெற்றோர். சகோதரர் களையும் பெண்ணின் விருப்பை, கருத்தை உரிமையை பற்றி எண்ணிப்பார்க்காத சிந்திக்கத் தெரியாத தனி மனிதனின் வாழ்வில் அத்துமீறல் செய்கிற சமுதாயத்துக்குமான தண்டனையாக அவர்கள் தம் உயிரை மாய்ப்பது தடித்த சமுதாயக் கரி நாக்குகளுக் தீனியாக அமைகின்றவிடத்தும், தங்கள் பிரச்சனைகளை சொல்வதற்கும் அப்பிரச்சனைகளிற்கு தீர்வாக தற்கொலை செய்வதற்கும் தள்ளப்படுவதாக இந்தச்சமுதாயம் வெட்கப்பட வேண்டிய விடயம் மனித நேயமிருப்பவர்கள் வேதனைப்படவேண்டிய விடயமும் ஆகும். நெருக்கடிகளுக்கு உள்ளாகின்ற பெண்களில் பலா ஏஜென்சிகாரர்களின் மனைவிகளாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

ஆகக் குறைந்தது தங்கள் மரணங்கள் மூலம் சொல்ல நினைத்ததை எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்யும் அளவிற்கு கூட இப்பெண்களால் முடியாதிருப்பது ஒரு வகையில் இந்த பிற்போக்குச் சமுதாயக்கருத்தியலுக்கு கிடைத்த வெற்றி என்றும் சொல்லலாம். எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற இந்த உயிரின் பெறுமதியை அளவிடுவதற்கில்லை. ஒரே ஒரு முறை மாத்திரமேகிடைக்கக்கூடிய இந்த மகத்தான மனிதப்பிறவியில் இழக்கின்ற ஒவ்வொரு நாட்களுக்காகவும் ஏங்கிக் கவலை கொள பவர்களாக இருக்க வேண்டிய நாம் எம்முயிரை மாய்த்துக்கொள்வதா? நம் மத்தியில் மலிந்து வரும் பெண்களின் தற்கொலைகள் ஒரு போதும் பத்தோ பதினொன்றாக இருக்க முடியாது. தனது இரண்டு பிள்ளைகளையும் கொலை செய்துவிட்டு தற்கொலைக்கு முயற்சித்த இளம்பெண், திருமணமாகி ஒரு மாத காலத்துக்குள் குடும்பத்தினரின் கதைகளைக் கேட்டு கொடுமைப் படுத்திய கணவனிடமிருந்து கடலில் விழுந்து தற்கொலை செய்த பெண் இன்னும் எத்தனையோ இவைகள் இந்தப் பெண்களின் தனிப்பட்ட குடும்பப்பிரச்சனைகளா இல்லை சமூகப் பிரஞ்ஞையுள்ளவர்கள் விவாதிக்கவேண்டிய சமூகப் பிரச்சனைகளா? வேலையற்றிருக்கும்வெட்டிப்பேச்சு பேசும்மனித ஜந்துக்களுக்கு இவை தனிப்பட்ட பிரச்சனைகளாகவோ அவளை அவனோ அவனை அவளோ வச்சிருக்கிற வம்புக்கதைகளாக இருக்கலாம். ஆனால் இருப்பை மனித நேயத்தை உயிரின் மகத்துவத்தை மனித மனங்களின் அவலங்களை, மனிதனை பெண்ணை சமூகமாகப் பார்க்கிற சமூக பிரஞ்ஞையுள் வெளிக்கொணர்ந்து தீர்வு சொல்லப்பட போராட வேண்டிய இவை போன்ற உயிர்ப்பலிகளை தடுத்து நிறுத்தவேண்டிய கடப்பாடு உள்ளது.

இங்கே அரசாங்க சமூகசேவை பொது ஸ்தாபனங்கள் வழங்கப் படுகின்ற பெண்களுக்கான பாதுகாப்பு சேவைகள் பிரச்சனைகள் சம்பந்தமான ஆலோசனைகள் இன்னும் எம் சமூகத்தை வந்து சேராதிருப்பதும் சமூகசேவைத்துறையிலுள்ள எம்மவர் ஒரு சிலரின் கவனமோ பெண்களின் குடும்ப உளவியல் சமூகப்பிரச்சனைகளின்பால் எம்மவர் தம்மை ஈடுபடுத்திக கொள்வது மிகவும் குறைவாக இருப்பதும் கூட ஒருவகையில் தற்கொலை போன்ற முடிவுகளை சிலர் எடுப்பதற்கு மறைமுகமான காரணிகளே. இங்கே சங்கங்கள் தவிர்க்கப்படுகின்றன. மூன்றுந்தர சினிமாப்படங்கள் எம் மத்தியில் மலிந்துள்ள வியாபாரப் பத்திரிகைளிலும் சமூகத்தின் உண்மையான பிரச்சனைகளோ பெண்களது முக்கிய பிரச்சனைகளோ வெளிக்கொணரப் படுவதில்லை என்பதோடு பிரச்சனைகளைத் திசைதிருப்பவும் அவற்றிற்கான தீர்வுகள் கொலைகள் பழிவாங்கல்கள், தற்கொலைகள் என காட்டப்படுவதும் அவற்றை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வியாபார நோக்கில் கையாள்பவர்களும் சமூக அடாவடித்தனங்களுக்கும், அப்பாவிப் பெண்களது தற்கொலைகளுக்கும் பொறுப்பேற்க வேண்டியவர்களே.

பெண்களே பிரச்சனைகளை நண்பர்கள் நம்பத்தகுந்தவர்கள் சமூகசேவை குடும்பநல ஆலோசகர்களிடம் தெரியப்படுத்துங்கள். விவாதியுங்கள் ஆலோசனைகளைப் பெறுங்கள். ஈ.எஸ்.எல். வகுப்புக்கள் கல்லூரிகளில் வழங்கப்படுகின்ற ஆலோசனைகள் பிரசுரங்களை கவனத்திலெடுங்கள். உங்கள் ஆசிரியரின் உதவியை நாடுங்கள். உங்கள் பிரச்சனைகளில் உங்களிற்கில்லாத அக்கறை வேறு யாருக்கும் இருக்கப்போவதில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள். மூன்றாந்தரச் சஞ்சிகைகளையும் வீடியோப்படங்களையும்குப்பையில் போட்டுவிட்டு, தரமான பெண்களின் பிரச்சனை வெளிக்கொணரும் பெண்களால் வெளிவிடப்படும் பயனுள்ள பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வாசித்து உங்களுக்குள்ள பிரச்சனைகள் தனிப்பட்டதோ குடும்பப்பிரச்சனைகளோ இல்லை என்பதையும் இவை சமூகப்பிரச்சனைகளே என்பதை இவை வெளிக்கொணரப்பட்டு விவாதிக்கப்பட்டு சமூகம் குற்றவாளிக்கூண்டில் ஏற்றப்படுவதோடு பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவ முன்வாருங்கள் உங்களை விழிப்படையச் செய்வதற்கு இன்னும் எத்தனையோ பெண்கள் தற்கொலை செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்களா? இது உங்கள் பிரச்சனைகள் நீங்களே போராட வேண்டும் ஒன்று சேருங்கள் ஆரோக்கியமான ஆண் பெண் நட்புறவோடு அறிவுள்ள அழகிய சமுதாயமொன்றை கட்டி எழுப்புவோம்.

## விமர்சனங்களும்..

நோக்கங்கள் உண்டு. அதற்கு ஒழுகுவதுதான் ஒரு விமர்சகரின் கடமை.

ஒரு ஆக்கம் அல்லது செயற்பாட்டின் சொந்தக்காரரை ஊக்கப்படுத்துவதும் (இதுபோன்ற பிற ஆக்கங்கள் அல்லது செயற்பாடுகளைத் தொடா) ஒரு ஆக்கம் அல்லது செயற்பாட்டைத்தர இருப்போருக்கு நம்பிக்கையும் ஆலோசனைகளும் வழங்குவதே ஒரு முழுமையான விமர்சனத்தன் பிரதான நோக்கங்கள்.

ஒரு விடயம் பலருக்காக சொல்லப்படுகையில் அதனால் யாவருக்கும் பயன் இருக்க வேண்டும். அது சொல்லப்படும் முறையில் இங்கிதமும் இருக்க வேண்டும். குறைகள் சொல்லப்படுவதாயின் நாசூக்காய் சொல்லப்படவேண்டும். மெச்சுவதாயின் மனத்தைரியத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்க வேண்டும் - வெறும் நக்கல், நளினங்களாலோ, வெறும் அதீதப் புகழ்ச்சியாலோ அவர்களுடன் ஒரே குடையின்கீழ் உள்ளவர்கள் குதூகலிக்கலாமே அல்லாமல் பொதுப்படையாய் எதையும் சாதிக்கப் போவதில்லை.

இப்போது விமர்சனம் எனும் போர்வையில் தனிப்பட்ட தாக்குதல்களும்காழ்ப்புணர்ச்சிக்கு வடிகால் தேடும் முயற்சிகளும் தனிப்பட்ட முறையில் உடன்பாடற்ற கொள்கைகளைத் தூற்றுதலும்மேற்கொள்ளப்படுவது விமர்சனம் எனும் உன்னத தாற்பரியத்தை கறைபடுத்தும் பிரயத்தனங்களே - இத்தகைய குதர்க்கங்கள் புரிவோர் கொஞ்சம் யோசிக்க வேண்டும். தங்களுக்கு மனச்சாந்தி தேடுவதற்கு வெகுசனச்சாதனங்களைப் பயன்படுத்துவதிலும் பலரும் பயன்பெறும் வகையில் எவ்வளவோ நல்ல விடயங்களை இச்சாதனங்கள் மூலம் வெளிப்படுத்தலாம். இவர்களுக்கு இன்னுமொரு தாழ்வான வேண்டுகோள். இத்தகைய விழலுக்கான இறைப்புக்களுக்கு விமர்சனம் என்று கூறாதீர்கள். பொதுப்படையாக விமர்சனம் என்று பொதுசனத்தொடர்பு ஊடாக சமர்ப்பிக்கப்படுவன எல்லோரையும் வசீகரிக்கக் கூடியதாயும் பெறுமானம் உடையதாயும் இங்கிதமானதாயும் அமைந்தால் விமர்சனத்தால் நன்மை உண்டு அது பூரண விமர்சனமாயும் அமைய வாய்ப்பு உண்டு. இதற்கு ஒரு விமர்சகருக்கு மனோவியல் பற்றிய பரீட்சயமும் ஓரளவு அவசியமாகிறது.

பொதுவாக விமர்சனம் என்பது தனிப்பட்ட மதிப்பீடுதான் அதற்கான வெகுசன அங்கீகாரம் உறுதிப்படுத்தப்படின் அதனால் ஒரு வலு உருவாகும். உண்மை. ஆனால் சிலர் சட்டாம்பிள்ளை நினைப்பில் தங்கள் மதிப்பீடுதான் வெகுசன அபிப்பிராயங்களை தீர்மானிக்கிறது என எண்ணுவதை கண்மூடித்தனம் என்றேசொல்ல முடியும். இவர்கள் அளவுகள் வைத்தே அளந்து கொண்டிருப்பார்கள் - துலாம் கோலில்.

அனுபவப்படி துலாம்கோலைவிட துலாக்கோல் பெறுமதியில் உயர்ந்தது.


கிறிஸ்தவ திருமணங்களில்
மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை,
அலங்காரப் பொருட்கள்
குறைந்த விலையில்
வாடகைக்கு பெற்றுக் கொள்ள
ராஜி 796 2672

Net, Colorful Flower Bouquet, Flower Basket




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# அல்ஜீரியா! ஆபத்தை நோக்கி.

இஸ்லாமியத் தீவிரவாதத்தின் உச்சக்கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது அல்ஜீரியா. தேர்தலில் தமது வெற்றி மறுக்கப்பட்டதையடுத்து Fis என்று அழைக்கப்படும் இஸ்லாமிய இரட்சணிய முன்னணியும் GIA என்று அழைக்கப்படும் அதனோடு இணைந்த இஸ்லாமிய ஆயுத அமைப்பும் வன்முறைய தமது வழியாக விரித்துக்கொண்டன. அல்ஜீரிய இடைக்கால அரசினால் இந்த அமைப்புக்கள் தடைசெய்யப் பட்டிருந்தபோதும் இவற்றின் நடவடிக்கைகளும் தாக்குதல்களும் நாள்தோறும் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன. பொலிஸ் இராணுவம், முன்னணி அரசியல் தலைவர்கள், நீதிபதிகள், புத்தி ஜீவிகள் என பலர் இத்தீவிரவாதத்தை அமைப்புக்களால் கொல்லப்பட்டனர். வன்முறைக்குத்தீர்வு வன்முறையே என தவறையே நாடும் பல அரசுகளைப் போலவே அல்ஜீரிய அரசும் கைது செய்யப்பட்ட தீவிரவாதத் தலைவர்களை தூக்கிவிட்டது. பல நூற்றுக்கணக்கான இஸ்லாமிய தீவிரவாத அமைப்பினரை மிக மோசமான சிறைகளில் அடைத்து சித்திரவதை செய்து வருகிறது.

அல்ஜீரியாவை பொறுத்த வரை இந்த இஸ்லாமியத் தீவிரவாதம் அடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை. காரணம் இதுவரை அல்ஜீரியாவைச் சேர்ந்தவர்கள் மீதே இலக்குவைத்து தாக்குதல் நடத்திவந்த இஸ்லாமியத் தீவிரவாதிகள் இப்போது அல்ஜீரியாவில் உள்ள வெளிநாட்டவர்கள் மீது தாக்குதல் நடத்த தொடங்கியுள்ளனர். அரசாங்கத்தை பொருளாதார ரீதியாக முடங்கிப் போகச் செய்வதற்கும் தமக்கு கிடைத்த வெற்றியை மறுத்து இராணுவப் பின்னணியுடன் நடந்தும் இடைகால அரசுக்கு வெளிநாடுகள் வழங்கி வரும் ஆதரவைக் கண்டித்துமே இத்தாக்குதல்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. அல்ஜீரியாவிலுள்ள வெளிநாட்டவர்கள் அனைவருமே டிசம்பர் மாதம் 1 திகதிக்குள் வெளியேற வேண்டும் என இத்தீவிரவாதிகள் அறிவித்தனர். ஆரம்பத்தில் இந்த அறிக்கை வெறுமனே ஒரு மிரட்டாகவே அல்ஜீரியாவிலுள்ள வெளிநாட்டவர்களால் கருதப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட கால எல்லை முடிந்தது தீவிரவாதிகள் வெளிநாட்டவருக்கெதிரான சுலபமான இலக்குகளை தெரிந்து தாக்குதல் நடத்த ஆரம்பித்தனர். ஒரு இத்தாலிய வர்த்தகர் கொல்லப்பட்டார். பின்னர் ஒரு ஸ்பானிய வர்த்தகர் தீவிரவாதிகளால் சுட்டுக் காயப்படுத்தப் பட்டார். ஒரு அல்ஜீரியப் பிரஜையின் ருஷ்ய மனைவி சுட்டுக்கொல்லப்பட்டார். இதனையடுத்து அல்ஜியர்ஸ் நகரின் தென்பகுதியில் வாழ்ந்து வந்த ஒரு ஓய்வுபெற்ற பிரெஞ்சுக்காரர் சுட்டுக்கொல்லப்பட்டார். இதனையடுத்து மேற்கு நகரான அர்சூவில் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு பிரித்தானியப் பிரஜை ஒருவரும் தீவிரவாதிகளால் கொல்லப் பட்டார். இத்துடன் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் துப்பாக்கிகள் ஓயவில்லை. தொழிற சாலையொன்றில் பணிபுரிந்த முன்னாள் யூகோஸ்லவாக்கியாவைச் சேர்ந்த 11 குரோவேத் தொழிலாளர்களையும் சுட்டுக் கொன்றுள்ளனர். இந்தத் தொழிலாளர்கள் சில தினங்களில் அல்ஜீரியாவை விட்டு வெளியேற விருந்தவர்கள். இவர்களை தாம் கொன்றதற்கு பொஸ்னியாவில் முஸ்லீம்களுக்கு எதிராக நடக்கும் படுகொலைகளும் ஒரு காரணம் என இஸ்லாமியத் தீவிரவாதிகள் கூறியுள்ளனர். அத்துடன் ஒரு பிரெஞ்சுப் பாடசாலை மீதும் ருஷ்ய இராணுவ அதிகாரிகளை ஏற்றிச் செல்லும் வாகனம் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பெருந்தொகையான படையினர் குவிக்கப்பட்டிருந்தும்.. ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தும்.. கடந்த சில மாதங்களாக ஒவ்வொருநாளும் எண்ணற்ற தீவிரவாத அமைப்புகளின் ஆதரவாளர்கள் கைதுசெய்யப்பட்டும் கூட இப்போது தீவிரவாதிகள் ஏற்படுத்தியிருக்கும் வன்செயல் அலைகள் அல்ஜீரியாவில் இருக்கும் வெளிநாட்டினர்களிடையே பெரும் பயத்தை ஏற்படுத்தியுள்ளது. அல்ஜீரியாவின் சுதந்திரப்போர் நடந்து கடந்த 30 வருடங்களில் இப்போது போன்ற அச்சம் தரும் சூழ்நிலை எப்போதுமே நிலவியதில்லை எனக் கூறப்படுகிறது. அல்ஜீரியாவிலுள்ள வெளிநாட்டவர்கள் நாட்டை விட்டுவெளியேற ஆரம்பித்து விட்டார்கள். வெளிநாட்டு தூதரகங்கள் தமது பணியாளர்களை குறைக்கத் தொடங்கிவிட்டன. பிரான்சில் இஸ்லாமிய இரட்சண்ய சேனை தடைசெய்யப்பட்டு அதன் உறுப்பினர்கள் மீது பிரெஞ்சு அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுத்ததால் அல்ஜீரியாவில் வசிக்கும் 76 ஆயிரம் பிரெஞ்சுப் பிரஜைகளும் பெரும் பயத்துக்குள்ளாகியுள்ளனர். இவர்களை வெகு விரைவில் அல்ஜீரியாவைவிட்டு

## சுழலும் உலகம்



தி. உமாகாந்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியேறும்படி பிரெஞ்சு வெளிநாட்டமைச்சர் அவன் யுப்பே கூறியிருப்பது அனைத்துமே கை நழுவிப் போய் விட்டதையே காட்டுகிறது.

இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகளோ தமது தாக்குதல்களைத் தொடரப் போவதாகவும் அடுத்தகட்டமாக நாட்டின் சில பகுதிகளை கைப்பற்றி அங்கு இராணுவமோ அரச நிர்வாகமோ நுழையமுடியாத நிலையை நாம் ஏற்படுத்தப் போவதாகவும் அறிவித்துள்ளன இதனை வலியுறுத்தும் வகையில் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் தளமான சூடானில் உள்ள கார்டும் நகரில் நடந்த கூட்டம் ஒன்றில் இஸ்லாமிய இரட்சண்ய முன்னணித் தலைவர்களில் ஒருவரான காம்ரெட்டின் கேர்பன் அல்ஜீரியாவின் இராணுவ ஆட்சியாளர்களுடன் எந்தப் பேச்சுவார்த்தையும் கிடையாது எனக்கூறியதுடன் அல்ஜீரியாவில் இன்னும் இரத்தம் சிதறும் எனவும் எச்சரித்துள்ளார். அதுமட்டுமல்ல எதிர்வரும் மாதங்களில் யுத்தத்தில் தாம் புதியமுறைகளைக் கையாளப் போவதாகவும் கூறியுள்ளார், 'இராணுவ அரசின் சட்டம், ஒழுங்குமுறையுடனும் இராணுவத்துடனும் தொடர்ந்து போரிட்டுக்கொண்டு நாட்டின் சிலபகுதிகளை நாம் எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் போகின்றோம்' என அவர் கூறியுள்ளார்.

இஸ்லாமியத் தீவிரவாதத் திற்கெதிராகவோ அல்லது அதிகரிக்கும் அல்ஜீரிய மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் குறித்தோ தீர்வெதும் இல்லாமல் திணறுகிறது. அல்ஜீரிய இடைக்கால இராணுவ அரசு பதவிக்கால எல்லை முடிவதற்கு இன்னும்குறுகிய காலமே இருக்கும் இந்நிலையில் ஒரு தேசிய மாநாட்டை அடுத்த வருட ஆரம்பத்தில் நடத்துகிறோம் என்பதை தவிர வேறு எந்த வாக்குறுதியையும் வழங்குமுடியாத நிலையிலேயே அரசு உள்ளது. ஆனால் நாட்டின் குழப்ப நிலை தொடர்கிறது. தேச அளவில் வேலைநிறுத்தம்செய்யப்போவதாக தொழிற்சங்கத் தலைவர்கள் அறிவித்துள்ளனர். தினந்தோறும் தண்ணீர் வெட்டு, மின்சார வெட்டு, வேலையில்லாமை என அன்றாடப்பிரச்சனைகள் மக்களை குறிப்பாக இளைஞர்களை இஸ்லாமியத் தீவிரவாதத்தை நோக்கித் தள்ளுகிறது.

இன்றைய அல்ஜீரியாவில் அரசியல் தீர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை. அரசு, தீவிரவாதிகள் இருதரப்புமே வன்முறையைத் தான் கையில் எடுத்துக் கொண்டிருக்கின்றனர். வன்முறை தான் இன்று அல்ஜீரியா முழுவதும் வியாபித்திருக்கிறது. இஸ்லாமியத் தீவிர வாதிகளுடன் தொடர்பு கொண்டவர்களது வீடுகள் இராணுவத்தில் எரிக்கப்படு கின்றன. கைது செய்யப்பட்ட வர்களும் எரித்துக் கொல்லப்படு கின்றனர். அல்லது காணமல் போகின்றனர். அது போலவே இராணுவத்தில் சேர்க்கப்படும் இளைஞர்கள் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு தொண்டை அறுக்கப்பட்டு கொல்லப்படுகிறார்கள். ஆனால் இந்த இருதரப்பு வன்முறை களாலும் பாதிக்கப்பட்டு பலியாகும் இளைஞர்களின் பெற்றோர்கள் பயத்தினால் எதுவும் பேசுவதில்லை. அல்ஜீரியப் பத்திரிகைகளின் நிலையும் இதுதான். இருதரப்பு வன்முறைகளும் பத்திரிகைகளின் குரல்வளைகளையும் நெரிக்கின்றன. மரணம் தங்களை மிக நெருங்கி வந்திருப்பதை உணர்ந்து கொண்ட அல்ஜீரியமக்கள் அவர்கள் சாதாரணமானவர்களா யிருந்தாலும் சரி பத்திரிகையாளர். .. புத்திஜீவிகள் தொழிலதிபர்களாக இருந்தாலும் சரி தமது அன்றாடவாழ்க்கை முறைகளையே மாற்றிக் கொள்கின்றனர். இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு ஆதரவானோராயிருந்தாலும் சரி, இராணுவ ஆட்சியாளர்களுக்கு ஆதரவானோராயிருந்தாலும் சரி அச்சம் சூழ்ந்ததுதான் வாழ்க்கை. ஆனாலும் இராணுவத்தின் வன்முறைகள் தீவிரவாதிகளுக்கு பலம் சேர்க்கின்றன. சமீபத்தில் பிரபல பிரெஞ்சுப்பத்திரிகையான Le Momde இன் நிருபர் கதரின் சிமோன் அல்ஜியர்வில் இராணுவக் கொடுமைக்குள்ளான ஒரு இளைய டாக்டரை சந்தித்தார். தனது பெயரை வெளிப்படுத்த விரும்பாமல் மௌலுட் எனும் கற்பனைப் பெயருடன் பேட்டியளித்த அந்த டாக்டருக்கு நடந்த கொடுமைகள் மோசமானவை. இராணுவ அரசு எப்படி மேலும் மேலும் தவறிழைக்கிறது. என்பதை இந்த டாக்டரின் வாக்குமூலம் வெளிப்படுத்துகிறது. ஆயுதம் ஏந்திய அமைப்பினருக்கு உதவி செய்கிறார். என்று குற்றம் சாட்டி பொலிசாரினால் ஏப்ரல் மாதம் கைதுசெய்யப்பட்ட இவரை அல்ஜிரியாவிலுள்ள விசேட நீதிமன்றம் அக்ரோபர் மாதம் விடுதலை செய்தது.

மௌலுட் தான் ஒரு நிரபராதி என்றே கூறுகிறார். வன்முறையே ஒரு வழியாக தான் என்றுமே ஏற்றுக்கொண்டதில்லை எனக்கூறும் மௌலுட் தான் ஒரு இஸ்லாமிய பழமைவாத அமைப்பின் உறுப்பினரே ஒழிய தடைசெய்யப்பட்ட இஸ்லாமிய இரட்சண்ய முன்னணியின் உறுப்பினரல்ல என்கிறார். தடுத்து வைக்கப்பட்ட காலகட்டத்தில் மௌலுட்டுக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகள் கொடுமையானவை. தான் பணிபுரியும் அல் ஜியர்சிலுள்ள வைத்தியசாலையில் வைத்தே கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டபோது ஒரு டாக்டர் என்றவகையில் தனக்கு இவ்வளவு பிரச்சனையும் ஏற்படும் என மௌலூட் எதிர்பார்க்க வில்லை. "சிவிலுடையில் சில பொலிஸ்காரரும் சீருடையில் சில இராணுவத்தினரும் ஆஸ்பத்திரியில் நான் ஒரு சத்திரசிகிச்சையை நடத்திக் கொண்டிருந்தபோது வந்தனர். என்னைக் கைது செய்வதற்கான ஆணை எதுவும் அவர்களிடம் இருக்கவில்லை ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறிய விசாரணை அவ்வளவுதான் வாருங்கள் எனக் கேட்டார்கள். நானும் வித்தியாசமாக நினைக்கவில்லை எனக்கும் வேறு வழியும் இல்லை" என ஆரம்பிக்கிறார்.

"கார் தரிக்கும் இடத்தில் 5 அல்லது 6 இலக்கமிடப்படாத கார்கள் எமக்காக காத்து நின்றன அதில் ஒன்றில் நான் ஏற்றப்பட்டேன் காரில் ஏற்றப்பட்ட உடனேயே எனது மூக்குக்கண்ணாடியை கழட்டிய அவர்கள் எனது தலை கண்களை மூடினர்" நரகத்துக்கான தனதுபாதை இப்படித்தான் தொடங்கியது எனக் கூறிய மௌலூட் விசாரணை நடந்த ஒருவரமும் ஒரு மோசமான காலகட்டம் என்கிறார். அல்ஜியர்சில் உள்ள பொலிஸ் நிலையத்தின் சுரங்கப் பகுதியிலேயே விசாரணை நடந்தது. விசாரணையின்போது மௌலூட் கட்டாயப்படுத்தப்பட்டு நிர்வாணமாக்கப்பட்டார். "பெரும்பான்மையான நேரங்களில் அவர்கள் என்னை கீழ் உள்ளாடையுடன் இருக்க மட்டுமே அனுமதித்தார்கள் என் கண்கள் கட்டப்பட்டே இருந்தன. சிலர் என்னை கீழ்த்தரமான வார்த்தைகளால் பேசிக்கொண்டே இருந்தார்கள் இன்னும் சிலரோ பயங்கரவாதிகளுக்கு வைத்தியம் செய்யும் டாக்டர் இவர்தான் எனச் சொல்லி சொல்லி உதைத்தார்கள்" என்கிறது மௌலூட்.

வாங்கு ஒன்றில் வளர்த்தபட்ட மௌலூட்டின் கைகள் பின்புறமாக விலங்கிடப்பட்டிருந்தன. கால்கள் வயரினால் கட்டப்பட்டிருந்தன. அதுமட்டுமல்ல நிலம் துடைக்கும் ஈரத்துணியால் முகத்தை மூடுவார்கள். 'எனக்கு மூச்சுத் திணறும்போது எனது தலையில் அழுக்கு நீரை ஊற்றுவார்கள். அதில் கொஞ்சம் நான் குடிக்க வேண்டியும் இருக்கும். அதேசமயம் என்னை தொடர்ந்து அடிப்பார்கள். ஆனால் பின்னரே எனக்கு தெரியவந்தது. இவையெல்லாம் அல்ஜீரியாவில் இப்போது சாதாரண சித்திரவதை முறைகள் என்கிறார் மௌலூட் முகங்கள் உடைக்கப்பட்ட, நகங்கள் பிடுங்கப்பட்ட பல கைதிகளைக் கண்டேன் என்கிறார் மௌலூட் ஆனால் இதுபோன்ற சித்திரவதைகள் சம்பந்தமாக வரும் முறையீடுகளை அலட்சியப் படுத்துவது என்றே அல்ஜீரிய அரசு தீர்மானித்திருக்கிறது. L'observatoire National de Droits de l 'Homme எனும் மனிதஉரிமைகள் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் கமெல் ரெஸாக் பாராவும் இந்தச்சித்திரவதைகள் நடப்பதை வலியுறுத்தியதுடன் இதுதொடர்பாக தமக்கு 15க்கு மேற்பட்ட முறையீடுகள் வந்துள்ளன எனவும் சொல்கிறார்.

இது இப்படியிருக்கு மௌலூட் கூறியதன்படி கைதிகள் நெருக்கமாக அடைக்கப்பட்ட சிறைக் கூடங்களில் மலகூடங்கள்தான் தண்ணீர் கிடைக்கும் ஒரேயொரு இடம் Baguell என்றழைக்கப்படும் ஒரு நீளப் பாணே ஒரு கைதியின் ஒரு முழு நாளைக்கான உணவு. ஒருவாரத்தின் பின் கைதிகள் மத்திய பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுபோய் அவர்களது வழக்குகள் கோப்புக்களிலிடப்படும் 13 அல்லது 14 நாட்களின் பின்னரே நீதிபதியிடம் கொண்டு செல்லப்படும் கைதிகள் உடனேயே சிறைகளுக்கு அனுப்பப் படுவார்கள் அங்கு குறைந்த பட்சம் ஆறுமாதங்கள் இருக்கவேண்டி இருக்கும் இந்த ஆறு மாதங்கள் சிறையில் அனுபவிக்கும் துன்பங்கள் ஒரு சாதாரண இஸ்லாமிய ஆதரவாளனை இரத்த வெறிகொண்ட ஒரு இஸ்லாமியத் தீவிரவாதியாக வெளியே வர வைக்கும் என்கிறார் மௌலூட் மனித உரிமைகள் அமைப்பின் தலைவர் ரெஸாக் பாரா 'சட்டத்துக்கு விரோதமான முறைகளாலும் பேச்சுவார்த்தை இல்லாமலும் எந்த அரசியல் பிரச்சனைக்கும் தீர்வுகாண முடியாது" என்று சொல்கிறார். 1992 ம் ஆண்டு ஜனவரியில் இஸ்லாமிய இரட்சண்ய முன்னணியின் தேர்தல் வெற்றி மறுக்கப்பட்டதும் அதனைத் தொடர்ந்து அல்ஜீரிய இராணுவ கட்டவிழ்த்துவிட்ட ஒடுக்கு முறைகளுமே இன்றைய நிலைமைக்கான காரணம்.

அல்ஜீரியமக்களின் அடிப்படைக் பிரச்சனைகளுக்கு தீர்வு காணமல் வன்முறைமீது நம்பிக்கை கொண்ட அரசு இன்று தன் தேச மக்களுக்கு பரிசாகக் கொடுத்திருப்பது வன்முறை கலந்து நிற்கும் மரணபயத்துடனான வாழ்வு.!

---

**கூதல்..**

சந்தையில் நின்றோர் ரஸித்தனர். நண்டை எப்படியாவது பிடிக்க வேண்டும். ஆனால் கடித்துவிடும் என்று பயம். எனது வீட்டின் கீழ் மாடியில் இருக்கும் ஜங் போய் ஒருவர் தானாக முன்வந்து நண்டைப் பிடித்து பாய்க்கினுள் போட்டார்.

வீடு வந்து கிரிஜாவிடம் நண்டைக் கொடுத்து விட்டு தூங்க வெளிக்கிட்டேன். அவளுக்கு இது புதினமாகப்பட்டது.

"என்ன! அவ்வளவு களைப்போ?" பதில் எதுவும் சொல்லாமல் போர்வையால் என்னை மூடிக் கொண்டேன்.

தற்கொலை செய்பவர்களிடம் கடிதம் எழுதி வைக்கும் பழக்கம் உண்டு. சரஸ்வதி தனது தற்கொலைக்கு நான் தான் காரணம் என ஒரு கடிதம் எழுதி வைத்தால் ... மனது நடுங்கியது. ஊர் முகத்தில் எப்படி முழிப்பது? எல்லோரும் என்னைக் குதறும் விழிகளினால் அல்லவா பார்ப்பார்கள்! ஒரு வேளை என்னை வெருட்டத்தான் சரஸ்வதி இப்படிச் சொன்னாளோ!

12 மணிக்கெல்லாம் கிரிஜா என்னை எழுப்பினாள். நண்டின் தரம் பற்றி 1/2 மணி நேரம் புகழந்துரைத்தாள். பின்னேரம் இருவரும் படம் பார்க்கப்போவதாக ஒரு திட்டம் உண்டென்றும் சொன்னாள். நான் மறுத்தேன். அவள் கோபித்தாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஸ்தல மேன்மை

# றிச்மன்ட் ஹில் இந்துக் கோவில்

### சிவப்பிரகாசம்

வட அமெரிக்காவிலே மிகப்பெரிய ஸ்தலமாக அடியார்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருப்பது ரொரன்ரோவின் புறநகரில் அமைந்திருக்கும் றிச்மன்ட்கில் இந்துக் கோவில். அமைதியான சூழலில் அமைந்திருக்கும் இந்த ஸ்தலத்தில் வீற்றிருக்கும் வரசித்திவிநாயகனின் அனுக கிரகம் வேண்டி பல நகரங்களில் இருந்தும் நாடுகளில் இருந்தும் அடியார்கள் வந்து செல்லும் அளவுக்கு ஸ்தலம் மேன்மை பெற்றது. ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலே ஸ்தல அந்தஸ்து பெறும் தகுதி உள்ள ஒரேஒரு கோவில் இதுவே. இயந்திரமான வாழ்க்கையும் இடர்களும் மிகுந்த நாட்டில் அமைதியையும் நிம்மதியையும் நல்குவது மட்டுமன்றி வேண்டும் வரம் அளிப்பவன் கணேசன்.

மற்ற ஸ்தலங்களைவிட இங்கே ஒரு சிறப்பிருக்கிறது. வரசித்திவிநாயகனின் ஒரு புறத்தில் உலகளந்த பெருமாளும் மறுபாங்கில் அசுரர்களை வதம் செய்து தேவர்களைக் காத்த கந்தசுவாமியும் மூலஸ்தானத்தில் வீற்றிருப்பதுதான் அது. பொதுவாக பெருமாளும்முருகனும் ஒரே இடத்தில் மூலஸ்தானத்தில் வைத்து கோவில்கள் அமைக்கப்படுவது அருமை. இந்தியாவில் வைஷ்ணவர்களுக்கும் சைவர்களுக்கும் உள்ள மனவேற்றுமைதான் காரணம். ஈழத்து இந்துக்கள் மதத்தில் மனவேற்றுமை கொள்ளாவிடினும் அவ்வாறான முறையில் கோவில்களை அமைக்கத் தயக்கம் காட்டினர். சைவம்(சிவன்) சாக்தம்(சக்தி) காணபத்தியம் (கணபதி) கௌமாரம்(குமரன்) வைஷ்ணவம் (விஷ்ணு) போன்ற சகலதையும் அவைக்குரிய உற்சவங்களுடனும் விரதங்களுடனும் அடியார்கள் மகிழும் வண்ணம் கொண்டிருப்பது றிச்மன்ட்கில் இந்துக் கோவிலுக்குரிய தனிப்பெருமை. விஷ்ணு பக்தர்களுக்காக வைஷ்ணவ முறைப்படியான ஆலய அமைப்பும் பெருமாள் பூஜையும் ஒருபுறம். சைவர்களுக்காக அவர்களின் அனுட்டான முறைகள் மறுபுறம். "ஓம்" என்ற பிரணவ மந்திரத்துடன் விஷ்ணு நாமாவளியும் சிவ மந்திரங்களும் ஸ்கந்த அர்ச்சனைகளும் சக்தியின் சாராவளிகளும் விநாயக ஸ்தியுடன் ஓங்காரமாக ஒலிக்கும் போது அடியார்களின் மனத்தில் உள்ள பாரங்கள் தானே சூரியனைக் கண்ட பனிபோல் சூனியமாகி விடும். இந்தப் பிறப்பில் மட்டும் இறை அனுக்கிரகத்தால் நன்மைபெற விரும்புவோர் வலது புறமாக சுற்றி வரவேண்டும் என்றும் மறுபிறப்பில் நற்பலன் பெறவிரும்புவோர் இடப்புறமாக சுற்றிவரவேண்டும் என்பதுவும் ஆகம மரபு. ஆனால் இந்த தேவஸ்தானத்தில் எல்லோரும் இருபக்கமும் ஏதோ ஒரு சமயத்திலாவது தம்மை அறியாமலே சுற்றிவரக்கூடியதாக அமைந்துள்ளது.. அதாவது இம்மைக்கும் மறுமைக்கும் உரிய பலன்களை பெறும் வண்ணம் அமைத்திருக்கிறார்கள். இதுவும் ஒரு சிறப்பே

"பாற்கடலில் பள்ளிக்கொண்ட
பரந்தாமன் மருமகளுக்கு
வாழ்த்துரைக்க
ஆற்றுப்படை அழகன்
அண்ணனுக்கு ஆலவட்டம்
தாங்கிவர
நீற்றுமலைச் சிவசக்தி
நிலப்பாவாடை நீட்டிவர
றிச்மண்ட்கில்
வீற்றிருந்த வேழமுக விநாயகன்
வேவியுவில் உலாவந்தனனே"
"பனிமணற் பாதையில்
பவனிகொள்வேளை பாவலர்
பாவுரைக்க
பனிமலர் தூவிய பண்ணவர்
வானத்துமுற்றத்தில் பார்த்திருக்க
தினமொரு முறையெனும்
தியானம்செய்ய செல்வங்கள்
அருளிடும்
வனம்உறை வரசித்தி விநாயகன்
வாசலில் உலாவந்தவனே"
(றிச்மண்ட்கில் விநாயகர் உலா)

விக்னேஸ்வரர் வக்கிரதுண்டர் எனப் போற்றிப் பாடப்படும் விநாயகப் பெருமான் பக்தர்களுக்கு வரும் விக்கினங்களைப்போக்கி இடர்களை துவம்சம் செய்து சித்திகளை வரமாக அருள்வதனுல் வரசித்தி விநாயகன் என்ற வணக்கத்துக்கு உரியவர். தனது ஒன்பது அவதாரங்களிலும் துஷ்ட நிஷ்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்த மகாவிஷ்ணு கலியுகத்தில் கல்கி அவதாரத்துக்காக காத்திருக்கும் வேளை தனது பக்தர்கள் படும் துன்பங்களை நீக்க கனடாவில் அமர்ந்துள்ள ஸ்தலமும் இதுவே. மகாவிஷ்ணு காவல் தெய்வம். தப்பு செய்தவர்களை தப்பிக்க விடவும் மாட்டார். நியாயம் உள்ள பக்கம் நோகவும் விடமாட்டார். அவனைத் தரிசிக்கவென்றே பல வெளிநாடுகளில் வதியும் வைஷ்ணவர்கள் இந்த ஸ்தலத்துக்கு யாத்திரை வருவார்கள்.

---

சரஸ்வதி தற்கொலை செய்யும் தினத்தில் படம் பார்க்கின்ற ஆசையா எனக்கு வரும்? இரண்டு கவளத்துடன் கோப்பையை மேசையில் வைத்து விட்டு, கிரிஜா தூங்கப் போய்விட்டாள். எனக்கு அது கவலையைத் தரவில்லை. சரஸ்வதியின் தற்கொலை முயற்சியைத் தடுக்கவேண்டும் என்பதே என் இலக்காக இருந்தது. சரஸ்வதி எவ்வளவு மென்மையானவள். எவ்வளவு தூய்மையானவள்... இவளுடன் நான் பருகிய இரவுகள் எவ்வளவு சுவையானவை! எனது தழுவல்களின் போது இவளது

**ம.ப.பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மரபும் மாற்றமும்

## சி.சிவசேகரம்

மரபு சார்ந்த அனைத்தும் தவறானவையும் பிற்போக்கானவையும் என்ற கருத்து மனித அறிவினதும் சமுதாய விருத்தியினதும் இயங்கியலை மறுக்கும் ஒர பார்வை. மூட நம்பிக்கைகளை எதிர்ப்பது என்ற பேரில் ஒருவர் ராகு காலத்திலேயே நல்ல முயற்சிகளைத் தொடங்குவதும் விக்கிரக உடைப்பில் ஈடுபடுவதும் அவரையறியாமலேயே அவரைச் சடங்குத் தன்மையான செயல்களில் ஈடுபடுத்தி விடுகிறது. ஒரு தவறான போக்கை எதிர்ப்பதற்குத் தவறு முறையாக அடையாளங் காணப்படுவதும் அதற்கு மாற்றீடான போக்கு ஒன்று வைக்கப்படுவதும் அவசியம். புதிதாகப் பிரதியிடப்படும் போக்கு ஒரு சடங்காகி விடாது. அது மீளவும் மீளவும் பரிசீலனைக்கு ஆளாக்கப்படுவதும் அவசியம். மரபை முற்றாக நிராகரிக்கிற ஒருவர் மரபின் ஒவ்வொரு அம்சத்தையும் நுணுக்கமாக அணுகி ஆராய்ந்து அவ்வாறு செய்கிறாரா என்பது கவனத்துக்குரியது. அவ்வாறு செய்தல் எப்போதுமே சாத்தியமானதல்ல. அத்தோடு, மூர்க்கத்தனமாக மரபை மறுப்போர். மரபு பற்றிய கவனஞ் சிறிதுமே இல்லாதவர்களாகவே இருக்கக் கூடும். அதை விட முக்கியமாகச் சமுதாயத்திற்கும் மரபிற்கும் உள்ள உறவின் அடிப்படையிலேயே மரபை மீறுதலும் மாற்றுதலும் சாத்தியமாகிறது. எனவே மரபுடனான முறிவு என்பது மரபை அப்படியே தூக்கி எறிவது என்பதை விட மரபின் முனைப்பினின்று வேறுபட்ட ஒரு முனைப்பிற் செயற்படுவது என்றே விளங்கிக்கொள்ளப்படக் கூடும் புதிய முனைப்பிற் பழையதன் சில பண்புகள் காணப்படலாம். ஆயினும், புதியதும் பழையதும் அவற்றை எல்லா வகைகளிலும் ஒரே விதமாக கையாள அவசியமில்லை.

மரபுக்குரிய முக்கியமான பண்பு ஏதெனில் அதன் சமகால நடைமுறை காரண காரிய அடிப்படையிலான கேள்விகளின் அடிப்படையில் அமைந்ததல்ல. மரபு பேணல் அவ்வாறான கேள்விகளை அனுமதியாது ஆயினும் சமுதாய நடைமுறை மரபின் குறைபாடுகளைத் திரும்பத் திரும்பக் கேள்விக்குட்படுத்துகிறது. சமூகத் தேவைகள் மாற்றங்களை நிர்ப்பந்திக்கின்றன. இவ்விடத்து மரபுவாதம் மரபின் இருப்புக்கு அதனளவிலேயே நியாயமுள்ளதாகவும் மரபில் எதுவுமே கேள்விக்கோ மாற்றத்திற்கோ உட்பட முடியாதெனவுங் கூறும். மரபிற்கெதிரான நிலைப்பாடுகளை மரபைப் பூரணமாகவே நிராகரிக்கும் சிலர் மட்டுமன்றிச் சீர்த்திருத்தவாதிகளும் சமுதாயப் புரட்சியை வேண்டுவோரும் மேற்கொள்கின்றனர். மரபுவாதிகளைப் பொறுத்தவரை இவர்கள் அனைவருமே மரபின் விரோதிகள் தான். இதன் விளைவாக மரபுவாதிகள் சீர்த்திருத்தவாதிகளையும் கம்யூனிஸ்டுகள் என்று வர்ணிக்க நேர்ந்ததுண்டு. எவ்வாறாயினும் விறைப்பான மரபுவாதம் காலம் என்னும் பெருவெள்ளத்தின் முன் நிலைத்து நிற்க இயலாது ஈற்றில் விட்டுக் கொடுக்கிறது. இவ் விட்டுக்கொடுத்தல் மிகுந்த தயக்கத்துடனேயே நிகழ்கிறது. இதன் விளைவாகச் சமுதாய நடைமுறை ஒரு புதிய நிலையை அடைகிறது மரபுவாதம் மேலும் மாற்றங்கள் நிகழ்வதைத் தவிர்க்கும் தேவையால் இப்புதிய நிலையைப் பழமையின் அடிப்படையிலேயே

---

### கூதல்..

விழிக் கரைகளில் கசிந்த கண்ணீர்த் துளிகள் காய்ந்து போனதை நான் விந்தையென்றல்லவா எடுத்துக் கொண்டேன்.

இவளை நினைக்க எனக்கும் தற்கொலை செய்யும் ஆசை வந்தது. ஒரு ஆவேசத்துடன் படுக்கையை விட்டு எழுந்த போது, இரவு 10 மணி. ஜாக்கெட்டைப் போட்டேன். கதவைத் திறந்தேன்.

"எங்கே? அதுவும் இந்த நேரத்தில். ..?"

"ஒருவரை 10 மணிக்கு மெத்ரோவுக்கு வாருமெண்டு சொல்லியிருந்தனான். அவர் இந்தியா போறார். கொஞ்சப் புத்தகங்கள் வாங்கிக் கொண்டு வாறதெண்டவர். லிஸ்ட் குடுக்கப் போறன்..."

கிரிஜா என்னை நம்பினாளா என்பதை அறியுமுன்னர் இறங்கி விட்டேன்.

கடவுளே, சரஸ்வதி தற்கொலை செய்யாமலிருக்க வேண்டும். இதுவே என் பிராத்தனை.

தொலைபேசிக் கூடமொன்றுக்குள் நுழைந்து, சரஸ்வதியின் இலக்கங்களை சுழட்டினேன்.

"ஹலோ!"

அது சரஸ்வதியின் குரல்தான்.

"அவர் வீட்டையில்லை.. ஜேர்மனிக்குப் போயிட்டார்...."

"சரஸ்வதி, நீர் தற்கொலை செய்ய மாட்டீர்தானே?"

"இங்கை ஒரே குளிராக் கிடக்குது. சூடும் தரும் கருவி பழுதாப்போயிட்டுது.. வாரும்..."

"நான் சூடு தரும் கருவியல்லவே..."

"நீர் வந்தால் சூடு தானாக வரும்..."

எனது கால்கள் அவளது வீட்டை நோக்கி, உலகை மறந்து விரைவாக நடக்கின்றன....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நியாயப்படுத்தி அதையே மரபாக நிலை நிறுத்த முற்படுகிறது. இவை ஒரு நீண்ட காலப் பார்ப்பிலும் சமுதாயத்தின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு அளவுகளிலும் வேறுபடும் உக்கிரத்துடனும் நடைபெறுவதால் மரபுவாதிகளது நிலைப்பாடும் இடத்துக்குங் காலத்திற்குமேற்ப வேறுபடும். இதை மொழி பற்றிய வாதப் பிரதிவாதங்களில் நாம் அடிக்கடி சந்திக்கலாம்.

மொழி நடைமுறை பற்றிய மரபு மொழியின் பல வேறு இலக்கண முறைகளால் அறியப்படுகிறது. மொழியில் மாற்றமும் வளர்ச்சியும் அவசியமாகும் போது மரபுவாதிகள் இலக்கணத்தை ஒரு ஆயுதமாகப் பிரயோகிக்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரை இலக்கணம் என்பது மொழியின் சீரான நடைமுறைக்கு அவசியமான ஒரு கருவி மட்டுமல்ல மொழியின் தன்மையில் மாற்றங்கள் நிகழாதிருக்க இலக்கண விதிகட்டு அமையாதபோது அவை நிராகரிக்கப்படவேண்டும் என்கிறது விறைப்பான மரபு, அவை மொழியின் வளர்ச்சிக்கு அவசியமா, அவசியமாயின் மொழியின் நடைமுறைக்கு ஊறில்லாமலும் ஏலவே உள்ள வலிய பண்புகளைப் தேடுவது மொழிச் சீர்த்திருத்தம் சீர்த்திருத்தங்களை மரபு உள்வாங்க மறுக்கும் போது அல்லது இயலாது போகும் போது முறிவுகள் ஏற்படுகின்றன. இவ்விதமான முறிவுகள் பலவேறு காரணங்கட்காக ஏற்படலாம். ஆயினும் நீண்ட வரலாற்றையுடைய ஒரு மொழியின் இலக்கண மரபு எத்தனையோ பாரதிய மாற்றங்களையும் முறிவுகளையும் உள்வாங்கிக் கொள்வதன் மூலமே மொழியின் இருப்பைச் சாத்தியமாக்குகிறது. 'மாற்றம் மாற்றத்துக்காகவே' என்ற போக்கில் நெறிப்படுத்தப்படாத முறையில் மொழியுட் புகும் விஷயங்கள் மொழி வளர்ச்சிக்கு அதிகம் உதவுவதில்லை. இவை குறுகியகாலத்திற் குழப்பத்திற்கும் வழிகோலலாம். எவ்வாறுயினும் மொழியின் நடைமுறை தான் சார்ந்த சமுதாயத்தின் தேவைகட்கமைய அயலினின்றும் சமுதாயத்தினுள்ளிருந்தும் புதியனவற்றைப் பெற்று புதிய விதிகளை வகுத்து முன்னேக்கிச் செல்கிறது. இன்றைய மரபு வாதி நேற்று ஏற்பட்ட மாற்றங்களைக் கணிப்பில் எடுக்கத் தவறுகிறுர். அதுபோல நாளைய மரபுவாதி இன்றைய மரபுவாதியுடன் தனக்குள்ள வேறுவாடுகளை உணராமல் ஒரு நிரந்தரமான மரபு பற்றிப் பேசக்கூடும்.

மொழியிற் போன்று மதத்திலும் மரபுவாதம் மாற்றங்களை மறுப்பதும் முடிவில் மாற்றங்கள் நேரும் போது அவற்றையே மரபாகக் காட்டுவதும் நாம் பரவலாகக் காணக் கூடிய ஒன்று. தீவிரமாக மரபை வலியுறுத்தும் மதவாதிகள் மதங்களைச் சமுதாயத்தினின்றும் வரலாற்றினின்றும் வசதிக்கேற்பப் பிரித்தே காட்டுகிறுர்கள். அடையாளங்காணக்கூடிய ஒரு தோற்றுவாயையுடைய எந்தவொரு மதமும் காலப் போக்கில் மாற்றங்களை உள்வாங்கிகொள்வதும் அதன் விளைவாக வேறுபட்ட கிளைகள் உருவாவதும் நாமறிந்ததே. மாருததென அடையாளங்காணக் கூடிய கூறுகள் சில தொடர்ச்சியாக இருக்கக்கூடுமேயாயினும் அவை மட்டுமே மரபென்றும் அவற்றை வைத்து மரபை வரையறுக்க முடியுமென்றுங் கொள்வது பொருந்தாது.

சமுதாய மரபுகள் என்று நாம் கருதுவன சமுதாய அமைப்புத் தொடர்பானவை. ஒரு சமுதாயம் அடிப்படையில் நிலமான்யச் சமுதாயமாயின் அதற்குரிய சமுதாய உறவுகளும் சமுதாய விழுமியங்களும் அச் சமுதாயத்தில் நிலவும் இந்த உறவுகளும் விழுமியங்களும் அவற்றை யொட்டிய சிந்தனைகளும் நடைமுறைகளும் காலத்துடன் மாறுவது உண்மையேயாயினும், அம் மாற்றத்தின் அளவு சிறியது. சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கில் சமுதாயத்தின் தேவைகட்கும் சமுதாய அமைப்புக்கும் இடையிலான உறவு மாற்றமடைகிறது. சமுதாயத்தின் தேவைகட்கும் சமுதாய அமைப்புக்கும் இடையிலான உறவு மாற்றமடைகிறது. சமுதாயத்தின் தேவைகட்டுச் சமுதாய அமைப்பு ஈடுகொடுக்கமுடியாததாகவும் சமுதாய வளர்ச்சிக்கு இடையூருகவும் நிற்கும் போது அடிப்படையான சமுதாய மாற்றம் நிகழ்கிறது. சில சூழ்நிலைகளில் மாற்றங்கள் வெளியிலிருந்து வருங் குறுக்கீடுகளாலும் நிகழலாம். எவ்வாருயினும் சமுதாய வளர்ச்சியின் திசை மாற்றம் சமுதாய உறவுகளிலும் விழுமியங்களிலும் சிந்தனைகளிலும் நடைமுறையிலும் புதிய முனைப்புகளைப் புகுத்துகிறது. இத்தகைய மாற்றத்திற்குரிய கால அளவு சமுதாயச் சுழல்கட்கேற்ப வேறுபடலாம். ஆயினும் அடிப்படையான சமுதாய மாற்றத்தை யொட்டிச் சமுதாயத்தின் பலவேறு அம்சங்களிலும் ஏற்படும் மாற்றங்கள் பிற கால கட்டங்களில் ஏற்படுவனவற்றினுந் துரிதமானவை. மரபுவாதிகள் மாற்றங்களைத் தடுத்து நிறுத்தவே எப்போதும முனைவார்கள். முடியாதபோது வெவ்வேறு தந்திரோபாயங்களால் மேலும் மாற்றங்கள் நிகழ்வதை மந்தப்படுத்தவும் முடியுமாயின் வரலாற்றைப் பின்னேக்கித் தள்ளவும் முற்படுவார்கள்.

தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### எழுச்சியுற்றிராவிடில்...

ஹெமிங்வே மரபு:

ஹெமிங்வே பின்னர் எழுதிய 'போ ஹூம் த பெல்டோல்' அல்லது 'பெயார்வேல் ரு ஆர்மீஸ் நூல்களுக்காகத் தான் இலக்கியத்திற்கான நோபல் பரிசு அவருக்கு வழங்குவதற்கான காரணமாகவிருந்தன என நான் நினைக்கிறேன். யுத்தத்தின் கொடுமைகளை அவர் எழுதினார். ஆனால் இன்று எமது தேசிய பத்திரிகைகளில் முற்று முழுதாகவே இனவாதத்தை தூண்டியே கூடிய விதத்தில் கட்டுரைகள் எழுதப்படுகின்றன. ஐலண்ட் பத்திரிகையைச் சார்ந்த தமிழ் நண்பர் கூறியவாறு இப் பத்திரிகைகளில் காணப்படு பவற்றையே புலிகளும் சுட்டிக்காட்டி "இதோ எங்களுக்கு எதிராக சிங்கள தொடர்பு சாதனிகள் செயல்படும் விதத்தை பாருங்கள்" எனக் கூறுகின்றனர்.

நண்பர்களே! இந்த நிலமையை மாற்றுவதற்காக இக்கூட்டம் பிரதானமாக பணியாற்றும் என நான் எண்ணுகிறேன் பத்திரிகை சுதந்திரத்தை பற்றிய பிரச்சனை தொடர்பாகவே மட்டுமே சுதந்திர பத்திரிகையாளர் இயக்கமும், உண்மையிலேயே நாம் அனைவரும் இது வரை காலமும் பேசினோம். ஏதேச்சாதிகார அரசியல் சாசனம் இருக்கும்வரை காலமும் பேசினோம். ஏதேச்சாதிகார அரசியல் சாசனம் இருக்கும் வரை பத்திரிகை சுதந்திரத்தைப் பற்றி நாம் பேசுவது அவ்வளவு பிரயோசனமானதாக இருக்கமாட்டாது, நாம் முதலில் இவ் ஏதேச்சாதிகார ஆட்சிமுறையை கவிழ்ப்போம் என நான் தனிப்பட்ட ரீதியில் அக்கூட்டங்கள் அனைத்திலும் கூறினேன். ஜே.ஆர். ஜெயவர்தன இருந்தாலும் பிரேமதாச இருந்தாலும் அவ் அரசியல் சாசனம் தான் இன்றும் இருக்கிறது. அவ் அரசியல் யாப்பின்படியே அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தி அவர்கள் விரும்பிய வாறு தடைகளை விதிக்கின்றனர். அடக்கு முறையை கொண்டு வருகின்றனர். இந் நிலமையிலே தான் இராணுவ தளபதி வைத்தியரத்ன நண்பன் இக்பால் அத்தாஸ் சன்டே டைம்ஸ் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரைக்கு எதிர்ப்பு தெரிவித்தார். அந்த சட்டங்கள் இந்த விதிகள் என்கின்ற பிரேரணைகளும் இவ்வாறே சமர்பிக்கப்படுகின்றன. அரசாங்கம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என பத்திரிகைகளில் வெளிவந்தன ஆனால் அடுத்த வாரத்திலா அடுத்த மாதத்திலா எந்த நேரத்தில் அரசாங்கம் அச்சட்டத்தை அமுல்படுத்தும் என்று எம்மால் எச் சந்தர்பத்திலும் திட்ட வட்டமாகக் கூறமுடியாது. இவ்வாறான நிலமைகளில் யுத்தமும் தொடர்பு சாதனிகளும் பற்றி நாம் மக்களுக்கு விளங்கப் படுத்தும்போது எமக்கு தெளிவான அரசியல் நோக்கம் இருக்க வேண்டும் என நான் கருதுகிறேன்.

இன்று செய்யவேண்டியவை

அவசரகால விதிகளின் கீழ் எந்தவொரு சட்டத்தையும் கொண்டு வரும் அதிகாரம் அரசுக்கு உண்டு. அப்படியாயின் இந் நாட்டு பத்திரிகையாளர் செய்யவேண்டியது என்ன? இவ்வேலைகளுக்கு மக்களின் ஆதரவைப் பெறுவது எவ்வாறு என்பதே இன்று நாம் முகங்கொடுக்கும் நிலமையாகும். ஒவ்வொரு நாளும் பத்திரிகை சுதந்திரத்தைப் பற்றி பேசி கூட்டம் வைத்தாலும் சரி இன்று அதையும் தாண்டி வேலை செய்வதற்கான காலம் வந்து விட்டது என்றே நான் எண்ணுகிறேன் எதேச்சாதிகார கொலைகார அரசாங்கம் சட்டங்களை இயற்றுவது அவர்களது நன்மைக்கே என நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்களது சட்டங்களை நாம் தகர்க்கவேண்டும். பத்திரிகைகளுக்கு தடை விதித்தல், அடக்கு முறையை கட்டவிழ்த்தால் நாம் அதற்கு எதிராக தெருவுக்கு இறங்கவேண்டும். இந்நாட்டிலுள்ள மனித நேயம் கொண்ட மனிதத்தை பற்றி எழுதுகின்ற பத்திரிகையாளர்களை வேண்டுமானால், முடியுமானால் கைது செய்யுங்கள் என நாம் அவர்களுக்கு சவால் விடுக்கவேண்டும். அவர்களால் அதனைச் செய்யமுடியாது. அதனை அறிந்து கொள்வதும் எமக்கு பெரும் சக்தியாகும். அவற்றை தவிர்ந்து கூட்டங்களால் மட்டும் இவ்வேலையை செய்ய முடியாது.

இலட்சக்கணக்கானோர் பற்றி ஏன் எழுதுவதில்லை?

இன்று இலட்சக்கணக்கான மக்கள் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். நோய் நொடிகளுக்கு மருந்துகள் இல்லை. ஏன் இவை பற்றி இத்தேசிய பத்திரிகைகள் எழுதுவதில்லை? அது மட்டுமல்ல. இவ் இடத்தில் இராணுவத்தைச் சார்ந்தோர் எவராவது இருக்கின்றனரா என்பதை நாம் அறியேன். ஆனால் சொல்ல வேண்டியவற்றை சொலலியே தீரவேண்டும். ஆனால் எல்லோரையும் ஒட்டு மொத்தமாக நான் சொல்ல வரவில்லை. இன்று சிங்கள அகதி முகாம்களில் உள்ள பெட்டைகளைக்கூட இராணுவத்தைச் சார்ந்தோர் கற்பழிக்கின்றனர். மாலை நேரத்தில் வெளியே கூட்டிச் சென்று காலையில் முகாமுக்கு கொண்டு வருகின்றனர். யுத்தம் என்பது இது தான். மக்கள் சாகும் விதம் மிகவும் கவலைக்கிடமானது. புலி அங்கே இருக்கிறது. இங்கே இருக்கிறது எனக் கூறிக்கொண்டு இராணுவம் குண்டு போடுகிறது. ஆனால் சாவதோ அப்பாவி மக்கள். அண்மையில் இந் நாட்டுக்கு வந்த ஐரோப்பிய பத்திரிகையாளர் இருவரை நாம் சத்தித்தோம் . இவர்கள் எம்மைப் பார்த்து சிரிக்கின்றனர். "நீங்கள் இங்கே இருந்து கொண்டு எதைச் செய்கிறீர்கள்? மக்கள் இறக்கும் விதத்தைக் காண வடக்குக்குச் செல்லுங்கள்" எனக் கூறினார்கள். மனிதத்தன்மை அற்ற முறையில் எழுதப்படும் செய்திகளைத் தவிர வேறு எதைத்தான் இத் தேசியப் பத்திரிகைகள் செய்கின்றன. நான்கு ஐந்து வயதுடைய அல்லது ஏழு எட்டு வயதுடைய பிள்ளைகளையே அவர்கள் புலிக்குட்டிகள் என்கின்றனர். எங்கேயோ வீசப்படுகின்ற குண்டுகளாலும் தோட்டாக்களாலும் இப் பிள்ளைகள் கொல்லப்படும் போது அவர்களை புலிக்குட்டிகள் என்கின்றனர். தோழர்களே இந்த யதார்த்தத்தை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் இந் நாடு அழியும். தமிழ் மக்கள் என்பது இந் நாட்டிலேயே வாழ்கின்ற எமது சகோதர மக்கள் தான் என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும. அவர்களால் பயங்கரவாதம் எனக் கூறப்படுவதை நாம் கேள்விக்குட்படுத்த வேண்டும். தோழர்களே நீங்கள் என்ன நினைத்தாலும் சரி, நான் ஒரு காலமும் தமிழ் போராளிகளை பயங்கரவாதிகள் என அழைக்கவில்லை என்பதை கூறவேண்டும் இந் நாட்டின் சிங்கள அரசாங்கம் இந்நாட்டு தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகள்

28ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு, மரக்கறி வகைகள் அனைத்தும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள விரையுங்கள்

# துர்க்காஸ் சுப்பர்மார்க்கட்

## Tel:297 9444

## விசேட மலிவு விற்பனை

மிளகாய்த்தூள் 3.29/450 கி
6.99/900 கி

| | 5 கிலோ | 1 கிலோ |
|---|---|---|
| சம்பா அரிசி | 6.99 | 1.49 |
| குத்தரிசி | 6.99 | 1.49 |
| அரிசிமா | 6.99 | 1.49 |


மைசூர் பருப்பு, உழுத்தம்பருப்பு, துவரம்பருப்பு, பயத்தம்பருப்பு
**1 கிலோ $ 1.59**
**2 கிலோ $ 2.99**

சீனி 1.39/2 கிலோ
பால் 2% $2.99
முட்டை(12) $1.39
5 றேசஸ் மா $10.99
சவர்க்காரம் .39

## THURKAS SUPERMARKET

*4080 Sheppard ave E (Kennedy/Sheppard)*

மற்றும் ஆட்டிறைச்சி, கோழி, கோழிக்கால், ஈரல், கிட்னி, மரக்கறி வகைகள், பழவகைகள் அனைத்தும் மலிவு விலையில்...




# ATLANTIC AUTO CLINIC LTD

## 1960 LAWRENCE AVE EAST

**Car Certification**
**29.99**

## 755 8550
**CALL**
**MIKE or RAJAN**


Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
**பல வருட அனுபவம் மிக்கவர்கள்**

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை குறைந்த செலவில் சிறந்த முறையில் கம்பியூட்டர் இணைப்புகளுடன் திருத்திக் கொள்வதற்கு நகரில் ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic and Electric
**திருத்துவதில் பல வருடம் அனுபவம் உள்ளவர்கள்**

**We use Quaker State Oil**



www.tamilarangam.net

### எழுச்சியுற்றிராவிடில்...

மத்தியில் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் எழுச்சியுற்றிருக்காவிடில் அவர்கள் மனிதர்கள் அல்ல, அவர்கள் மிருக இனமாகத்தான் இருந்திருப்பார்கள். அவர்களிடம் காணப்பட்ட மனிதத்தன்மையினாலேயே அவர்கள் எழுச்சியுற்றனர். சிற்சில சக்திகள் காரணமாக அவர்கள் இன்று தவறான பாதையில் செல்லலாம். அது வேறொரு கதை. ஆனால் இப்பிரச்சனையின் வரலாற்றை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். அவர்களை தோற்றுவித்தது யார்? அவர்களை பெருக்கியது யார் என்பவற்றை விளக்கிக் கொள்ளாவிடின் நாம் இவ் யுத்தத்திற்கு தீர்வைக் காணமுடியாது.

எங்கள் அலுவலகத்திற்கு வாருங்கள்: இந்த யுத்தத்தின் மூலம் தரகுக் கூலி பெறுவது யார், வடக்கிலிருந்து தங்கம் கொண்டுவருவது யார் என்பதையெல்லாம் நாம் இன்று அறிந்துள்ளோம். தோழர்களே, நீங்கள் எங்களுடைய அலுவலகத்துக்கு வாருங்கள் அழகான இளம்பெண்கள் முப்பது நாற்பது பேர் ஒன்றாக கொல்லப்பட்டுள்ள காட்சியை இன்றைக்கும் உங்களுக்கு காட்ட முடியும். அவர்கள் அனைவரும் நிர்வாணகோலத்திலேயே உள்ளனர். இளம் பெண்கள் போராடச் செல்வது நிர்வாணமாக அல்ல. அவர்கள் அனைவரும் கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்ட அப்பாவிப் பெண்கள் அவர்கள் எமது சகோதரிகள் தான். அதனால்தான் நாம் வேதனைப் படுகிறோம். நாம் மனிதக் கண்கொண்டே யுத்தத்தைப் பார்க்கிறோம். அதனாலேயே யுத்தம் பற்றி எழுத எமக்கு தடை விதிக்கிறார்கள். யுத்தத்தின் கொடுமைகளையும், பாவங்களையும், சண்டாளத்தன்மையையும் நாம் சிங்கள மக்களுக்கு கூறவேண்டும். வடக்கு கிழக்குக்குச் செல்ல பலவருடங்களாக முயற்சித்தும் இயலாத நிலையில் கள்ளத்தனமாக அங்கு சென்ற எங்கள் தோழர்களின் அனுபவங்களைக் கொண்டே நான் பேசுகிறேன். சிங்கள பௌத்த இராணுவம் எனக்கூறப்படும் அவ் இராணுவம் கடந்த காலங்களில் தெற்கில் உள்ள சிங்கள பௌத்த ஆண், பெண்களுக்கு இழைத்த கொடுமைகளையும் சித்திரவதைகளையும நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவ்வாறான இராணுவம் யுத்த மனோபாவம் வளர்க்கப்பட்டு இனவாத வெறி ஊட்டப்பட்டு வடக்கு கிழக்குக்கு அனுப்பப்பட்டால் எவ்வாறு நடந்து கொள்வர் என்பதைப் பற்றி நான் சொல்ல வேண்டுமா? இது பொது அறிவுக்கு உட்பட்ட விடயம். இதைத்தான் யுத்தம் என்பது. இதனிடையே சகல சிங்களவர் களையும், தமிழர்களைக் கொல்லும் போர் வீரர்களாக மாற்றுவதைப் பற்றி பேசும் ஜாதிக சிந்தனையாளர்கள் புதிய கட்சியொன்றை உருவாக்கும் புது முயற்சியில் ஈடுபடுவதாக தகவல்கள் கிடைக்கின்றன. அரசாங்கத்தின் ஆதரவு ஜாதிக சிந்தனையாளர்களான இனவாதிகளுக்கு கிடைக்குமென்றே நான் நினைக்கிறேன். திலக் கருணாரத்ன, குணதாச அமரசேகர, நளின் டி சில்வா போன்றோர் ஹிட்லரைப் போன்று இனவாதக் கட்சியை உருவாக்க முயற்சிப்பது எதற்காக? இது திட்டவட்டமாக அரசாங்கத்துக்கு ஆதரவானதே மென்மேலும் இனவாத விதையை விதைப்பதும் இன்று அரசாங்கத்தின் அவசியமாகும். உங்களைப் போன்ற புத்திசாலிகள் இவ்இனவாதிகளின் நோக்கங்களை விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் செய்யப்போவது என்ன? யுத்தத்தைப் பாவித்து பிழையான வழியில் எவ்வாறு நன்மை பெறுவார்கள்? அவ் நன்மைகள் மூலமாக தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பது எவ்வாறு என்பனவற்றை நீங்கள் விளங்கிக் கொள்ளவேண்டும்.

அரசாங்கமா? இராணுவமா?

யுத்தத்தின் பெயரால் அனேக விடயங்கள் செய்யப்படுகின்றன. ஆகக் குறைந்த அளவு கல்வி பெற்றவர்களையே அண்மையில் இராணுவத்தில் சேர்த்தனர். ஐந்தாம் வகுப்பு சித்தியடைந்திருக்க வேண்டும் இதுதான் கேட்கப்பட்ட ஆகக்கூடிய தகமையாகும். நண்பர்களே அந்த ஐந்தாம் வகுப்பு பாஸ் பண்ணிய சிப்பாய் வடக்கின் யுத்தத்திற்கும் மட்டும் அல்ல. நீங்கள் வாழ்க்கைச் சுமை அதிகரித்து விட்டது என சம்பளத்தைக் கூட்டுமாறு கோரி வேலை நிறுத்தம் செய்யும் போது புத்தகமோ பத்திரிகையோ வாசிக்காத ஐந்தாம் வகுப்பு பாஸ்பண்ணிய அந்தச் சிப்பாய் உங்களுக்கும் துப்பாக்கியை நீட்டுவான். உங்களுக்கு மட்டுமல்ல, எனக்கும் இங்குள்ள ஏனைய பத்திரிகையாளர் அனைவருக்கும் தான். இது தான் நிலமை. யுத்தத்தின் பெயரால் அனேக விடயங்களை அவர்களால் செய்ய முடியும். இன்று காலை எட்டு ஒன்பது மணியளவில் எனக்கு தகவல் ஒன்று கிடைத்தது தோழர் சுனந்த தேசப்பிரிய மீது இராணுவத்தை சார்ந்த பலர் மிகுந்த ஆத்திரத்துடன் இருக்கிறார்கள் என்பதே அத்தகவலாகும். (சுனந்த தேசப்பிரிய MIRJE அமைப்பால் வெளியிடப்படும் 'யுக்திய' என்னும் வாரப்பத்திரிகையின் ஆசிரியர் மொழிபெயர்ப்பாளர்) 'யுக்திய' பத்திரிகை தமிழ் மக்களின் பிரச்சனை தொடர்பாக எழுதுவதுதான் அதற்கு காரணமாகும். "மச்சான் கொஞ்சம் கவனமாக இரு" என்பதை மட்டும் தான் என்னால் சுனந்தவுக்கு கூறமுடியும். யதார்த்தத்தை கூறுவதற்கு அவர்கள் எதிரானவர்கள்.

அரசாங்கத்தை ஏசு, இராணுவத்தை ஏசாதே எனச் சிலர் கூறலாம். அரசு என்பது இராணுவம் தான். பிரேமதாச துப்பாக்கியை தூக்கிக்கொண்டு மக்களுக்கு முன்னால் வரவில்லை. இராணுவம் தான் வந்தது. விஜேதுங்க வரப்போவதுமில்லை. ரணில் வரப்போவதுமில்லை. நாம் வேலை நிறுத்தம் செய்யும் போது அவர்களது ஆணையின்படி வருவது இராணுவம்தான். இதனைக் கூறுவதற்கு நாம் பயப்படவில்லை. எமக்கு தெரிந்த அரசியலின்படி அரசு என்பது இராணுவம் என்றே நாம் படித்துள்ளோம். ஒன்றில் நாம் இராணுவத்திற்கு உண்மை நிலமையை விளங்கப் படுத்தவேண்டும். ஆனால் எல்லாவற்றுக்கும் முன்பு இந் நிலமைகளை மக்களுக்கு விளங்கப்படுத்த வேண்டும். இதைத் தவிர இன ஐக்கியத்திற்கு வேறு எந்தப் பாதையும் கிடையாது.

தோழர்களே, தோழியர்களே, நான் இறுதியாக எங்கள் பத்திரிகையாளர்களிடம் மிகவும் பணிவாகவும் போராட்ட உணர்வுடனும் கோருவது ஆட்சியாளர்கள் சட்டங்களை இயற்றட்டும் நாம் பயப்பட வேண்டியதில்லை. சட்டங்களை தகர்ப்போம், மக்கள் மீது அன்பு செலுத்துவதாயின் சட்டங்களை மீறவேண்டும். விசேடமாக இவ் ஈனர் ஆட்சி இயற்றும் சட்டங்களை நாம் மீறியே தீரவேண்டும் அப்போது மக்கள் பத்திரிகையாளர்களுக்கு ஆதரவு அளிப்பர் அவ் உண்மையான போராட்டத்திற்கு வெற்றி உண்டாகுக எனக்கூறி எனச் பேச்சை முடிக்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், மரக்கறி வகைகள்,
கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற ...
தமிழ், ஹிந்தி வீடியோப் படங்கள் வாடகைக்குப் பெற...

# A.R.K MARKET

## 31-35 St.Dennis Dr
## (Don Mills/Eglinton)

★ பால், பழங்கள்,
உடன் மரக்கறிகள்,
இறைச்சி மீன் வகைகள்
★ கனடிய உணவுப்
பொருட்கள்
★ Frozen seafood

CD, Audio
**மலிவு**
**விற்பனையில்**

பழைய, புதிய தமிழ் வீடியோ
படங்கள் வாடகைக்கும்
விற்பனைக்கும்
(ஒரிஜினல் பிரதிகள் மட்டும்)

## ஏ.ஆர்.கே மார்க்கட்
## (416) 421 3429



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

**வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னண்டோ சரத் த சில்வா, ரஞ்சித் குமார**

**தமிழாக்கம்: செ. லோகநாதன்**

சமாதானத்திற்காக ஜேவிபிக்கு வேண்டுகோள்

1988 நவம்பர் மாதத்தை அடையும்போது நாட்டின் நிலைமை மேலும் மோசமடைந்தது. ஜேவிபியின் வன் செயல்களும் அதற்கு எதிராக அரசாங்கத்தினதும் அரசாங்க ஆதரவைப் பெற்ற பல்வேறு ஆயுதக் குழுக்களதும் வன்செயல்களும் ஒன்றையொன்று சளையாத வகையில் வளர்ந்த நிலமையையே காணக்கூடிய தாகவிருந்தது.

நிலமை இவ்வாறு விருத்தியடையும் போது நாட்டின் பொறுப்பு வாய்ந்த மட்டத்தைச் சார்ந்த பிரஜைகள் பலர் ஆயுதங்களை கீழேபோடுமாறும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு நடத்தப்படும் பொதுத் தேர்தலுக்கு சம்மதிக்குமாறும் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த செயல்படுமாறும் ஜேவிபி யிடம் வேண்டினர். இவ்வேண்டுகோள் ஜே.ஆர் ஜெயவர்தனவின் அவசியங்களைப் பூர்த்தி செய்வதற கான முயற்சியே என ஜேவிபி கணித்தது. இவ் வேண்டுகோளை "மரண பொறி" என வர்ணித்த ஜேவிபி இது சமாதானம் என்னும் போர்வையுள் மறைந்து கொண்டு தேசபக்த போராளிகளை ஏமாற்றி பூண்டோடு அழிப்பதற்காக பல்வேறு நபர்கள் மூலமாக ஜெயவர்தன முன்னெடுக்கும் வேலைத்திட்டமே எனவும் கூறியது. ஜேவிபி ஆயுதங்களை கையிலெடுத்த தாலா சமாதானம் இல்லாமல் போனது? எனக் கேள்வி எழுப்பிய ஜேவிபி, தாம் அரசியல் கட்சியே தவிர இராணுவம் அல்ல ஆதலால் கீழே போடுவதற்கு தமது கைகளில் ஆயுதங்கள் இல்லை எனவும் கூறியது. நீதி, நியாயம், தேசம் ஆகியவற்றுக்காக உயிரைத் தியாகத்துடன் போர்க்களத்தில் இறங்கியுள்ளது தேசபக்த மக்களே எனவும் ஆதலால் இவ்வாறான நிபந்தனைகளை விதிக்கவேண்டியது மக்களுக்கே அன்றி தமது கட்சிக்கு அல்ல எனவும் ஆனாலும் பொதுமக்களது கட்சி என்ற ரீதியில் இக் கொலைகார ஆட்சிக்கு எதிராக ஆயுதம் ஏந்துவதற்கான மக்களின் உரிமையை அங்கிகரிக்கும் தாம் அதனை பூரணமாக ஆசீர்வதிப்ப தாகவும் கூறினர். மேலும் கொலைகார ஆட்சியாளர் பொதுமக்களுக்கும் தமது கட்சிக்கும் எதிராக கட்டவிழ்த்து விட்டுள்ள அடக்கு முறைக்கு எதிராக ஆயுதம் தூக்கவும் போராடவும் உள்ள உரிமையை எவரையும் நம்பி கைளிப்பதற்கு தாம் தயாராயில்லை என்பதை அனைவரும் கூறினர்.

சமாதானத்தை ஏற்படுத்த நாம் எவ்விதத்திலும் தடையாக இல்லை, நாமும் சமாதானத்தையே வேண்டுகிறோம். ஆனால் சமாதானத்தை நிலைநாட்ட வேண்டியது நாம் அல்ல இக்கொலைகார ஆட்சியா லேயேயாகும். சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் 1987 ஜூலை 29ம் திகதி ஒப்பமிடப்பட்ட ஜெயவர்தன - ராஜீவ் காந்தி உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட வேண்டும், இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தையும் நாட்டில் உலவுகின்ற இந்திய 'ரோ' உளவுப் படையையும் உடனடியாக வெளியேற்றவேண்டும். மாகாண சபைகளை இரத்துச் செய்து தமிழ் ஈழபயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவர சரியான நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசாங்கத்தா லும் ஐக்கிய தேசியக் கட்சியாலும் உருவாக்கப்பட்டுள்ள சட்டவிரோத இராணுவம் அரை இராணுவம் அனைத்தும் கலைக்கப்படுவதோடு இவற்றுக்கு புறம்பாக ஆயுதபாணி யாக்கப்பட்டுள்ள சகலரும் நிராயுதபாணியாக்கப்படல் வேண்டும். மக்களை அடக்குவத ற்காக பதவி உயர்வு வழங்கப்பட்டு பொலீஸ் இராணுவம், நிருவாக சேவை ஆகிய துறைகளில் உயர் பதவிகளை வகிக்கும் கொலைகாரர் கள் பதவி நீக்கம் செய்யப்பட்டு மக்கள் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்படல் வேண்டும். காணாமல் போனோர் தொடர்பான உண்மைத் தகவல்களை மக்களுக்குச் சமர்பிக்க வேண்டும். ஜனாதிபதியும் அரசாங்கமும் இராஜினாமா செய்து உயர் நீதிமன்றத்தின் சிரேட்ட உறுப்பினரான நீதியரசர் ஆர். எஸ்.வணசுந்தா அவர்களின் கீழ் காபந்து அரசாங்கம் உருவாக்கப் பட்டு சுதந்திரமானதும் நீதியான துமான பொதுத்தேர்தலும், ஜனாதிபதி தேர்தலும் நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். என மேலும் கோரப்பட்டது. (இது தொடர்பான விபரங்களுக்கு ஜேவிபியின் மத்திய பத்திரிகையான 'ரத்துபலய' 1988 நவம்பர் 04ம்திகதி இதழைப் பார்க்கவும்)

வன்செயல்கள் மென்மேலும் அதிகரித்தன. ஜேவிபியின் கோரிக்கைகள் பயன் அளித்ததைக் காணமுடியவில்லை. பாராளுமன் றத்தைக் கலைக்க ஜனாதிபதி ஜெயவர்தன விரும்பிய போதிலும் ஏனைய நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள அவர் எவ்விதத்திலும் உடன்படவில்லை. இறுதியாக ஜனாதிபதி தேர்தலுக்கு நியமனப் பத்திரம் தாக்கல் செய்யவேண்டிய தினமாக 1988ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் திகதி பிரகடனம் செய்யப்பட்டது.

1988 டிசம்பர் 19ம் திகதி ஜனாதிபதி தேர்தல்:

1988 ஜனாதிபதி தேர்தலுக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஆர். பிரேமதாச, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக, ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியின் சார்பில் ஒசி அபேகுணசேகர ஆகியோர் நியமனப் பத்திரம் தாக்கல் செய்தனர். நியமனப் பத்திரம் தாக்கல் செய்த தினம் நாட்டின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல்வேறு பகுதியிலும் ஊரடங்குச் சட்டத்தை பிறப்பிக்க வேண்டிய நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. மொனராகலை திஸ்ஸமகராமை, தங்காலை ஆகிய பிரதேசங்களில் ஊரடங்குச் சட்டத்தையும் மீறி ஊர்வலம் சென்றோர் மீது பிரயோகம் செய்யப்பட்டது.

தேர்தலுக்கு எதிராக போராடுவதாக ஜேவிபி சபதமிட்டது. போலித்தேர்தலை பகிஷ்கரிக்குமாறு அறிக்கை வெளியிட்ட ஜேவிபி ஜனதிபதி தேர்தலை சீர்குலைக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டது. 'தேசிய தொழிலாளர் போராட்ட மத்தியஸ்தான'த்தின் மூலமாக நாடு பூராவும் பொது வேலை நிறுத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டதோடு 'தேசிய மாணவர் போராட்ட மத்தியஸ்தானத்தால் பாடசாலை மாணவர்களும் பாடசாலை பகிஷ்கரிப்புக்காக இழுக்கப்பட்டனர். இச் சம்பவங்களின் போது அனேகமாக பலாத்காரம் பாவிக்கப்பட்டது. ஜேவிபியின் உத்தரவுகளைப் பின்பற்றாத காரணத்திற்காக இலங்கை போக்குவரத்து சபையைச் சார்ந்த ஐந்து சாரதிகள் கொல்லப்பட்டனர். துறைமுக அதிகார சபையைச் சார்ந்த பொறியியலாளர் ஒருவர் கொல்லப்பட்டார். எவ்வித பாதுகாப்பும் அற்ற மக்களுக்கு ஜேவிபியின் ஆணைகளுக்கு கீழ்ப்படிவைத் தவிர செய்வதற்கு வேறு எதுவுமே இருக்கவில்லை. தென் பிரதேசத்தின் தாழ்ந்த மலைச்சாரலில் இருந்த பெருந்தோட்டங்களிலும் வேலை நிறுத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டதோடு தென் மாகாணம் பூராவும் அரச நிருவாகம் முற்றாக தடைப்பட்டது.

தேசபக்த மக்கள் இயக்கத்தாலும், தேசபக்த மக்கள் ஆயுதப் படையின் இணைந்த ஆணையிடும் தலைமையகத்தாலும் ஜனதிபதி தேர்தலுக்கு தடைவிதிக்கப்பட்டது. பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறும் நாட்களில் அவ் அவ் பிரதேசங்களில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. பிரச்சாரக் கூட்டங்கள் மீது தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. பலாமரச் சந்நிதியில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியின் முதலாவது பிரச்சாரக் கூட்டத்தின் மீது குண்டு வீசப்பட்டது. ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்கும் மட்டுமே முன்னர் அச்சுறுத்தல்கள் இருந்தன. ஆனல் ஜனதிபதி தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தம்புளை பிரதேச பிரதான அமைப்பாளர் ஜனதிபதி தேர்தலுக்கு முதல் நாள் படுகொலை செய்யப்பட்டார். ஜேவிபி யின் தடை உத்தரவு காரணமாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரச்சார வேலைகளுக்கு இடையூறுகள் ஏற்பட்டன. ஆனல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எவ்வளவுதான் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்ட போதிலும் இராணுவ, பொலீஸ் பாதுகாப்புடன் பிரச்சார வேலைகள் தொடர்ந்தும் நடைபெற்றன. ஆயினும் அச்சுறுத்தல்கள் காரணமாக கூட்டங்களுக்கு மக்கள் கலந்து கொள்வது குறைவாகவே இருந்தது.

ஜேபிபி மீதான அரசாங்கத்தின் தாக்குதல்கள் மேலும் அதிகரித்த போதிலும் ஒட்டு மொத்தமாக பார்க்கும் போது ஜேவிபியின் பயணத்தை அரசாங்கத்தால் நிறுத்த முடியாததையே காணமுடிந்தது. கடவத்தையில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியின் பிரச்சாரக் கூட்டத்தைத் தாக்கிய தேசபக்த மக்கள் இயக்கத்தின் படுகொலைக் குழுவினல் ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியின் உபதலைவர்களில் ஒருவரான தேவ பண்டார சேனரத்ன படுகொலை செய்யப்பட்டார். இராணுவத்தினரைப் போல் வேடமணிந்து கண்டி போகம்பர சிறைச்சாலைக்குள் பிரவேசித்த தேசபக்த மக்கள் இயக்கத்தினர் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐவரை மீட்டுச் சென்றனர். டிசம்பர் 13ம் திகதி இருளடையும் நேரத்தில் கொழும்பு நவ மகசின் சிறைச் சாலையைத் தாக்கி அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமது தோழர்கள் சுமார் இருநூறு பேரை மீட்டுச் சென்றனர். ரஞ்சித் பராக்கிரம சேனயினல் இத்தாக்குதலுக்கான உரிமை கோரப் பட்டது.

ஜனதிபதி தேர்தல் அண்மிக்கும் போது வன் செயல்கள் மேலும் அதிகரித்தன. 1988 ம் ஆண்டு டிசம்பர் 1ம்திகதி "போலி ஜனதிபதி தேர்தலைப் பகிஷ்கரிப்பது ஏன்? என்றும் தலைப்பில் ஜேவிபி யினர் வெளியிட்ட அறிக்கையில் இப் போலித் தினத்தன்று வீடுகளில் தங்கியிருந்து எதிர்ப்பைக் காட்டுமாறு கூறப்பட்டது. இதன் பின்னர் "தேசபக்த மக்கள் ஆயுதப் படையணியின் ஒப்பத்துடன் ஜனதிபதி தேர்தல் தொடர்பாக பல "கட்டளைகள்" பிறப்பிக்கப்பட்டன. அவையாவன:

இல 25- ஜனதிபதி தேர்தலுக்கு எதிராக ஊரடங்குச் சட்ட உத்தரவு கட்டளை இல. 26 ஜனதிபதி தேர்தலுடன் தொடர்பான சகல தரப்பு தேர்தல் உத்தியோகத்தர்களுக்கும் விடுக்கப் படும் உத்தரவு. கட்டளை இல. 27 கிராம சேவையாளர் அனைவரதும் கடமைகள் இரு வார காலத்திற்கு இடை நிறுத்தம் செய்யும் உத்தரவு, கட்டளை இல. 28 - டிசம்பர் 18-19 ஆசுப்பத்திரி சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனம் செய்யும் உத்தரவு,

கட்டளை இல. 29- எதிர்வரும் வாரத்தில் செயல்படத் தக்கவாறு சகல உயர்மட்ட ஹோட்டல்களையும் மூடுவதற்கான உத்தரவு என்பவையாகும்.

ஜனதிபதி தேர்தல் தினத்தன்று ஜேவிபியினல் நாடு பூராவும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதோடு வாக்களிக்கச்செல்பவர்கள் தேசத்துரோகிகள் எனக் கணிக்கப்பட்டு மரண தண்டனைக்குட்படுத்தப்பட்டனர். வாக்களிப்பு நிலையங்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# றசிலும் நாங்களும்

### மெயில்வாகனம்

கொஞ்சம் கொஞ்சமாக சனம் றயிலுக்கு பயப்படாமல் நின்று பார்க்கிற காலம் வந்து பின் யாரோ தெரிந்தவர்கள் றயிலில் ஏறிப் போகும் போது கைகாட்டி விட்டார்கள். ரேட்டில் றயில் பார்க்கின்ற நாகமுத்தருக்கு பெருமை பிடிபடவில்லை காரணம் அவருக்கு தெரிந்த ஒருவர் றயிலிருந்த அவ்வளவு சனங்களுக்கும் கைகாட்டிவிட்டார். எவ்வளவு பெருமை! றயிலில் போகுமளவுக்கு தகுதி தராதரம் உள்ள ஒருவர் நாகமுத்தருக்குமிருக்கிருரே. இதை கண்ட பொன்னுத்துரைக்கு பொறுக்கவில்லை றயில் வாற நேரம் றயில் பார்க்க தார்ரேட்டில் கூடும் நூற்றுக்கணக்கானவர்கள் பார்க்க தானும் ஒரு நாளைக்கு றயிலில் ஏறி வந்து எல்லோருக்கும் கைகாட்டாவிட்டால் தனது பெயர் பொன்னுத்துரையில்லை என்று மனதிற்குள் நினைத்துவிட்டார். இந்த பயங்கரமான ஐடியாவை வெளியிட்டால் கட்டாயம் வேற யாராவது செய்து விடுவார்கள் என்பதனல் அடுத்தநாள் விடியற்காலையே சாவகச்சேரி றயில் நிலையத்தில் போய் காவல் நின்று ரிக்கற் எடுத்துக் கொண்டு றயிலில் ஏறி மற்றவர்கள் செய்யாத அளவுக்கு வித்தியாசமாக றயில் பெட்டி படியில் நின்று றயில் பார்க்க நின்ற அத்தனை பேருக்கும் கைகாட்டி அந்த சாதனைக்குரிய பெருமையை தட்டினர். அத்தனை பேருக்கும் கைகாட்டி அந்த சாதனைக்குரிய பெருமையை தட்டினர் பொன்னுத்துரையார் ஆனல் அவர் கைகாட்டிவிட்டு கொடிகாமம் றயில் நிலையத்தில் இறங்கி 4 மைல் தூரம் நடந்து களைத்து மத்தியானச் சாப்பாடுமல்லாமல் வேர்க்க விறுவிறுவிக்க அவர் வீட்டிற்கு வரும் போது நாகமுத்தர் குளித்து சாப்பிட்டு நித்திரையும் கொண்டு எழும்பி நின்ருராம்.

இப்படியே ரயிலோட்டம் சகசமான பிறகு நாகமுத்தருக்கு ரயிலில் பிரயாணம் செய்ய வாய்ப்பு கிட்டியதாம் பரந்தனிலுள்ள கமத்திற்கு ரயிலில் போகப்போகிருர் ஊரெல்லாம் சொல்லிவிட்டு சாவகச்சே ரியிலிருந்து ரயிலில் வந்து சொல்லி வைத்த ஆட்களுக்கெல்லாம் ரயிலிலிருந்து கைாட்டி விட்டு போனவர். கொடிகாமத்தில் ஒரு அதிஸ்டம் காத்திருந்தது. இரண்டு ரயில் விலத்திக் கொள்ளும் காட்சி. ஒரு ரயில் ஒரு தண்டவாளத்தில் நிற்க மற்ற ரயில் மற்ற தண்டவாளத்தால் வந்து விலத்திப் போகும் என்று கேள்விப்பட்டவர். ஆனல் ரயில் இரண்டும் இரண்டு தண்டவாளம் போட்ட பாதையில மாறினதை அதிசயமாய் பார்த்து வியந்தபடியிருந்தார் கொடிகாமம் நிலையத்தில் இரண்டு ரயில்கள் சமனக நின்று சொண்டிருந்தது. தூர இடங்களிலிருந்தெல்லாம் மாட்டுவண்டில் கட்டி றயில் பார்க்கவந்த சனங்கள். இரண்டு ரயிலுக்கும் இடையில் 3–4 அடி வித்தியாசம் இருந்தது. ஒரு றயில் அடைச்ச குரலில் கூவிக் காட்டிவிட்டு மெதுவாக புறப்படத் தொடங்கியது. நாகமுத்தருக்கு தானிருக்கும் றயில் போகிறதா அல்லது பக்கத்தில் நின்ற றயில் போகிறதா என்பது தெரியவில்லை. ஒரு இன்ப அதிர்ச்சி நாரிக்கு மேலே உடம்பு முழுதையும் வெளியே நீட்டி புதினம் பார்த்தவருக்கு மண்டையிலே இடி விழுந்த மாதிரி இருந்தது. பார்த்தால் அடுத்து வரும் றயிலில் வந்த ஒருவன் நாகமுத்தருக்கு காதை பொத்தி வெழுத்ததுமல்லாமல் சிரித்தபடி கை காட்டிக்கொண்டு போய்க் கொண்டிருந்தான். வாயில் குதப்பியிருந்த வெற்றிலை குழம்பு வெளியே வடிய பொறிபறக்கும் கண்களால் அவனையே பார்த்த நாகமுத்தருக்கு ஆத்திரம் பற்றி எரிந்தது. என்ன செய்யலாம்? பார்த்தாற் அதே நகரும் றயிலில் இன்னெருவர் இவரை போலவே தலையை வெளியே நீட்டியபடி வந்துகொண்டிருந்தார். இதுதான் தருணம் என நினைத்த நாகமுத்தரும் முன்னையவன் தந்த பரிசை தனது பலமெல்லாம் கூட்டி பின்னையவனுக்கு கொடுத்தார். அவன் பாவம் இருண்டது விடிஞ்சது எதுவும் தெரியாது. ஆனல் நாகமுத்தருக்கு பழியை தீர்த்துக் கொண்டது எவ்வளவு சந்தோசம்.

---

அறுசுவை...

புக்கும் உறுதியான செயலாக இருக்கும்' என்றும் கூறுகிறது.

அதாவது தங்களது தலைவரை அழிக்க, தங்களது பிரதித் தலைவரையே பயன்படுத்திய ஒரு மத்திய அரசும், அதன் உளவு நிறுவனங்களும் உறவைப் புதுப்பிக்க வந்தால் 'இவர்களது கதவு திறந்து இருக்குமாம்'. இதென்ன கதை? அப்படி ஒரு உறவை ஏற்படுத்த மாத்தயாவைப் பயன்படுத்தலாமே. மாத்தயாவுக்கு ரேவோடு தொடர்பு என்று மரண தண்டனை என்கிறீர்கள். பிறகு ரேவோடு உறவைப் புதுப்பிக்கவும் தயார் என்கிறீர்கள். உறவு மோசமாக இருக்கும் போதே சதி செய்கின்றவர்கள் சேர்ந்திருந்து கழுத்தறுக்க மாட்டார்கள் என்று என்ன நிச்சயம்? கொஞ்சம் பொருந்தும்படியாக சொல்லுங்கப்பா.. யார் காதில் பூ சுற்றுகிறீர்கள்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறு (சு) வை

இப்போது கொஞ்சக் காலமாக நான் எதையாவது எழுதினால் கொஞ்ச நாளில் அது பற்றிய விடயங்கள் ஏதாவது மீண்டும் தெரிய வருகிறது. கோண்டாவில் பாடசாலை பற்றி எழுதிய மறுநாள் அந்த பாடசாலைக்கே குண்டு வீசினார்கள்.

மதங்கள் பற்றி எழுதிய போது தமிழர் ஒருவர் இந்த மதங்கள் பற்றி புத்தகம் ஒன்று எழுதியது பற்றியும் அதை கண்டித்து கத்தோலிக்க குருவானவர் ஒருவர் எழுதியது பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். எழுதி கொஞ்ச நாளில் இங்குள்ள ஆலயம் ஒன்றில் அந்த குருவானவரைச் சந்தித்தேன். சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் அவர் எழுதிய கட்டுரை பற்றி குறிப்பிட்ட போது, ஆச்சரியப்பட்டதுடன் மேலும் பல தகவல்கள் சொன்னார். பிறகு கொஞ்ச நாளில் பார்த்தால் சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் அந்த புத்தகம் எழுதியவர் பற்றி ஒரு கட்டுரை படத்துடன் வந்தது. அதில் அவர் தான் தற்போது அரசாங்க பென்சன் பெறுபவர்களில் வயதானவர் என்றும் (நூறு வயதாகிறதாம் அவருக்கு) அவரும் சென். பற்றிக்ஸில் படித்தார் என்றும் இந்துவான இவர் அங்கே தான் கத்தோலிக்க மதம் பற்றி அறிந்ததாகவும் பின்னர் பெந்தக்கோஸ்தே மதத்திற்கு மாறினார் என்றும் பல விசயங்கள் இருந்தது. இவர் ஒருவகையில் என் ஆச்சிக்கு உறவினர். ஆனால் ஆச்சி இந்து மதத்திலிருந்து பெந்தக்கோஸ்தே மதத்திற்கு போய் பின்னர் கத்தோலிக்கர் ஆனவர்.

★ ★ ★

இதைப் போல சமீபத்தில்



# காதில பூ?
## மாத்தயாவுக்கு மரண தண்டனை
## றேவுக்கு செங்கம்பள வரவேற்பு
## அறிஞர் க(ல்)லாநிதி கியூரியஸ் ஜி

யாழ்ப்பாணத்தின் ஹோம்லெஸ் பற்றி எழுதிய போது எமது ஆயுதப் போராளிகளின் முன்னோடியான 'ஆயுதம் தாங்கிய' ஒருவர் பற்றி எழுதியிருந்தேன். அவர் அசப்பில் அமெரிக்க நடிகர் ரொபேட் டுவால் போலிருப்பார் என்று எழுதினேன். இந்த ரொபேட் டுவால் அசப்பில் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்ஸ்வா மித்தரோன் போலிருப்பார். (மொழி ஆய்வாளர் கவனிக்க.. மித்தரோன் என்பதற்கும் மித்திரன் என்பதற்கும் தொடர்பு இருக்கக் கூடும் என்பதால் பிரான்ஸ் நாட்டிலும் தமிழர் முன்பு கல்லைத் தோண்டி மண்ணைத் தோண்டாத காலத்தின் முன்னே...)

ரொபேட் டுவால் நடித்த படமான Apocalypse Now படம் புதுவருடத்தன்று தொலைக் காட்சியில் பார்த்தேன். வியட்னாம் யுத்தம் பற்றிய இந்தப் படம் நான் தியேட்டரில் ஏற்கனவே பார்த்திருந்தேன். தியேட்டரில் பார்க்கும் போது அது ஒரு புதுமையான அனுபவம். Surround Sound System எனப்படும் முறையில் ஒலிப்பதிவு செய்யப்பட்டதால் குண்டு வீச்சுக்கள் நடக்கும் போது நாங்களும் நடுவில் நிற்பது போன்ற உணர்வு.

இந்தப் படத்தில் ரொபேட் டுவால் நம்மூர் Homeless Cowboy மாதிரியான ஒரு பாத்திரத்தில் வருகிறார். அதாவது பைத்தியக்காரத்தனமான ஆயுதம் தாங்கிய கௌபோய் பாணியில்.... அசல் டெக்ஸாஸ் பாணியில் கௌபோய் தொப்பி அடித்திருப்பார். குண்டு வீச்சு நடக்கும் போது அவனவன் உயிரைக் காத்துக் கொள்ள போய் பதுங்கிக் கொள்ளும் போதும்

அலட்டிக்காமல் கௌபோய் மாதிரி நெஞ்சை நிமிர்த்தியபடி I don't give a damn என்ற மாதிரி நிற்பார்.. குண்டு வீச்சு நடக்கும்...

இந்த நேரம் மாட்டின் ஷீன் அங்கே வந்திருப்பார். அவரோடு டுவால் பேச்சுக் கொடுப்பார். வியட்னாமில் நேப்பாம் எரிகுண்டுகளை அமெரிக்கா வீசி அழித்திருந்தது அந்த நேரத்தில். அப்போது டுவால் சொல்வார்.. You know what I like? When I wake up in the morning, I love the smell of napalm all over the mountain. (எனக்கு என்ன பிடிக்கும் என்று உனக்குத் தெரியுமா? நான் காலையில் எழும்பும் போது மலை முழுவதும் இருக்கின்ற நேப்பாம் மணத்தை நேசிக்கிறேன்) என்று சொல்லி விட்டு சொல்வார்... . it smells like....... (கொஞ்ச நேரம் மௌனம்) Victory! என்று. இப்படியாகச் சொல்லி விட்டு சொல்வார் You know? one day the war gonna end!. இப்படிச் சொல்லும் போது ஒரு நம்பிக்கை கலந்த அலட்சியம் அதில் இருக்கும். அது தான்! யுத்தம் முடிவுக்கு வருவது பற்றி இவருக்கு கவலை கிடையாது. இவர் யுத்தம் செய்து கொண்டே இருப்பார்.

இதைப் பார்க்கும் போது ஒரு 'ஆயுதங்களின் மேல் காதல் கொண்ட மனநோயாளி' மாதிரியான உணர்வு... நம்ம ஹோம்லெஸ் காரரும் கிளுவந்தடியால் செய்த துப்பாக்கியை நீட்டிக் கொண்டிருப்பார். அவருக்கு ஆயுதம் தாங்குதல் பிரச்சனைக்கு தீர்வு என்பதை விட தனக்கு அது ஒரு பலத்தை தருகிறது என்ற உணர்வு தான். அவருக்கு ஆயுதம் தாங்கி பிரச்சனையைத் தீர்க்கின்ற அளவுக்கு ஒரு தலைபோகின்ற பிரச்சனை எதுவும் இருக்கவில்லை. அமெரிக்க கௌபோய்களுக்கும் இந்த துப்பாக்கி ஒரு பலத்தை, அதிகாரத்தை நிலைநாட்டுகின்ற ஆயுதம் தான். கௌபோய் படமொன்றில் நாயகன் சொல்வார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(ஜோன் வெய்ன்?) Shoot now, Think Later என்று. சிந்தித்தபின் சுடுவதற்கு பதிலாக சுட்ட பின்பும் சிந்திக்காத நமது மகான்கள் உள்ளார்கள்.

டுவாலுக்கும் வியட்னுமில் நேப்பாமின் மணத்தை ரசிக்க முடிகிறது. காரணம் யுத்தத்திற்கு அவர் addict ஆகியதால். யுத்தம் என்பது அவருக்கு ஒரு பிறப்புரிமை என்ற மாதிரி.. துப்பாக்கியைத் தூக்கி வைத்துக் கொண்டு யுத்தத்திற்கு அடிமைகளாகி விட்டவர்கள் நம் நாட்டிலும் இருக்கிருர்களே.. மரணங்கள் தியாகங்களாகவும் கொலைகள் நியாயங்களாகவும் ஆன நிலையில்... சரி விசயத்துக்கு வருவோம்..

★ ★ ★

நான் எதையாவது எழுதினுல் அது பற்றி ஏதாவது பின்னர் தெரிய வருவது போல... சோவும் யாரைப் பற்றி ஆதரித்து எழுதினுல் போதும். அவர்கள் தோற்றுப் போய் விடுவார்கள். எமர்ஜன்சி காலத்தில் ஜனதாவை ஆதரித்தார். பின்னர் ஜனதாவைக் காணும். இப்போதும் சந்திரசேகரை ஆதரித்தார். ஆளையே காணும். சோவின் ராசி அப்படி. இதனுல் சோ தங்களை ஆதரித்து விடுவாரோ என்ற பயத்தில் நடுங்குகிற அரசியல்வாதிகள் ஏராளம்.

அதைப் போல 'இங்கே சில பத்திரிகையாளர்கள்'... கொஞ்ச நாள் கிட்டுவுக்கு ஆதரவு. கிட்டு ஜலசமாதியடைந்தார். பின்னர் மாத்தயாவுக்கு ஆதரவு. மாத்தயா மண்ணேடு மண்ணுகிருர். இப்போது 'ஓராயிரம் ஆண்டு ஓய்ந்து கிடந்த பின்பே வாராது வந்த மாமணி, வாளின் மேல் மாதவம்' என்று ஜால்ரா நடக்கிறது. மாமணிக்கு நான் சொன்னது போல, பொட்டம்மான் ஏதாவது 'பொட்டு' வைப்பாரோ என்னவோ.? அல்லது காற்ருேடு கலப்பாரோ? சோதியோடு சங்கமிப்பாரோ? இதை தலைவர் அறிந்தால் அங்கிருந்தே மிரட்டல் வரக் கூடும். 'என்னை ஆதரித்து எழுதினுல் நடக்கிறதே வேறு' என்ற மாதிரி..

★ ★ ★

பொட்டம்மான் தலைவருக்கு வலை விரிக்கிருர் என்று எழுதியிருந்தேன். இவ்வாரம் பார்த்தால் தமிழீழ மக்கள் தலைவருக்கு விருது வழங்கினுர்களாம், தலைவருக்குப் பதிலாக பொட்டம்மான் விருதைப் பெற்றுக் கொண்டார் என்று செய்தி வந்திருக்கிறது. முன்பு மாத்தயாவும் தலைவருக்கு பதிலாக எல்லாம் செய்தார். இந்தியாவில் இருந்து வந்த தேனிசை செல்லப்பாவுக்கு மண்முடிப்பு பரிசு எல்லாம் கொடுத்தார். பொன்முடிப்பு கொடுக்கிற மாதிரி.. மண் முடிப்பு.. நடந்தது என்ன? மாத்தயா மண்ணேடு மண்ணுகிருர். இன்று பொட்டம்மான் விருது பெறுகிருர். எங்கே போய் முடியுமோ?

★ ★ ★

மாத்தயா போலவே பாலஸ்தீன விடுதலை இயக்கத்திலும் சமீபத்தில் ஒரு இஸ்ரேலிய உளவாளி ஒருவரைப் பிடித்து மரண தண்டனை கொடுத்தார்கள். அரபாத்தின் நெருக்கமான உதவியாளரை வளைத்த இஸ்ரேல் அவர் மூலம் பலஸ்தீன இயக்கத்தின் உயர்மட்டங்களின் சகல விடயங்களையும் அறிந்து வந்தது. அரபாத்தின் கதிரைக்கு மேலே கமெரா கூடப் பொருத்தப பட்டிருந்ததாம். இதன் மூலம் சமீபத்திய சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் என்ன பேசப் போகிறது, என்ன நிபந்தனைகளை முன் வைக்கப் போகிறது என்பதை இஸ்ரேல் முன் கூட்டியே அறிந்திருக்கக் கூடிய சாத்தியம் உண்டாம். உண்மையாக ஒருவர் தன் இனத்தை இவ்வாறு காட்டிக் கொடுத்திருந்தால் அது தவறு.

ஆனுல் இந்த தகவலை பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு தெரிவித்தது பிரெஞ்சு உளவுப் பிரிவு. இந்த பிரெஞ்சு உளவுப் பிரிவு இஸ்ரேலுடன் நெருக்கமானது. அப்படியாயின் ஏன் இந்த தருணத்தில் இதை வெளிவிட வேண்டும்? ஒருவேளை பலஸ்தீன மக்கள் மத்தியில் அரபாத் பற்றி ஒரு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதற்காக இருக்குமோ? இது கூட இஸ்ரேலின் சதி என்று தான் கருதப்படுகிறது.

இதைப் போலத் தான் மாத்தயாவின் கதையும்.. உலகத்தமிழர் உத்தியோகபூர்வமாக மாத்தயா மீது விசாரணை என்றிருக்கிறது. விசாரணை நடக்கும் போதே இவ்வாருன குற்றங்களுக்கு மரண தண்டனை தான் என்றும் எழுதியிருக்கிறது. பாவம் பேபி சுப்பிரமணியம்.. தலை தப்பியது 'தம்பிரான் புண்ணியம் என்று இருப்பார். கொஞ்ச நாள் பிரதித் தலைவராக இருந்து அரபாத் மாதிரி இடுப்பில் துப்பாக்கியோடு போஸ் கொடுத்தார். கடைசியில் ஆளையே காணும்...

எம்.ஜி.ஆரும் இப்படித்தான். . கீழே இருப்பவர்களை மோத விட்டுக் கொண்டிருந்தார். அவர்கள் தங்களுக்குள் 'யார் தலைவருக்கு விசுவாசமானவர்கள்' என்றுமோதிக் கொண்டிருக்க, வாத்யார் அடிக்கடி ஆட்களை மாற்றிக் கொண்டிருந்தார். இதுதான் divide and rule..

★ ★ ★

முன்பு ராஜீவ் கொலையில் பொட்டம்மானை குற்றம் சாட்டிய போது பொட்டம்மான் என்பவர் இயக்கத்தில் இல்லை என்று மாத்தயா சொன்னுர். இன்று பிரதித் தலைவர் என்ருெரு பதவி இல்லை என்கிருர்கள். பொட்டம்மான் சென்ற ஜீப் என்று கூறி உள்ளூர் உளவுத் தலைவர் பொற்கோ சென்ற ஜீப்பிற்கு குண்டெறிந்தார்களாம்.

இந்த பொற்கோ முன்பு தோலகட்டி மௌனசபையில் உள்ள குருமடத்தில் கொஞ்சக் காலம் பயின்றவராம். இங்கே நெல்லிரசம் விற்கிற அந்த தோலகட்டி மடம் தான். இவரை உளவுத் தலைவராக போட்டதற்கு காரணம் இருக்கலாம். அங்கு குருமார்கள் மௌனமாக இருந்து தியானம் செய்வார்கள். அதுமாதிரி.. தமிழீழ மக்களும் மௌனமாக இருங்கள், இல்லா விட்டால் மௌனிக்கச் செய்வோம் என்பதாக இருக்கும்.

★ ★ ★

தலைவருக்கு தமிழீழ மக்கள் விருது, தலைவர் உளவுப் படையினருக்கு விருது... கனடிய ரமில்ஸ் ஆளுக்காள் முதுகு சொறிந்து கொள்ள விருது கொடுக்கின்ற பழக்கத்தை புலிகளும் கற்றுக் கொண்டு விட்டார்கள். இனியென்ன? மக்களுக்கு தலைவர் விருது, தலைவருக்கு மக்கள் விருது..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழ்க. அது சரி.. இந்த தமிழீழ மக்கள் யார் என்பதை ஒருக்கா கண்டுபிடிக்க வேண்டும்

★ ★ ★

தங்களை 'அனுபவம் வாய்ந்த பத்திரிகையாளர்கள்' என்று அழைத்துக் கொள்வதில் இங்கே சிலருக்கு பெருமை... இருபது வருடம் பத்திரிகையுலகில் அனுபவம் வாய்ந்தவர்கள் என்று மார் தட்டிக் கொள்கின்றார்கள். இந்த 'அனுபவம் வாய்ந்த பத்திரிகையாளர்கள் எல்லாம் என்ன செய்கிறார்கள் என்று தெரியும். எந்தக் காலங்களில் யார் அதிகாரத்தில் இருக்கிறார்களோ, அவர்களின் வால் பிடித்தல்... சுதந்திரக் கட்சியை ஆதரித்து பின்னர் புலி வால் பிடித்தவர்களையும் தெரியும். மாத்தயாவுடன் நெருக்கமாகி பின்னர் தலைவருக்கு சாமரம் வீசுபவர்களையும் தெரியும்.

யாழ்ப்பாணத்தில் கண்டிப்புக்கு பெயர் போன இரசாயனவியல் ஆசிரியர் ஒருவர் எனக்கு சொன்ன கதை தான் ஞாபகம் வருகிறது. எமன் ஒரு தடவை கயிறு கொடுத்தானாம்.. அது தான் பாசக்கயிறு. மூன்று பேர் அமுக்கப்பட்டார்கள். ஒருவர் சாமியார். இன்னொருவர் கோயில் தொண்டர். இன்னொருவர் டாக்ஸி ட்ரைவர். மூவரும் இறந்து எமலோகம் சென்றால் சித்திரபுத்திரன் வழியில் மறித்து இவர்களின் விசாவைக் கேட்டிருக்கிறார். எமன் கொடுத்த விசாவைக் காட்டி முடிய.. என்ன செய்தீர்கள் பூலோகத்தில்? என்ற கேள்வி.

நான் ஐம்பது வருசம் சாமியாராய் இருந்தேன்!

அப்படியா! ஓரமாய் நில்லு!

நான் முப்பது வருடம் கோயில் தொண்டராய் இருந்தேன்.

அப்படியா! ஓரமாய் நில்லு!

நான் ரெண்டு வருசம் டாக்ஸி ட்ரைவராய் இருந்தேன்.

அப்படியா! உடனே சொர்க்கத்துக்கு போ!

இதைப் பார்த்த தொண்டருக்கும் சாமிக்கும் கோபம். சித்திரபுத்திரனின் சேட்டில் எட்டிப் பிடித்து 'என்னையா, கடவுளை நினைவாக இருந்த எங்களை ஓரங்கட்டியிட்டு அவனைப் போய் சொர்க்கத்துக்கு அனுப்பிறியே!

பொறுங்கப்பா! நீங்க இத்தனை காலத்தில் செய்த தொண்டால் யாருமே கடவுளை நினைக்கவில்லை. இவன் ரெண்டு வருசம் டாக்ஸி ட்ரைவராய் இருந்திருக்கிறான். இவன் ஓடிய ஓட்டத்தில் காருக்குள்ளே இருந்தவர்களும் ரோட்டில் நின்றவர்களும் ஐயோ! கடவுளே என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கடவுளை நினைத்திருக்கிறார்கள். உங்களால் முப்பது வருசம் செய்ய முடியாததற்கும் மேலாக இவன் ரெண்டு வருசத்தில் செய்திருக்கிறானே..

அதுதான்.. நீ எவ்வளவு காலம் செய்கிறாய் என்பதல்ல பிரச்சனை, என்ன செய்கிறாய் என்பது தான் பிரச்சனையே. மறுபிரசுரம் செய்தால் மூலம் குறிப்பிடவேண்டும் என்ற அடிப்படை மரபை இந்த இருபது வருடத்தில் தெரிந்து கொள்ள முடியாவிட்டால்...?

★ ★ ★

சமீபத்தில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதை நினைவு கூர்ந்து சமீபத்தில் ரொறன்ரோவில் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. தாயகம் உட்பட தொடர்பு சாதனங்களும் தேடகம் உட்பட சில அமைப்புகளும் சேர்ந்து கூட்டாக ஒழுங்கு செய்திருந்தன. ஆனால் தேடகம் மட்டுமே இந்த கூட்டத்தை ஒழுங்கு செய்த மாதிரி தேடகத்தை தனித்து கடுமையாக பத்திரிகை ஒன்று விமர்சிக்கிறது. தேடகத்தை 'பொறுக்கி' எடுத்து விமர்சிப்பதற்கு காரணம் உண்டு. கூட்ட அழைப்பாளர்களில் தேடகம் போலவே, நான்காவது பரிமாணம், தமிழோசை போன்றனவும் அழைப்பாளர்களாக இருந்தன. தமிழோசை தந்திரமாக தான் வெளியிட்ட விளம்பரத்தில் தனது பெயரை நீக்கிக் கொண்டது. பொதிகைக்கு இருக்கிற துணிச்சல் கூட பரிமாணத்திற்கு இல்லாமல் போய் விட்டது. அத்துடன் விமர்சகரைப் பிடித்து தங்கள் சஞ்சிகை புலிகளுக்கு எதிரானது அல்ல என்றும் போட்டாகி விட்டது. ஏன் தாயகம் கூட அழைப்பாளர் வரிசையில் இருந்ததே. தாயகத்தையும் இந்தக் கேள்விகளைக் கேட்டிருக்கலாமே.. (இந்த அலிக்கு 'மணி' கட்டியது யாரோ?)

முஸ்லிம்களை மீளக் குடியமர்த்தும்படி கேட்டு என்ன செய்யப் போகிறீர்கள், புலிகள் குடியமர்த்தா விட்டால் கம்பத்தில் கட்டுவீர்களா என்ற மாதிரி 'விசர்மனங்கள்'. (இவை விமர்சனம் அல்ல). என்னம்மா கண்ணுகளா? ஜூலை கலவரத்தின் பத்தாண்டு நினைவை ஒட்டி நியூ யோர்க் வரை சென்று ஆர்ப்பாட்டம் செய்தீர்களே. . என்ன ஐ.நா தலையிட்டு விட்டதா? அல்லது குண்டுவீச்சு நிறுத்தப் பட்டதா? கிட்டுவுக்காக இந்தியாவை கண்டித்து ஊர்வலம்.. என்ன இந்தியா மன்னிப்புக் கேட்டு விட்டதா? அடிப்படை தார்மீகக் கடமை ஒன்றிருக்கிறது. அதைச் செய்கிறோம்.

'ஏதோவொரு தேவை, அல்லது அவசியம் அல்லது கட்டாயம் புலிகளுக்கு இருந்திருக்கவேண்டும், புலிகள் சொன்ன காரணத்துக்கும் அப்பால் பகிரங்கப்படுத்த முடியாத அல்லது ராஜந்திர நடவடிக்கைக்கு ட்பட்ட... என்று கூறுகின்ற இந்த விமர்சகர்கள் எல்லாம் தங்களுக்கு புரியாத ஒரு விடயத்துக்காக இவ்வளவு வக்காலத்து.. தெரிஞ்சதைச் செய்யுங்கப்பா. நொண்டிச்சாக்குகளைப் 'பொறுக்கி' எடுக்காதீங்க. நீங்கள் மேற்சொன்ன காரணங்களால் தான் வடக்கிலும் சிங்கள அரசு குண்டு போடுகிறது என்று வைத்துக்கொள்ளுங்களேன். 'ஏதோவொரு அவசியம், தேவை.. கட்டாயம்' சிங்கள அரசுக்கும் இருக்காமலா போய் விடும்?

முஸ்லிம்களின் நிலங்களைப் பறிக்கும் புலிகளை ஆதரிக்கின்ற உங்களுக்கு கிழக்கில் தமிழர்கள் வெளியேற்றப்பட்டு சிங்களவர்கள் குடியேற்றப்படுவதை எதிர்ப்பதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

இங்கேயுள்ள முஸ்லிம் இளைஞர்கள் சிலர் தொடர்பு கொண்டு அதிருப்தி தெரிவித்தார்களாம். 'வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் சொத்துக்களுக்கு கயிறு கட்டிப் பாதுகாப்பு' என்று செய்தி வெளியிட்ட காரணத்துக்காக இருக்கலாம்.

கூட்டத்தில் பேசிய முஸ்லிம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சட்டத்தரணி ஒருவர் பேசிய கருத்துக்கள் பலருக்கு உடன்பாடானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதைக் கூறக் கூடிய ஜனநாயக நிலைமை அன்று இருந்திருக்கிறது. (இதற்காக பயந்து கொண்டு 'மெய்பாது காவலர்களுடன்' வர வேண்டிய அவசியம் அவருக்கு இருக்கவில்லை) மற்றவர்கள் கூட்டம் நடத்தினால் கூட போய் குழப்புகின்ற மாவீரர்கள் நிறைந்த நிலையில், அழைப்பாளர்களின் கருத்துக் களுக்கு முரணாகக் கூட ஒருவரால் கருத்து தெரிவிக்க முடிகிறது என்றால் அதுதான் ஜனநாயகம்.

தங்கள் மீது தாக்குதல் நடந்த போதே குரல் கொடுக்க முடியாமல் வீரகேசரியிலிருந்து மறுபிரசுரம் செய்யும்போது முஸ்லிம்கள் பிரச்சனையில் நியாயமாக குரல் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது தான். அப்போதெல்லாம் இந்த விமர்சனப் பெருந்தகைகள் ஒடி ஒளிந்தவர்கள் தானே. கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கல்லெறியாதீர்

★ ★ ★

புலிகள் மாத்தயா விடயத்தில் எப்படி திட்டமிட்டு பிரசாரம் செய்கிறார்கள் என்று எழுதியிருந்தேன். முதலில் மக்கள் மத்தியில் ஒரு நம்பகத்தன்மையை ஏற்படுத்த முதலில் உலகத்தமிழரில் செய்தி வெளியிட்டிருந்தால் பிரச்சனை. எனவே 'நடுநிலைப் பத்திரிகை' ஒன்றிற்கு செய்தியை 'லீக்' பண்ணுவது... அது மக்கள் மத்தியில் ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். பின்னர் சாவகாசமாக உலகத்தமிழர் அந்த செய்தியை ஊர்ஜிதம் செய்யும். விசாரணை நடக்கிறதாம்.. விசாரணையின் போது 'நிருபிக்கப்படும் வரையில் சுற்றவாளி, என்பது போய் 'சுற்றவாளி என்பதை நிருபிக்கும்' பொறுப்பு மாத்தயாவிடம். தண்டனை ஏற்கனவே முடிவாயிற்று. இனிமேல் தான் விசாரணை.

'அனுபவம் வாய்ந்த பத்திரிகையாளர்களை' புலிகள் எப்படி பயன்படுத்துகிறார்கள் பார்த்தீர்களா?

புலிக்களின் ஜனநாயக கட்சி கலைக்கப்பட்டது மாத்தயாவின் அதிருப்திக்கு காரணம் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டிக்கிறது. ஆனால் ஏன் கட்சித் தலைவரை புறக்கணித்து தலைவர் தான்தோன்றித்தனமாக தீர்மானம் எடுத்தார் என்பது பற்றி விளக்கம் எதுவும் இல்லை. மக்களுடன் மாத்தயா நேரடியாக பழகும் சந்தர்ப்பம் இருப்பதால் மாத்தயாவுக்கு ஆதரவு பெருகி தனக்கு ஆபத்தாக முடியும் என்ற பயமா? ஜனநாயகம் போன்ற விடயங்களை மக்கள் அறிந்து கொண்டால் மக்களுக்கு ஜனநாயகம், தேர்தல், வாக்களிப்பு போன்றவற்றில் ஆர்வம் வந்தால் தலைமைக்கு ஆபத்து என்ற பயமா? சரி, இலங்கை இராணுவம் மீண்டும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினால் இந்தக் கட்சி உறுப்பினர்கள் 'கட்சி மாறக்கூடும்' என்ற பயமாம். ஆகா. இதன் மூலம் யாழ்ப்பாணத்தை மீண்டும் இராணுவம் கைப்பற்றக் கூடும் என்ற பயம் தலைவருக்கு இருந்திருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறார்களா?

சரி, மாத்தயா ஒதுக்கப்பட்டதால் தான் இந்திய உளவுப்படை அதில் தலையை நுழைக்க முடிந்தது என்பதை தலைமை ஏற்றுக் கொண்டால், மாத்தயாவுக்கு தகுந்த பொறுப்பு வாய்ந்த பதவியைக் கொடுப்பதன் மூலம் அதைத் தவிர்த்திருக்கலாமே. ஏன் மாத்தயா அப்படியாயின் இதுவரை காலமும் கிட்டுவுக்கு குண்டெறிந்த விடயத்தை கண்டும் காணாமல் இருந்ததன் காரணம் என்ன?

★ ★ ★

உலகத்தமிழரில் இன்னொரு ஹாஸ்யமும் உண்டு. 'எவ்விதத்திலேனும் புலிகள் இயக்கத்தை உள்சதி மூலம் உருக்குலைக்க வேண்டும் என்று இந்திய மத்திய திட்டமிட்டு' 'மாத்தயாவை தனது கருவியாக்க முடிவெடுத்தது' என்று உலகத்தமிழர் கூறுகிறது. இன்னொரு பக்கத்தைப் புரட்டினால் 'இந்திய அரசும் அதன் உளவு நிறுவனங்களும் கடந்த கால கசப்பான சம்பவங்களை மறந்து புலிகளுடன் உறவைப் புதுப்பித்து தமிழீழ மக்களின் நேச சக்தியாக மாறுவதே இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும் பாதுகாப்

32ம் பக்கம் பார்க்க..

*This newspaper*
*is published by*
**Georgicka communications.**
*A member of*
*Ethnic Press Council Of Canada.*

*Editor: George R.Ckrhushchev*

*P.O.Box 1031, Station "F",*
*Toronto, Ont, M4Y 2T7.*

*Tel: (416) 920 9081*
*Fax: 963 5738*
*E mail:71650.3216*
*@Compuserve.com*

**இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.**
**ஆசிரியர்;**
**ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்**

*உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.*

*ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.*

## தாயகம்
## சந்தா விபரம்

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள்**
**ஆறு மாதம் US$60**
**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்


★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகறெட்,
TTC Tickets, Lottery Tickets

## ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

## ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

# மாபெரும் மலிவு விற்பனை

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி, கடலுணவு, மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள்
(இடியப்பம், தோசை, அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்
அனைத்தும் மலிவுவிலையில்

# SIVA'S TRADING CO LTD

3852 Finch Ave East (Kennedy/Finch)
Tel:(416) 321 2739

# P.S.S.T

5210 Finch Ave East #23
(Finch/Middlefield)
Tel:609-0141

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

Video Transfer (Any system) $8.99

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்